பதினாறு பக்கங்கள் — விலை ரூபா நான்கு

★ ஜேர்மன்
★ பிரான்ஸ்
★ சவூதி
பிரயாண ஒழுங்குகள்
M. P. Lingams
764, Hospital Road,
JAFFNA

வார
# முரசொலி

★ லண்டன்
★ சுவிஸ்
★ ஹொலண்ட்
பிரயாண ஒழுங்குகள்
M. P. Lingams
764, Hospital Road,
JAFFNA

RR
8/8/89

முரசு 03 ஒலி 206 ஞாயிற்றுக்கிழமை 06 - 08 - 1989 ஆடி 22 முஹர்ரம் 03

### இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே மீண்டும்

# பேச்சுவார்த்தைச் சுமுகநிலை இனி உருவாகச் சாத்தியமில்லை

## ஜனாதிபதியும் தூதுக்குழுவும் யோசனைகளை ஆராய்ந்தனர்

**கடந்தவாரம் புதுடில்லியில் இடம்பெற்ற இந்திய - இலங்கை உயர்மட்டப் பேச்சுக்களின் விபரங்களை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன ஜனாதிபதியிடம்தெரிவித்தார். அமைச்சரவையுடன் ஆலோசனை நடாத்திய பின் ஜனாதிபதி முடிவை அறிவிப்பார்**

படைவிலகலுக்காக இந்தியா தெரிவித்துள்ள புதியயோசனைகளைப்பற்றி அவர் ஜனாதிபதியுடன் ஆலோசனை நடாத்திய பின்னர் மீண்டும் புதுடில்லி சென்று இரண்டாம் கட்டப் பேச்சில் கலந்து கொள்வார் என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைத்தரப்பில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன மீண்டும் புதுடில்லி செல்வதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை

இப்பேச்சுக்கள் கொழும்பில் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என ஏஜென்ஸி செய்திகள்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் அத்துலத்முதலி பி. பி. ஸிக்கு பேட்டி

## வடகிழக்கில் சகல தரப்பினரும் யுத்தத்தை நிறுத்தவேண்டும்

வடக்கு கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு இலங்கை அரசோடும், அப்பகுதி மக்களோடும் சம்பந்தப்பட்ட விடயம் என உணவு கூட்டுறவு விவசாய அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுக்காலை பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இங்குள்ள சகல தரப்பினரும் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டால் மட்டுமே பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் எனக் கூறிய அமைச்சர் வடகிழக்கில் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் ஒரு

→ 16ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கு பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளை இம்மாத நடுப்பகுதியிலிருந்து மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது தென் பகுதி நிலைவரங்கள் காரணமாக சகல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. எனினும் இங்குள்ள பாடசாலைகளை மூட

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வல்வையில் மரணமானோரில் அடையாளம் காணப்பட்டோர்

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று ஓரளவு அமைதி நிலவியது ஊரடங்குச் சட்டமும் தளர்த்தப்பட்டதால் ஆலயங்களில் தஞ்சம் புகுந்த மக்கள் தத்தம் வீடுகளுக்குச்சென்றனர்.

இப்பகுதியில் பல வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டதால் உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை சம்பவத்தில் காயமடைந்தோர் விபரம்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டோர் விபரம்: பொன்னையா இன்பராஜா (42), என். ஞானம்பிகை, எ.சிற்றாதாதேவி(40), சுப்பிரமணியம் முத்துவேல் (24), எஸ். மாணிக்கரத்தினம் (75), ஆர். வசந்தாதேவி(31), என் இந்திராதேவி(28), ஆர். இரத்தினதேவி (06).

இவர்கள் அனைவரும் பிரான்ஸ் வைத்தியக்குழுவால்

→ 16ஆம் பக்கம் பார்க்க

## மழைபெய்தால் குடை பிடித்து பயணம் செய்யும் பஸ்

மழை பெய்தால் பயணிகள் நனையும் பஸ் வண்டியொன்று யாழ். வவுனியா சேவையில் ஈடுபடுகின்றது. வவுனியா டிப்போவுக்குச் சொந்தமான 23 ஸ்ரீ 8834 என்ற இலக்கமுடைய பஸ்ஸே இவ்வாறு ஈடுபடுகிறது. இந்த பஸ்ஸின் ஒரு பக்கத்தில் இடைவிட்டு இடைவிட்டு மூன்று அடி நீளமான கண்ணாடியற்ற யன்னல் காணப்படுவதாலும்,

16-ம் பக்கம் பார்க்க

## இன்று நல்லூர் கொடியேற்றம்

(கொழும்புத்துறை)

''வழிபாட்டிற்கு வரும் பக்தர்களையும், ஆலயப்புனிதத்தையும் பாதுகாக்க வேண்டியது தொண்டர்களின் முக்கிய பணியாகும், ஆலயத் தொண்டர்கள் தமது பொறுப்பை உணர்ந்து பக்தர்களுக்கு உகந்த முறையில் சேவையாற்ற வேண்டும்'' என்று யாழ் மாநகர ஆணையாளர்

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கு மின்தடையால் கொழும்பில் அரிசி அதிக விலை

வடக்கு கிழக்குப்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள மின் விநியோகத் தடையினால் இப்பகுதிகளில் பல அரிசி ஆலைகள் இயங்கவில்லை.

இதனால் இப்பகுதிகளில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்லும் அரிசியின் அளவு குறைந்துள்ளது.

இதனால் கொழும்புப்பகுதியில் தற்போது அரிசி விலை அதி

→ 16ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் வழங்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் தற்போதுள்ள மின்தடையால் நோயாளர்களும், டாக்டர்களும், ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரவு சிகிச்சை மண்ணெண்ணெய் விளக்கில் நடைபெறுகிறது.

மிகவும் சிரமத்தின் மத்தியில் மாவட்ட வைத்திய அதி

— 16ஆம் பக்கம் பார்க்க

## சாராயத்தின் விலை அதிகரிப்பு

அரசாங்க வடிசாலைக்கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு ரக சாராயத்தின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எக்ஸ்ரா ஸ்பெஷல் சாராயம் ஒரு போத்தல் 69 ரூபாவி

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## வட கிழக்கு முதலமைச்சர் இந்திய அரசு பேச்சு

இந்திய அரசு உயர்மட்டக் குழுவினருடன் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தற்போது பேச்சு நடத்துவதாக அகில இந்திய வானொலி நேற்று தெரிவித்தது

### இந்தியப் பாராளுமன்றத்தில் இணை அமைச்சர் தகவல்:

# இந்தியாவுக்குஎதிரானபிரசாரத்தை இலங்கை மேற்கொண்டுள்ளது

இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்வதற்காக இலங்கையில் புதிதாக சில வானொலி ஒலிபரப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவின் தகவல்துறை இணை அமைச்சர் கே. கே. திவாரி இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டு ஒலிபரப்புக்கள் இந்தியாவை நோக்கி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சொன்ன அவர். இந்திய வானொலியிலும் இலங்கைக்காக தினமும் பன்னிரெண்டு மணிநேர ஒலிபரப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## செல்வனும் தெனாலிராமனும்

ஒரு நாள் தெனாலிஇராமன் ஒரு பணக்காரனின் வீட்டுக்கு அவனுடன் நடந்து சென்றான். தெனாலியின் கால் பாதையில் உள்ள அழுக்கால் அழுக்கடைந்து விட்டது. பணக்காரன் தெனாலிக்குக் காசு கொடுப்பதாகக் கூறியதால் தான் தெனாலி பணக்காரனோடு போக வேண்டி வந்தது. ஆனால் பணக்காரனோ ஒரு உலோபி அவன் தெனாலியின் காலில் இருந்த அழுக்கைக்காரணம் காட்டி நீ என்னிடம் பணம் வாங்க வேண்டுமானால் அழுக்குக் காலுடன் இருக்கலாகாது. ஆனால் என் கிணற்றிலும் உனது காலைக் கழுவ முடியாது என்று கூறினான்.

பணக்காரன் உலோபி என்பதை அறிந்த தெனாலி நான் போவது நல்லது என்று கூறிவிட்டு வீடு சென்றான். ஆனால் அவன் மனம் பணக்காரனைப் பழி வாங்க வேண்டும் என துடித்தது. அதனால் அவன் தனது பூந்தோட்டத்தில் பல விதமான அழகான ரோஜாச்செடிகளை நாட்டினான். பின்தோட்டப்பாதையில் கொஞ்ச இடத்தைத் தோண்டினான். தோண்டிய குழி தெனாலியின் கழுத்து வரை இருந்தது. பின் அதற்குள் சேறுகளையும் அழுக்குகளையும் போட்டு வைத்தான். அதனைப் பச்சைப் புல்லால் மூடினான்.

அடுத்த நாள் அவன் தோட்டம் மிகவும் அழகாக இருந்தது. காரணம், அவனது தோட்டத்திலிருந்த ரோஜாச் செடிகள் அழகாகப் பூத்திருந்தன. இதனைக் கண்ட பணக்காரன் தோட்டத்தைப் பார்க்கலாமா என்று தெனாலியிடம் கேட்டான். இராமனும் ஆம் என்று பதில் கூறினான்.

பணக்காரன் பார்த்துக் கொண்டு சென்ற போது தெனாலியின் பொறிக்குழியுள் விழுந்து விட்டான். அவனது கழுத்தைத் தவிர உடம்பெல்லாம் சேறு அதனால் எழுந்து வெளியில் வரவும் முடியவில்லை. அப்போது தெனாலி கூறினான். ஆ! பரிதாபமே நீர் இந்தச் சேறுடன் எனது தோட்டத்தைப் பார்க்க முடியாது. எனதுகிணற்றில் கழுவவும் முடியாது. ஆனால் என்னிடம் ஒரு கூர் வாள் ஒன்று உண்டு. அதனால் உமது கழுத்தை வெட்டிக் கொண்டு சென்று உமது வீட்டில் வைக்கின்றேன் என்று கூறினான் தெனாலி. பணக்காரன் தெனாலிக்கு தரவேண்டிய பணத்தைத் தருகிறேன் என்று கூறிக் கெஞ்சியதால் தெனாலி அவனைச் சேற்றிலிருந்து தூக்கி வெளியில் விட்டான்.

த.பிரபாகரன்
அங்கத்தவர் இலக்கம் 23

## கோயில்

மால் மருகன் கோயில்
மனங் கவர்ந்த கோயில்
நாள் தோறும் சென்று
நாம் வணங்கி நிற்போம்

எங்களூர்க் கோயில்
இருக்கும் நல்ல கோபுரம்
எங்கிருந்து பார்ப்பினும்
எழிலுருவம் தெரியுமே

மணி ஓசை கேட்குது
மால் மருகன் கோயிலில்
புனிதமணம் வீசுது
பூசை அங்கு நடக்குதே

நாத சுர ஓசை
நம்மை யெல்லாம் ஈர்க்குது
வேத கானம் ஒலிக்குது
வேலவனார் கோயிலில்

கரம்பனூர் ஷோபனாசர்மா
அங்கத்தவர் இலக்கம் 230

## தெரிந்து கொள்ளுங்கள்

இலங்கையின் தலைசிறந்த விஞ்ஞானி
—கலாநிதி சிறில் பொன்னம்பெருமா.
இலங்கையின் தலைசிறந்த ஓவியர்
—சேனக்க சேனநாயக்கா
இலங்கையின் தலைசிறந்த நாடகாசிரியர்
—பேராசிரியர், எதிரிவீரசரத்சந்திரா
இலங்கை சுதந்திர பொதுச்சேவை ஒன்றியத்தலைவர்
—கே. குகதாசன்.
இலங்கை சர்வோதய இயக்க ஸ்தாபகர்
—கலாநிதி ஏ.ரி.ஆரியரத்தினா.
பிரபல சிங்களத் திரைப்படப் பாடகர்
—தர்மதாச வால்பொல.
பிரபல சிங்கள சங்கீத மேதை
—டபிள்யூ டி. அமரதேவா.
பல்வேறு துறைகளிற் சாதனை நாட்டிய இலங்கையர்
—வி. எஸ் குமார் ஆனந்தன்.
இலங்கை ரெஸ்ற் கிரிக்கெட் அணியின் முதற் தலைவர்
—பந்துல வர்ணபுரா.
இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி வகித்த முதற் தமிழர்
—விபுலாநந்த அடிகள்.

தங்கேஸ்வரன் மாறன்




## சின்னஞ்சிறு சிட்டுக்களே!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குக் கல்வி அதிகாரி ஒருவர் வந்தார்; வகுப்பொன்றினுள் நுழைந்தார். கற்பித்துக் கொண்டிருந்தவர் கையிற் பிரம்புடன் நின்றார்.

'பிரம்பெதற்கு? ஓகோ! பிள்ளைகளை அடித்தா படிப்பிக்கின்றீர்! அக்கிரமம்!'— அதிகாரி அலறினார்; குதித்தார்.

பண்டிதர் சிரித்தார்; 'தற்பாதுகாப்புக்காக வெல்லோ தடி வைச்சிருக்கிறன்' என்றார்.

மாணவர்கள் எப்போதாவது தம்மைத் தாக்கினாற் தம்மைப் பாதுகாக்கத்தான் அந்தப் பிரம்பைத் தாம் வைத்திருக்கிறார் என்று பண்டிதர் சொல்கிறார் என்பது புரிந்ததும் விழுந்து விழுந்து சிரித்தார் கல்வி அதிகாரி.

இப்படி வேடிக்கை பண்ணிய மனிதர் வேறு யாருமல்லர். இதோ! உங்கள் முன் காட்சியளிக்கும் திருஞானசம்பந்தத்தாத்தா தான் அவர்.

மட்டுவில் வே. திருஞான சம்பந்தர் இன்றும் வெளிவரும் இந்துசாதனம் இதழின் ஆசிரியராக அரும்பணி புரிந்தவர்.

சின்னஞ்சிறு சிட்டுக்களுக்கெனப்பாலபாடங்கள் முதலிய பாடப்புத்தகங்கள் பலவற்றைச் சைவபரிபாலன சபை சார்பிலே பதிப்பித்தவர்.

நாடகங்கள் பலவற்றில்



நடித்ததோடு பாதுகாபட்டாபிஷேகம் என்றோர் நாடகமும் எழுதியிருக்கிறார். உலகம் பலவிதக் கதைகள் வரிசையிற் கோபால நேசரத்தினம் முதலிய கதைகள் உள்ளன.

நீங்கள் பெரியவர்களானதும் இவற்றையெல்லாம் தேடிப்படித்துப் பாருங்களேன்!

## விழாக்களும் ஆண்டுகளும்

| | | |
|---|---|---|
| வெள்ளிவிழா | — | 25-வது ஆண்டு |
| பொன்விழா | — | 50-வது ஆண்டு |
| வைரவிழா அல்லது மணிவிழா | — | 60-வது ஆண்டு |
| பவளவிழா | — | 75-வது ஆண்டு |
| முத்துவிழா | — | 80-வது ஆண்டு |

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ..............................

வயது:- ..............................

பாடசாலையின் பெயர்:- ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

..................... திகதி
..................... பெற்றார் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

## தாயாரும் சகோதரரும்

யேசுநாதர் சனங்களோடு பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய தாயாரும், சகோதரரும் வெளியே நின்று அவரோடு பேசுவதற்கு வழி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

... ஒருவன் யேசுநாதரை நோக்கி, உம்முடைய தாயாரும் சகோதரரும் உம்மைத் தேடிக்கொண்டு வெளியில் நிற்கிறார்கள்' என்று கூறினான்.

...அவர் பிரதியுத்தரமாக, என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தமது சீடர் பக்கமாகக் கையை நீட்டிச் சுட்டிக்காட்டி,

இதோ என் தாயாரும் என் சகோதரரும். ஏனெனில், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறான்' என்றார்.

யேசுவின் திருவாய் மொழிகள்
பக். 49

## புறாவின் சுயசரிதை

நான் மிகவும் அழகான பறவை. நான் சிறிதாக இருக்கும்பொழுது தனிமையில் என்னை விட்டு விட்டு எனது தாயார் உணவு தேடப் போகும்பொழுது என்னை ஒரு சிறுவன் பிடித்து தன் வீட்டிற்குக் கொண்டு சென்றான்.

அவன் தனது தாயாருக்கும், தந்தையாருக்கும் காட்டிவிட்டு ஒரு கூண்டினுள் அடைத்து விட்டுச் சென்றான். நான் அந்தக் கூண்டினுள் இருந்து வளர்ந்து வந்தேன். அந்தச் சிறுவன் எனக்கு அடிக்கடி சாப்பாடு வைத்துக்கொள்ளுவான்.

நான் எனது தாயாரிடம் உண்பதுபோல இல்லை என நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தேன். ஒரு நாள் சிறுவன் என்னைப் பிடித்துக்கொண்டுவெளியே வந்தான். நான் அவனிடமிருந்து மெதுவாக நழுவி பறந்து சென்று ஒரு மரத்தில் இருந்தேன். அவன் என்னைப்பார்த்துக் கண்ணீர் வடித்தான். நானும் அனுதாபப் பட்டேன். ஆனாலும் எனக்குப் பெற்றோரிடம் இருந்து வாழும் வாழ்வு இல்லை எனக் கவலையுடன் பறந்துவிட்டேன்.

செல்வி யசோதா
சிவப்பிரகாசம்

## சிட்டு நகை

ஆசிரியர்:- டேய் ராமு, ஷாஜகானைப் பற்றிஇரண்டு வார்த்தையில் பதில்சொல்!
ராமு:- இறந்து, போனார்!
ஆசிரியர் – !......!

(படிப்பறிவற்ற தந்தை தன் மகனிடம்)
தந்தை:- கம்பர் ஏன் காட்டிற்குப் போனார்?
மகன்:- சீதையைத் தேடி!
தந்தை:- ......!

ஒருவர்:- உங்கடை மகளுக்கு ஆயிரம் ஆயிரமாய் சீதனம் கொடுக்கிறீர்களே மாப்பிள்ளை என்ன வேலை?
மற்றவர்:- அவரா? ஆள் தேங்காய் வியாபாரி!

# தங்க ஏலாதி

கா. சுப்பிரமணியம்

மார்புநோய் சிகிச்சை நிலையம் ஆயுள்வேத வைத்தியர் பரமலிங்கம், ஆசிரியர் வேதவனம், விதானையார் விசுவலிங்கம் மற்றும் பலர்.
வேதவனம்;(வைத்தியரிடம்) உங்களை எங்கோ பாத்த மாதிரிக்கிடக்கு.
பரமலிங்கம்; ஓமோம்! என்னைத் தெரியாதவை இல்லை. நான்தான் வைத்தியர் பரமலிங்கம். யாழ்ப்பாணத்திலை அகத்தியர் பரம்பரையிலை நாங்கள் மட்டும்தான் வைத்தியம் செய்யிறது. நாகவனப் பரியாரியார்எண்டு சொல்லுவினம் அவர்தான் நான்.
விசுவலிங்கம்: அப்ப இந்த தொய்வு, முட்டு, கரப்பன் வருத்தங்களுக்குப் பேர்போன பரியாரியார் எண்டு சொல்லுங்கோ.
பரமலிங்கம்: சரியாச் சொன்னியள். இந்த இலங்கையிலை வேறை ஆர் இருக்கினம். அந்த நாளிலை வெள்ளைக்காரக் கவுண்மேந்து ஏஜண்டுக்கே வைத்தியம்செய்து பாராட்டுப் பெற்ற பரம்பரை.
வேதவனம்: பரம்பரைப் பெருமை பேசுறதிலை எங்களை விட உலகத்திலை வேறை ஆர் இருக்கினம்.
விசுவலிங்கம்; எங்கடை பரம்பரை தலைமுறை தலைமுறையா விதானைவேலை பார்த்த குடும்பம்.
வேதவனம்: ஒழுங்கா வெள்ளைக்காரனுக்குப் பந்தம் பிடிச்ச பரம்பரை எண்டு சொல்லுங்கோ.
விசுவலிங்கம்: உமக்கு உந்த விஷயம் விளங்காது.
வேதவனம்: கரும்பலகையும், சோக்கட்டியும் தரட்டே விளங்கப்படுத்த.
பரமலிங்கம்: மாஸ்ரரின்ரை பரம்பரையிலை சொல்ல ஒண்டும் இல்லைப்போலை.
வேதவனம்: என்ரை பரம்பரைச் சரித்திரத்தை நான் படிக்கேல்லை அதாலை தெரியாது.
விசுவலிங்கம்: அப்ப பரம்பரை தெரியாதெண்டு சொல்லுங்கோ.
வேதவனம்: தெரியாட்டி என்ன? பரம்பரை இல்லாமல் ஆரும் பிறந்திருக்கேலாது பாருங்கோ
வேதவனம்! அது பரம்பரை வழுக்கை.
பரமலிங்கம்: (சிரித்துக் கொண்டே) அப்ப மாஸ்ரரின்ரை பரம்பரை வழுக்கைப் பரம்பரை போலை
வேதவனம்: இப்பத்தையில

விசுவலிங்கம்: பரியாரியார் உங்களை ஒண்டு கேக்கவேணும் மாஸ்ரரோடை கதைச்சால் விசர்தான் வரும்.
வேதவனம்; நாகவனப் பரியாரியார் பரம்பரை விசருக்கும் வைத்தியம் செய்யிறதெண்டு கேள்வி.
பரமலிங்கம்: மாஸ்ரருக்கு எங்கடை பரம்பரை பற்றி நல்லாத் தெரியும்போலை. சன்னி, வாதம், சொறி, சிரங்கு, கான்சர் இவை எல்லாத்துக்கும் எங்களிட்டை மருந்திருக்கு.
விசுவலிங்கம்: இப்பவும் நீங்கள் வைத்தியம் செய்யிறனியளோ
பரமலிங்கம்: இப்ப ஆர் எங்களிட்டை வரினம் எல்லாரும் கவுண்மேந்து ஆஸ்பத்திரிக் கெல்லே போகினம். ஆரும் உங்களைப்போலை விசயம் தெரிஞ்சவை வந்தால்ச் சரி.
விசுவலிங்கம்; எண்ணை, கிண்ணை காச்சிற வழக்கம்...
வேதவனம்: புளியெண்ணை நல்லாக் காச்சுவினம் உள்ளித்தைலம் தான் இவையின்ரை இஸ்பெசல்.
விசுவலிங்கம்: மாஸ்ரர் புளி எண்ணையே வைக்கிறது
வேதவனம்: நான் ஒரெண்ணையும் வைக்கிறேல்லை. ஐம்பது வயது ஒரு மயிரிலையெண்டாலும் நரை,கிரை கிடக்கோ பாருங்கோ
விசுவலிங்கம்; மயிரிருந்தாலெல்லோ நரைக்க.

ஆராச்சியளிலை வழுக்கைத் தலையருக்குத் தானும் ஆண்தன்மை இருக்குமெண்ணினம்
பரமலிங்கம்: உதுக்கொரு எண்ணை தாறன் விழுந்த மயிரெல்லாம் திரும்ப முளைக்குதோ இல்லையோ பாரும்.
வேதவனம்; புளியெண்ணை இல்லைத்தானே.
விசுவலிங்கம்: அது கிடக்க இந்தத் தொய்வு, முட்டு வருத்தத்துக்'கு நானும் எல்லா இடமும் அலைஞ்சுபோட்டன் ஒரிடத்திலையும் சரிவரேல்லை.
வேதவனம்: ஆருக்கு உங்களுக்கே வருத்தம்
விசுவலிங்கம்; என்ரை அப்புவுக்குத்தான் பாவம்! மெத்தக் கயிட்டப்பர்ருர். வயதும் போட்டுது.
பரமலிங்கம்: பாருங்கோ எங்கடை வாகடத்திலை உதுக்கு நல்ல மருந்திருக்கு. ஆனல் இப்ப ஆர் உதைக் கவனிக்கினம் இங்கிலிசு மருந்தெண்டால் வருத்தத்தைமாத்தாது. வேறையொண்டாக்கும். என்னட்டை வைத்தியம் செய்தவை இங்கிலிசு வைத்தியம் செய்து களைச்சுப்போனவை தான்.
வேதவனம்: வெட்டுக்கள் காயங்கள் போக மற்ற வருத்தங்களை மன வைராக்கியத்தாலை மாத்தலாம் எண்டு ஆராய்ச்சிக்காறர் சொல்லுகினமாம்.
பரமலிங்கம்; வைத்தியம் செய்யிறதெண்டால் நோய் நாடிஅதன் முதல் நாடி எண்டு வாதம், பித்தம் சிலேப்பனம் மூண்டும் சமனு எண்டு பாத்துத்தான் செய்ய வேணும்.
வேதவனம்: இப்பத்த ஆராச்சியிலை கிருமி வைரஸ் எண்டு சிலது தானும் நோயை உண்டாக்கிறதெண்டெல்லோ சொல்லினம்
பரமலிங்கம்: வாத பித்த சிலேபனத்தைச் சமப்படுத்திஞல் கிருமியளை அழிக்கும் சக்தி தன்னிலை வந்திடும் பாருங்கோ.
வேதவனம்: இப்பத்தான் பரியாரியார் உருப்படியான விசயம் ஒண்டைச் சொல்லியிருக்கிருர்.
விசுவலிங்கம்: மாஸ்ரர் நாகவனம் பரியாரி பரம்பரை எப்பவும் உருப்படியான விசயம் தான் சொல்லும் கண்டியளோ!வைத்தியமும்உருப்படியாத் தான் இருக்கும் எனக்கும் இந்தஇங்கிலிசுவைத்தியத்திலை நம்பிக்கை இல்லை...

வேதவனம்: மெய்யே பரியாரியார் உங்கடை அனுமானங்கள் என்ன,
பரமலிங்கம்: இஞ்சி, தேன், முலைப்பால், வெங்காயச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, வெற்றிலைச்சாறு, இப்பிடியெல்லாம் இயற்கையோடை ஒட்டினது தான்.
விசுவலிங்கம்: இப்ப சுடு தண்ணி அனுமானமும் உண்டு போலை.
வேதவனம்: அது பனடோல் அல்லாட்டி டிஸ்பிரின் எண்டால் தான். ஒரு பனடோல் ஆயுள்வேத வைத்தியரிட்டை அஞ்சு ரூபாவுக்கும் போகும்.
விசுவலிங்கம்: உதுக்கு விலைக் கட்டுப்பாடு இல்லையோ?
வேதவனம்: பொடிபண்ணினல் பிறகுகென்ன விலைக்கட்டுப்பாடு: பொடிபண்ற கூலி இருக்கே.
பரமலிங்கம்: உமக்குச் சேட்டையாயிருக்கு.
வேதவனம்: இப்ப இந்த நாட்டுப் பரியாரியாரெல்லாம் ரெற்ருரைசைக்கிளிலை உடைச்சுத் தூளாக்கித்தேனிலை குடுப்பினம். இப்பிடித்தூளாக்கிற கூலி 50 க்குச் சில வேளை ரூபா 500/- உம் வரும். இருமலுக்கு 2000/- முட்டுக்கு 3000/- இப்பிடி ரேட்.
பரமலிங்கம்: மருந்துச் சரக்கெல்லாம் சுடுவிலை மாஸ்ரர். வாற ஆக்களும் குறைவு: பின்னை என்னண்டு கட்டுபடியாறது.
வேதவனம்: வாற சில பேரிட்டை நல்லாக் கறந்து போடுறது தானே?
விசுவலிங்கம்: மாஸ்ரரின்ரை கதைக்கு உப்புப் புளி இல்லைக் கண்டியளோ
வேதவனம்: சித்தவைத்தியத்துக்கு உதுதானே பத்தியம்.
விசுவலிங்கம்: பரியாரியார் உவற்றை கதையை விடும். என்ரை அப்புவின்ரை முட்டு, இழுப்புக்கு நீங்கள் தான் வைத்தியம் செய்யவேணும்.
பரமலிங்கம்; தங்க ஏலாதி சாப்பிட்டால் 45 நாளிலை குணம் தெரியும். தங்கத்தை நீற்றி இடிக்கவேணும். செலவு கொஞ்சம் கூடத்தான்.
விசுவலிங்கம்: செலவைப் பற்றி யோசிக்கவேண்டாம்.
வேதவனம்: பரம்பரையானரிலை அடிச்ச காசு உப்பிடித்தான் செலவழியவேணும்.
விசுவலிங்கம்: ஊரிலை அந்த நாளிலை 3 பங்கு காணி எங்களுக்குத்தான் ஒரு காணியை வித்தாலும் அப்புவின்ரை வருத்தத்தை மாத்தவேணும்.
வேதவனம்; விதானையார் காணிவிக்கப் பரியாரியார் காணி வாங்குவர்.
பரமலிங்கம்: உவற்றை அலட்டலை விட்டுப்போட்டு வியாழக்கிழமை அப்புவைக் கொண்டு வாரும். வியாழன் நல்லநாள்.
வேதவனம்: கள்ளவியாழன்

11 ஆம் பக்கம் பார்க்க

# வாழும் வழி

## மனத்தக்க மாண்புடைமை [2]

சிவத்தமிழ்ச் செல்வி-தங்கம்மா அப்பாக்குட்டி

அத்திரி முனிவரின் மனைவிளக்கு அனசூயை அம்மையார் திருவும் தெளிவும் அமைந்த நற்குடும்பத்திற் பிறந்தவர். பெண்ணுக்குரிய நற்பண்புகள் நிறைந்தவர்; திருமகள். அத்திரி முனிவரின் தர்மபத்தினியானதும் தன் அலங்காரங்கள் அனைத்தையும் மூடைகட்டினர். தவக்கோலம் பூண்டார்; கணவனுக்கேற்ற மனைவியாக வாழ்ந்தார். வனத்திலே வானப்பிரஸ்தவாழ்வில் இவர் திளைத்தபோது சீதாபிராட்டியாருடன் இராம இலக்குவர் ஆசீர்வாதம் பெறவந்தனர். அழகும், இளமையும் ஒளிமுகமும் கொண்ட சீதாபிராட்டியை அனசூயை கண்டதும் அழகின் அழகைக்காண விழைந்து தான் மூடைகட்டி வைத்திருந்த ஆடை அணிகளைப் பிராட்டியாருக்கு அணிந்து அகமகிழ்ந்தார். அந்த அணிகலன்களே சீதாபிராட்டியாரைக் கண்டறிய உதவின. நல்ல பெண்மணியின் நல்லுள்ளம் நல்லதையே செய்ததை இதனுல் நாம் அறியலாம்.

கண்பார்வையற்ற திருதராஷ்டிரனுக்கு காந்தாரியை மணமுடித்தனர். கணவனைப் போலத் தானும் கண்பார்வையற்ற பெண்மணியாக இருத்தல் வேண்டித் தன் கண்களைக் கறுப்புத்துணியாற் கட்டி மறைத்துக் கொண்டாள் காந்தாரி. இராமபிரான் மரவுரி தரித்து தவக்கோலம் பூண்டு வனத்திற்குப் புறப்பட்ட போது, இராமன் இருக்குமிடமேஅயோத்திஎன்றெண்ணிச் சீதாபிராட்டியும் தவக்கோலம் பூண்டார்; உடன் சென்றுர்.

கணவனைக் கண்ணுகக் கொண்டு வாழ்பவளே நல்ல பெண்மணி. கணவன் எத்திறத்தனே அத்திறத்திலே தன்னையும் ஆக்கிக் கொள்ளும் பெண்மணி குடும்பநலப் பெண்ணுவள். 'ஆசை வளருமுள்ளம் பெண்; அறிவுவளருமுள்ளம் ஆண்' -- இது பண்டையோர் கருத்து. 'போதும் என்ற மனமே பூங்காவனம்!' ஆதலின் தன்குடும்பத்துக்குக் குளிர்நிழலைத்தருபவளே நல்ல பெண்மணியாகிருள். கணவன் வழிக்கு எதிர்நீச்சலிடாது பருந்தும் நிழலும் போற் பிரியாது வாழ்தலே நல்லவாழ்வு. கணவன் வழி மனைவி தன்னை ஆக்கிக் கொள்ளல் தமிழர் அறம். 'ஈசன் எத்திறம் ஈசுவரியும் அத்திறம்' என்ற சித்தாந்தப்பொருள் வாழ்வாங்கு வாழும் இந்த இல்லறத்தினின்றே தோன்றியது. அனசூயை, காந்தாரி, சீதை முதலிய பெண்ணினல்லார் இதற்குச் சான்ருவர்.

பழமை இருந்தநிலை பண்பானது. புதுமைக்கும்சோபை தருவது பழமை தான். அநுபவத்தில் விளைந்த கோதில்லா மாணிக்கம் பழமை. இந்தப் பழமையிலே விளைந்த பெண்மணிகளே புராணேதிகாச இலக்கியப் பெண்மணிகள். புராணேதிகாசங்கள் எதிர்மறைப் பெண்களைப் படைத்து உயர்நிலைப் பெண்மணிகளின் மேலாந்தரத்தை உள்ளத்திற் பதியுமாறு உணர்த்துவன. சுவைத்தலுக்காக இந்நூல்கள் ஆக்கப்படவில்லை. மக்கட் பண்பு மேலும் மேலும் வளர்ந்தோங்குதற்காகவே இலக்கியங்கள் எழுகின்றன. இலக்கியம் என்பது இலட்சியத்தையடையும்படி நெறிப்படுத்துவது என்பதை நாம் உணர வேண்டும். இலட்சியமல்லாதவன் வாழ்வு வானத்தில் எய்த பாணம் போல் வீணுகும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு குடும்பமும் முழுமையான வாழ்வு வாழ்ந்தன. ஏவலாளரின்றிக் குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒன்ருக ஒன்றியிருந்து உழைத்தனர். அதனுற் சிக்கன வாழ்வும் சிறந்த வாழ்க்கை அநுபமும், பொறுப்புணர்ச்சியும் வளர்ந்தன. குடும்பமும் பெருக்கமின்றிச் சுருங்கியிருந்தது. புதல்வர்களை நற்பாங்கில் வளர்க்கச் சிறிய குடும்பமுமே ஏற்றது. வருவாய் சுருங்கினுலும் வளமான வாழ்வு அமைய இது உதவும். குழந்தை பிறந்து ஐந்து வயது வரை தாயை ஒட்டியே வளருகின்றது. தாயாரின் நற்குண, நற்செயல்கள் குழந்தையின் உள்ளத்தில் பதிகின்றன.

நல்லாள் என்ருருபொருள் பொதிந்த சொல் பெண்ணைக் குறித்து இலக்கியங்களில் வழங்குகின்றது. நல்லார் என்றுங் கூறுவர். நல்ல செயல்களைச் செய்பவர் என்பது பொருள். பணியாளரின்றி ஒரு தாயானவள் தன் குடும்ப நிர்வாகத்தை ஆற்றும் பொழுது அறிவும், அன்பும், பண்பும் வளருகின்றன. சிக்கனம் சிறப்பைத் தருகிறது. ஒழுக்கம் விழுப்பமுறுகிறது. பெரியோர்களின் வாழ்வில் இதனைக் காண்கின்ருேம். காந்தியடிகள் வாழ்விற் கஸ்தூரிபாய் எல்லாக் காரியங்களையும் தானே செய்தார். காந்தியடிகளும் தன் காரியங்களைத் தானே செய்தார். இதனுல் அவர்கள் வாழ்வு பண்பிலே வளர்ந்தது. பாரத நாட்டின் பண்பாட்டினையே மேலும் வளர்த்தது.

பெண்களுக்கு உடலழகும் தேவைதான். அந்த அழகு தெய்வ மணத்தில் மலர்ந்தால் எல்லா உயிரும் கை கூப்பித் தொழும். புறத்தழகோடு அகத்தழகும் பிரகாசிக்க வேண்டும். பெண்களுக்கு அகத்தழகு நாணம். நாணம் என்பது கூசும் ஓர் உணர்ச்சி. ஆண்களோடு நெருங்காத-ஒதுங்குகின்ற-ஓர் இயற்கைப் பண்பு. அஃது உள்ளத்தில் உள்ளது. மனித வளர்ச்சியில் படிப்படியாய் மெருகேறிய ஒரு நல்ல பண்பு நாணம். காலமாறுபாட்டால்இப்பண்பு குறைந்திருப்பது போலக் காணப்படினும் இல்லறவாழ்விற்கு அருந்துணையாய் நிற்பது இந்தத் திருநுதலார் நாணமே. மங்கையர்க்கு நாணம் விலைமதிப்பில்லா நாணயம்.

அடங்கி வாழும் உயரிய நற்குணம் நங்கையர்க்கோர் ஆபரணம். இல்வாழ்வில் அயலறியாச் செயற்பாடு பெண்களிடம் மிளிரல் வேண்டும். ஆண்களின் கவர்ச்சியை இச்செயற்பாடு மிகக் கவரும். ஆசைகளின் அளவு ஓர் எல்லையில் அமைந்தால் வாழ்க்கையளவில் அமைந்தால் நல்லதோர் குடும்பம் உருவாகும். பேராசை பெருங் குழப்பத்தை உண்டாக்கும்.

ஒரு வீட்டுப் பாட்டியிடம் ஓர் இளங் குடும்பப் பெண் சென்று 'பாட்டி என் கணவர் என்னைத் துன்புறுத்துகிருர். 'என்ன செய்வேன்' என்று முறையிட்டாள். 'எப்பொழுது' என்று பாட்டி வினவ 'உண்ணும் பொழுது' என்ருள் அந்த இளம் பெண். 'பயப்படாதே. அவரைத் திருத்த மருந்துண்டு. நான் தரும் மருந்தை வாயினுள் விழுங்காமல் வைத்திரு. உன் கணவன் உன் வழியில் அன்போடிருப்பர்' என்று அம்மருந்தைக் கொடுத்தார். அவ்வாறே அப்பெண் அமைந்த போது கலவரம் எதுவும் நிகழவில்லை. மகிழ்ந்த நங்கை பாட்டியிடம் சென்று மகிழ்வைத் தெரிவித்தபோது 'பெண்ணே! நான் தந்தது மருந்தல்ல. தண்ணீர். அது வாயுள் இருக்கும் போது உன் வாய் பேசாமை என்ற மௌனமே மருந்தாயிற்று. கணவன் உண்ணும் போது அமர்ந்து நிற்றல் அரிவையர்க்கு அழகு. ஆடவர்க்கு கவர்ச்சி என்ற உண்மையை அநுபவத்தில் அநுபவி என்று விளக்கிக் கூறினுர்.

பெண்கள் உணவளிக்கும் போதுதான் ஆசைகளை வெளியிடுவர். களைத்து விழுந்து வரும்கணவர் அதனுல் எகிறிக் குதிப்பர். வீடுஓரேகளேபரம். நல்ல பெண்மணி இதற்கு மாருனவள். அறுசுவைஉண்டி அமர்ந்து நின்று ஊட்டுவாள். கணவன் இனிதென உண்டலில் அகம் மிக மகிழ்வாள். இதே பாங்கில் புத்திரச் செல்வங்களும் வளரும். உணவு ஊட்டலில் நல்ல பெண் தெய்வமாகின்ருள். நல்ல குடும்பம் அமைவதற்கு நல்லாள் என்ற இல்லாள் இயல்பு நெறி ஆகின்ருள்.

சிறுகதை

# ரீ.வீயில் வாற மாதிரி....



ஊரெழு தர்ஷினி

இணைற்றடியிற் பாத்திரங்களைத் தேய்த்தபடி இருந்த சாந்தியின் காதில் ரகு 'அம்மா'...என்று கூப்பிட்டது இரண்டுமுறை கேட்டும் கேட்காத மாதிரித் தன் வேலையில் அக்கறையாக இருந்தாள்.

தாயின் அருகே வந்த ரகு அவளின் பின் முதுகை மெதுவாகக் கைகளால் அழுத்தியபடி...'அம்மா...' என்றான்.

என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்த அவளுக்கு அவன் என்ன கேட்கப் போகின்றான் என்பது தெரியும்.

'அம்மா...நான் ரீ.வீ. பாக்கப் போகட்டே...சுரேன் வரட்டாம்; போகட்டே'

சட்டென்று சாந்தியின் மனத்தில் ஓர் ஏக்கம்...

'வேண்டாம் நல்லா நேரம் போட்டுது... அதோடை நாளைக்குப் பள்ளிக்குடம்... பேசாமல் போய்ப் புத்தகத்தை எடுத்துப்படி'

மறுத்தாள் சாந்தி; ரகு விடுவதாய் இல்லை.

'...இல்லையம்மா... காட்டுன் மட்டும் பாத்திட்டு வாறன் போன கிழமை பார்த்ததின்ரை மிச்சம், என்ரை அம்மா வெல்லே! போட்டு வரட்டே'

—சாந்திக்குக் கோபம் வந்தது.

'ரகு சொன்னால்க் கேள், சரியே! இந்தக் காலத்திலை நேரகாலத்தோடை வீட்டிலை இருக்கவேணும். சின்னப் பிள்ளையள் ரீ.வீ. பாக்கக்குடாது.

—சாந்தி முடிக்கவில்லை,

'என்னம்மா நீ...எங்கடை வீட்டிலை மட்டுந்தானே ரீ, வீ. இல்லை. என்னோடை படிக்கிற எல்லாப் பிள்ளையளின்ரை வீட்டிலையும் ரீ.வீ. இருக்கு. எத்தனை பேரின்ரை வீட்டிலை டெக்கும் இருக்குது. அவையள் ஒவ்வொரு நாளும் 'அது பாத்தம், இதுபாத்தம்' எண்டு எனக்கு வந்து சொல்லினம். அவையளின்ரை அம்மா, அப்பா அவையளை ரீ.வீ பாக்க விடுகினம்தானே?

விடாப்பிடியாக ரகு நிற்கச் சாந்திக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

'...சனியன், பேசாமலிரன், கண்டறியாத ரீ.வீ. பாப்பு. போகக்குடாதெண்டாப் போகக்குடாது. இனிக் கேட்டியெண்டாப் பல்லை உடைச்சுப் போடுவன்...'

அவளின் ஆத்திரத்தைப் பொருட்படுத்தாத ரகு போவதற்கு மேலும் அடம் பிடிக்கத் தனது கோபத்தை அடிகளாக அவன் முதுகில் ஆழப் பதித்தாள் சாந்தி. ரகுவின் அழுகை நிற்பதற்கு இரவு வெகு நேரம் பிடித்தது.

படுக்கச் சென்ற சாந்திக்கு நித்திரை வரவில்லை. ஆசையாக ரீ.வீ பார்க்கக் கேட்ட ரகுவைப் பார்க்க விட்டிருக்கலாமோ? என நினைத்தாள். பாவம், சின்னக் குழந்தை பக்கத்து வீட்டுச் சுரேனுடன் ஒன்றாக இருந்து சந்தோஷமாக ரீ.வீ. பார்க்க எவ்வளவு ஆசையாக இருந்திருப்பான்...

'ஓ...எனக்கு ஏன் அப்படி ஒரு ஆத்திரம் வரவேணும்?'

சாந்தியும் படித்தவள் தான். ரீ.வீ.பார்ப்பதுகெட்ட பழக்கம் என அவள் ஒரு நாளும் நினைத்ததில்லை. அவளுக்கும் ரீ.வீ. பார்க்க ஆசை தான். ஆனால் நாட் சாப்பாட்டிற்கே அல்லற் படும் அவள் நிலைக்குச் சொப்பனத்தில் தான் ரீ.வீ. பார்க்க முடிந்தது.

பக்கத்து வீட்டுச் சுரேன் பணக்கார வீட்டுப் பிள்ளை ஆனாலும் அந்தஸ்து, பேதம் இல்லாமல் தினமும் மாலையில் ரகுவை ரீ.வீ. பார்க்க கூப்பிடுவது வழக்கம். சாந்தியும் ரகுவைப் போய்வர விட்டாள். ஆனாற் போய் வந்த ரகுவின் மனத்திற் சில மாற்றங்களை உணரத் தொடங்கிய போதுதான் சாந்திக்கு 'திக்' என்றது. யோசனையும் பிறந்தது.

ஒரு நாள் ரீ. வீ. பார்க்கவென்று சுரேன் வீட்டுக்குப் போன ரகு வெகு நேரமாகியும் வராததாற் கூட்டி வரவென்று போன சாந்தியும் சில நிமிடங்கள் ரீ. வீ. பார்க்கவென்று நின்றாள்- அப்போது...நிகழ்ச்சிகளின் இடையிடையே காட்டிய விளம்பரங்கள்...சாந்தியின் மனதில்நெருடின. ரீ. வீ. தான் பணக்காரர்களுக்கெண்டால் அதிலவாற விளம்பரங்கள் கூடவா பணக்காரர்களுக்கு ஏற்றதாய்...அவங்களுக்கு மட்டுமே பயன்படுறதாய் இருக்கவேணும்? ஒரு வேளை ஏழைகள் எங்கே ரீ. வீ. பார்க்கப் போகின்றார்கள் என்ற நினைப்பில் தான் அவற்றைத் தயாரித்து அளிக்கின்றார்களோ, என்னவோ!

அந்த ஆடம்பர விளம்பரங்களைப் பார்க்க மட்டும் தானே அவர்களால்முடியும். பார்த்துவிட்டு நிறைய ஆசைகளை மனது பூரா தேக்கி வைக்கத்தானே அவர்களாற் சாத்தியமாகும். அவற்றை அடையஅநுபவிக்க முடியுமா? இந்த ரீ. வீ. விளம்பரங்கள் பணக்காரர்களுக்கு எப்படி எல்லாம் பயன் கொடுக்கின்றன. சாந்தி இபபடித்தான் நினைத்தாள்.

எல்லாம் போகட்டும்! நாட் கஞ்சிக்கே அவதிப்படும் தங்களுக்கு விதவிதமான தின்பண்டங்களின் விளம்பரங்களைக் காட்டிய போதுதான் சாந்திக்கு வேதனையாக இருந்தது.

ஒரு சிறு குழந்தையின் முன் விதவிதமான உணவுகளைத் தயாரித்து வைக்கின்றார்கள். அக்குழந்தையோ எதுவும் பிடிக்காமல் அவற்றைக் கையால் தள்ளுவதும் பிறகு தனக்குப் பிடித்தமான தயாரிப்பிற் செய்யப்பட்ட உணவை விரும்பிச் சாப்பிடுவதுமான ஓர் விளம்பரத்தை ரகு வாயூற ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்க சாந்திக்கு தாங்க முடியவில்லை.

ரீ. வீ. பார்த்துவிட்டு திரும்பும் போது,

'ஏனம்மா அந்தக் குழந்தை அந்தளவு நல்ல சாப்பாட்டையும் வேண்டாம் எண்டு தள்ளினது? நான் எண்டால் முழுதையும் சாப்பிட்டிருப்பன்'

சாந்திக்கு அழுகை வந்தது, வாழ்வே கசந்தது. மெல்ல ரகுவை அணைத்தபடி வீடு வந்த சாந்திக்கு...இரவு பூரா ரகு சொன்னதையே நினைத்துக் கொண்டிருந்தாள்,

அன்றிரவு கலர் கலராக... அழகழகாக மேசை நிரம்ப உணவுப் பொருள்களை வைத்துத் தின்பதாக கனவு கண்டு கொண்டிருப்பான் என்பது சாந்திக் தெரியும்.

இப்படித்தான் இன்னொரு நாள்...ரீ. வீ. பார்க்கவென்று சுரேன் வீட்டுக்குப் போய் வந்த ரகு சாந்தியிடம் ஓடி வந்து...

'அம்மா இன்டைக்கு ரீ.வீ. யாலை சின்னப் பிள்ளையள் பள்ளிக்கூடத்தாலை வந்தவுடனை அவையளின்ரை அம்மா...ஏதோ பால் மாதிரிக் கரைச்சுக் குடுத்தா ..தன்ரை பிள்ளையள் கெட்டிக்காரராகப் படிச்சுச் சுறுசுறுப்பாக இருக்க அந்தப் பால் தான் காரணமாம் எண்டா. எங்கடை ரீச்சர் சொன்னா எனக்கும் சத்துக் காணாதாம். அது தான் நான் கெட்டித்தனமாகப் படிக்கிறன் இல்லையாம் அம்மா! எனக்கும் அந்தப் பாலை வாங்கித் தாம்மா. பள்ளிக் கூடத்தாலை வரேக்க பால் தந்தாலம்மா நானும் கெட்டித்தனமாப் படிப்பன் தானே!'

சாந்திக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவளுக்குத் தெரியும் அந்தப் பாலின் தரமும், கூடவே அதன் விலையும், அந்த நேரத்தில் ஏதோ கூறிச் சமாளிக்கத் தான் அவளால் முடிந்தது.

இப்படித்தான் ரீ. வீ. பார்க்கப் போவதும் பார்த்து விட்டு வந்து;

அம்மா ரீ வீயிலை அதைக் காட்டினாங்கள்,இதைக் காட்டினாங்கள் என்று வந்து சொல்வதும், பிறகு அவற்றையே வாங்கித் தரும்படி அடம் பிடிப்பதும் சாந்திக்கு தீர்க்க முடியாத தொல்லையாகவே போய்விட்டது.

'மொழு'க் கென்ற அழகான குழந்தைகள் அழகாக உடையணிந்து தம் பெற்றோர்களுடன் விளையாடி உணவருந்தி, சந்தோஷிக்கும் விளம்பரங்கள் ரகுவின் மனதில் அதிக பாதிப்பை ஏற்படுத்தின.

'எல்லாருமே என்னைவிடச் சந்தோஷமாக அவயளின்ரை அம்மா அப்பாவோடை இருக்கேக்கை நான் மட்டும் ஒவ்வொரு நாளும் போட்ட உடுப்பைப் போட்டுக் கொண்டு கஞ்சியும். உறட்டியும் சாப்பிட்டுக் கொண்டு ஏனம்மா இருக்கிறன்?'

சாந்திக்கு இதயத்தை யாரோபிசைவது போல் இருந்தது.

'அம்மா ரீ.வி.யில வாற மாதிரி எனக்கும் அப்பா வேணுமம்மா... அதிலை வாற மாதிரி நானும் வடிவா உடுப்புப் போட்டு நீயும் வடிவாச் சீலை கட்டிச் சந்தோஷமா இவ்வளவு பெரிய மேசையிலை ஒண்டா இருந்து சாப்பிட வேணுமம்மா'

ஆவலும், ஆசையுமா ரகு கேட்ட போது அவளால் தாங்க முடியவில்லை அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்;

சின்ன வயதிலே செத்துப் போன கணவனையும், ஒரு கனம் நினைத்துப் பார்த்தாள்.

'அம்மா... இன்டைக்கு சுரேன்ரை அப்பா ரீ வீயிலை காட்டின மாதிரி ஒரு 'ஐஸ்' பெட்டிவாங்கி வீட்டிலை வைச்சிருக்கிறாராம்; சுரேன் சொன்னவன்'.

அம்மா! இன்டைக்கு தினேஸுக்கு அவன்ரை மாமா ரீ.வீயிலை காட்டிற மாதிரி ஒரு சைக்கில் வாங்கிக் குடுத்தவராம். அதிலை தான் அவன் பள்ளிக் கூடம் வந்தவன்.

'இன்டைக்கு எங்கடை ரீச்சர் ரீ. வியிலை காட்டுற மருந்தை என்னை வாங்கிக் குடிக்கட்டாம் எண்டவ அப்பத்தான் உடம்பிலை சத்து வருமாம்.'

'ரீ.வீயில வாற பால் மாவைத்தான் இன்டைக்கு மது கரைச்சுக் கொண்டுவந்தவன்.

'அம்மா! ரீ. வீயிலை அடிக்கடி காட்டுறபேனையைத்தான் வரதன் கொண்டு வந்து எழுதிறான்.'

'அம்மா! ரீ. வீயிலை வாற மாதிரி...' இப்படிப்பல ரீ.வீயிலை வர்ற மாதிரிகளை ரகு அடுக்கிக் கொண்டே போவான்.

ஒவ்வொரு நாளும் இத்தகைய புலம்பல்கள் தொடர்ந்த போது தான் ரகுவின்பாதிப் புக்களை-ஏக்கங்களை சாந்தியால் இனம் காண முடிந்தது. இந்த நிலை தொடர்ந்தால், எங்கு போய் முடியுமோ என ஏங்கிய சாந்தி ரகுவின் ரீ.வீ பார்ப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கத் தீர்மானித்தாள் ஆனால், ரகுவின் பிஞ்சு மனத்துக்குக் காரணம் விளங்கவில்லை அவளின் மன மாற்றத்துக்கு அவன் காரணம் கேட்கும் போதெல்லாம் அவள்தனது நிலைமையை-இயலாமையை-எடுத்துக்கூறத் தெரியாமல் திண்டாடுவாள்.

'ரகு... ரீ. வீயிலை வாற மாதிரி எங்களுக்கு வேண்டாமடா சுரேன்.தினேஷ் மாதிரிப் பணக்கார பிள்ளையளுக்குத் தான் உதுகள் சரிவரும் எங்களுக்கு அதுகள் சரிப்பட்டு வராதடா எங்களுக்கு இந்த உறட்டியும் கிழிஞ்ச பாயும்'

—11ஆம் பக்கம் பார்க்க

## இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரி…நாயகம்

06-08-1989 — 12-08-1989

**மேடம்:** பெரியோர் பகை, இடப்பிரிவு, வாகன மாற்றம், வெளியூர் போனவர் வருகை, பிதா வழியுதவி, மனை பூமியால் கவலை, புதுத் தொழில், வணிகர்கள் கடல் தொழில் இயந்திர தொழில் செய்வோர் சமபலன்.

**இடபம்:** உயர்பதவி, திடீர் பிரயாணம், தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் இலாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், தடைப்பட்ட விவாக நிச்சயம், மாமன் வழியுதவி.

**மிதுனம்:** அந்நியருதவி, பணப்புழக்கம், புகழ் தேடி வரும், தெய்வ ஆசி, மங்கள காரிய நிறைவு, வாகன மாற்றம், வெளியூர் செய்தியால் நன்மை, பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

**கடகம்:** வாகன இலாபம், வணிகர்கள் நலம், பெரியோராசி, புத்திர சுகம்,இலட்சுமி கடாட்சம், கலைஞர்கள் மகிழ்ச்சி, உயர் பதவி, உத்தமர்களுறவு, வாகன சுகம், திடீர் பிரயாணம், தேடியவர் வருகை.

**சிங்கம்:** விவாகத் தடை பெரியோராசி, வாகன மாற்றம்,மனக்கிலேசம், கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, புதுத் தொழில், உதவி மூலம் புகழ், தெய்வவழிபாடு.தேடியவர் வருகை,வாக்குவசிகரம்.

**கன்னி:** வீண் விரையம், திருடர் பயம், பெரியோர் வருகை, தடையான பணம் கிடைக்கும், தேடியவர் வருகை, வாகன சுகம், உயர் பதவி, இரு தொழில் வருமானம், கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், இளைய சகோதர ருதவி.

**துலாம்:** வாக்கு வசிகரம், பெரியோராசி, புகழ் தேடி வரும், பணவரவு, வாகன இலாபம், எண்ணியது நடக்கும், மனை பூமியால் இலாபம், காதலர் ஒன்று சேருவார்கள், தூரதேசம் போனவர் வருகை, மாமன் வழியில் நற்காரிய நிவர்த்தி.

**விருச்சிகம்:** வாக்கு வசிகரம், பெரியோராசி, பணப் புழக்கம் எண்ணியது நடக்கும். இளைய சகோதர வழி நன்மை, வணிகர்கள் கடல் தொழில் வைத்தியத் தொழில் செய்வோர் இலாபம், திடீர் பிரயாணம்.

**தனுசு:** உயர்பதவி, வாகன சுகம், விவாக நிச்சயம், பண வரவு,வெளியூர் போனவர்கள் வருகை, விவாக நிச்சயம் பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், இளைய சகோதர வழி கவலை, வெளியூர் போனவர் வருகை.

**மகரம்** பண வரவு, திடீர் பிரயாணம், தேடியவர் வருகை, கல்வியால் புகழ், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், இயந்திரத் தொழில் கடல்தொழில் வணிகத் தொழில் செய்வோர் அதிக இலாபம், வெளியூர் செய்தியால் நன்மை.

**கும்பம்** புகழ் தேடி வரும், பெரியோராசி, எண்ணியது நடக்கும், புத்திர வழி மகிழ்ச்சி, தடைப்பட்ட விவாகம் நடக்கும், மாதா வழியால் பணவரவு, தூரதேச திடீர் பிரயாணம்.

**மீனம்** வாக்கு வசிகரம், உயர்பதவி, கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, பணவரவு, வாகனசுகம், மனையலங்காரம், ஆபரணச் சேர்க்கை, கலைஞர்கள், சோதிடர், வைத்தியர்கள் பெருமிதம்.

# வி. பி. கணேஷ்-ஒரு பேட்டி

தமிழ்ப்பட ரசிகர்கள் வீடியோ மூலமே தமிழ்ப்படங்களைப் பார்த்து வருகின்றனர். இலங்கையில் முன்னர் தயாரித்து வெளியிடப்பட்ட தமிழ்த்திரைப்படங்கள் மீண்டும் திரையிடப்படுகின்றன. 'கோமாளிகள்', 'அநுராகம்', 'நாடுபோற்றவாழ்க' ஆகிய படங்கள் தற்போது காண்பிக்கப்படுகின்றன.

இவ்வேளையில் புதியகாற்றுத் திரைப்படத்தின் மூலம் இலங்கைத் தமிழ்த்திரைப்பட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய வரும் புதியகாற்று, நான் உங்கள் தோழன், நாடு போற்ற வாழ்க, ஆகிய திரைப்படங்களின் தயாரிப்பாளரும் நடிகருமான திரு வி பி. கணேஷ்



'திருப்பாற்கடல்' இதழுக்கெனக் கொழும்பில் அவருக்குச் சொந்தமான வர்த்தக ஸ்தாபனத்தில் பேட்டியளித்தார்.

கேள்வி. மூன்று படங்களுடன் நிறுத்திக் கொண்டீர்களே! காரணம் என்ன?

பதில்: நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தான் காரணம். நம் நாட்டில் தமிழ்த் திரைப்படம் தயாரிப்பதை ஒரு தொழில் என்று கூறமுடியாது லாபத்தை எதிர்பார்க்க முடியாது. இந்தியத்தமிழ்ப் படங்களோடு எமது படங்கள் நின்று பிடிக்க முடியாமல் போய்விடுகின்றன. அப்படியிருந்தும் நாம் திரைப்படங்கள் தயாரித்தோம் லாபம் இல்லாவிட்டாலும் போட்ட பணமாவது கிடைத்தாற் போதும் என்ற நம்பிக்கையில், வட இலங்கை மீதேஎமது ஐம்பது சதவீதமான எதிர்பார்ப்பு இருந்தது அதேபோல் அங்கு திரையிடப்பட்டதாலேயே எமதுபடங்கள் ஓரளவு நட்டமின்றிஓடின பிரச்சினைகள் அதிகரித்தவுடன்படம் தயாரிப்பது என்ற எண்ணமே தோன்ற வாய்ப்பில்லாமற் போய்விட்டது.

கேள்வி: இந்தியப்படங்களின் கவர்ச்சியிலிருந்து ரசிகர்கள் மீள முடியாத தன்மையினுலேயே இங்கு தயாரிக்கப்படுகின்ற தமிழ்ப்படங்கள்வெற்றி பெறமுடிவதில்லை.எனவே இப்போது ஏற்பட்டுள்ள இந்தியத் திரைப்படங்களுக்கான தடை நடவடிக்கையை விரும்புகிறீர்களா?

பதில்: தடைசெய்யப்படுவதை நிச்சயமாக நான் ஆதரிக்கவும் இல்லை.விரும்புவமில்லை. ஆனல் இந்தியப்படங்களின் ஆக்கிரமிப்பைத் தவிர்ப்பது மட்டுப்படுத்துவது ஓரளவுக்குத் தேவை என்றே நினைக்கிறேன். இது நம் நாட்டுத்தமிழ்ப்படங்கள் தலை நிமிரவழிவகுக்கும்.

கேள்வி: தொடர்ந்து படங்கள் எடுக்கும் எண்ணம் உண்டா? அல்லது வியாபாரத்திலும் அரசியலிலும் மட்டுமே ஈடுபடுவது என்று எண்ணியுள்ளீர்களா?

பதில்: நாட்டிலுள்ள அரசியல் நிலைமைகளைப் பொறுத்தே எதையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

கேள்வி:-உங்கள் படங்களில் நீங்கள் ஏற்ற பாத்திரங்களில் எம்.ஜி.ஆர். பாணி இருந்ததே...?

பதில்:- அந்தப் பாணியில் எனக்கு விருப்பமுண்டு. கதையோடு சேர்த்து மக்களுக்கு அரசியல் கருத்துக்களையும் புகட்டும் எம்.ஜி.ஆர். பாணியையே நானும் விரும்பினேன்.

கேள்வி:- தங்கள் 'நாடு போற்ற வாழ்க' இப்போது திரையிடப்பட்டுள்ளது. மற்ற இரு படங்களும் அடுத்தடுத்து திரையிடப்படுமா?

பதில்:-அந்த இரு படங்களும் 83-ம் ஆண்டு கலவரங்களின் போது அழிக்கப்பட்டு விட்டன. இந்த ஒரு படமே என்னிடமுள்ளது.

கேள்வி:-உங்கள் படங்களில் லாபத்தைத்தந்த படம் எது?

பதில்:-புதிய காற்றும்,"நாடு போற்ற வாழ்க"வும் ஓரளவு லாபத்தைத் தந்தன.

கேள்வி:-இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களில் உங்கள் படங்களைத் தவிர உங்களுக்குப் பிடித்த படம் எது?

பதில்:-அநுராகம்.

கேள்வி:- இடையிடையே இலங்கைஇந்திய கூட்டுத்தயாரிப்புக்கள் சில வெளி வந்தனவே,அவற்றில் நீங்கள் ஏன் பங்கேற்கவில்லை?.

பதில்:- நான் ஆரம்பத்திலிருந்தே இக் கூட்டுத்தயாரிப்பை புறக்கணித்ததோடு எதிர்த்தும் வந்தேன். இக்கூட்டுத் தயாரிப்புக்ளால் எமதுகலைஞர்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கவில்லை சரி சமனை வாய்ப்புக்களும் நடிகர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஓரிரண்டு நடிகர்களைச் சிறு வேடங்களில் தலை நீட்டவே அநுமதித்தார்கள். ஆனல் மற்ற விதங்களில் நமது பிரதேசத்தை பயன்படுத்திக் கொண்டார்கள். இது ஒரு சுரண்டல் நடவடிக்கை என்றே நான் ஆரம்பத்திலிருந்து கூறிவந்தேன்.

கேள்வி:- நாட்டு அரசியல் நிலைமைகள் சுமுகமாக வந்தால் படங்கள் எடுப்பீர்களா?

பதில்:- தற்போது பொருளாதாரமும் ஆரோக்கியமானதாக இல்லை. வியாபாரத்தை விட அரசியலில் மிகவும் துரிதமாக ஈடுபட்டு வருகிறேன். நாட்டு நிலைமை சரிவந்து பொருளாதாரமும் ஆரோக்கியமானதாக அமைந்தால் தொடர்ந்து திரைப்படம் தயாரிப்பதைப்பற்றி யோசிப்பேன்.

கேள்வி:- நடிப்புத் துறையிலுள்ளவர்களிடம் வயதைக் கேட்கக்கூடாது என்பார்கள். உங்களுக்கு இப்போது நாற்பத்தைந்து வயதிருக்குமா?

பதில்:- இல்லை ஐம்பத்திரண்டு வயதாகிறது. (அலுவலகத்தில் இவர் அருகே அமர்ந்து 'பிஸி' யாக ஏதோ செய்துகொண்டிருந்த இளம் பெண்ணெருத்தியைக் காட்டி "இவள் எனது மகள்" என்று சிரிக்கிறார் வி. பி. கணேஷ். இலங்கைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்த நிறைவோடு விடைபெறுகிறேன்.)

-விவேக்

# நகைச்சுவையின் தோளிற் சவாரிசெய்யும் நாடகங்கள்

சோ. பத்மநாதன்

வானொலி நாடகம் ஓர் அற்புதமான ஊடகம். அது ஒலி என்ற வாகனம் மூலமாக ரசிகனுடைய மனத்தில் அரங்கேறுகிறது நாடகத்தைக் கேட்கும் ஒவ்வொரு ரசிகனும் தன் கற்பனைக் கேற்றவாறு பாத்திரங்களை உருவாக்கித் தன் மன அரங்கில் உலவ விடுகின்றான். ஆக, வானொலி நாடகம் ஒன்று ஒலிபரப்பாகும் போது, உண்மையில் பல நாடகங்கள் அரங்கேறுகின்றன. இந்த வாய்ப்பு தொலைக்காட்சி நாடகத்துக்கோ மேடை நாடகத்துக்கோ இல்லை.

ஒலிபரப்புத்துறையில் இலங்கைக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. தமிழ் ஒலிபரப்பு, தமிழ் வர்த்தக ஒலிபரப்பு, வானொலி நாடகத் துறைகளில் இலங்கை முன்னேடி. இது பெருமைக்குரிய விஷயமேயாயினும், எங்கள் நாடகங்கள் உண்மையில் தரம்வாய்ந்தவைதாமா? என்று சுயமதிப்பீடு செய்வது நமக்கு நல்லது. (தொலைக்காட்சி நாடகத்துறையில் நாம்எங்கே நிற்கிறோம் என்பதை சிங்கள நாடகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்)

நமது நாடகத் தயாரிப்பாளர்களுக்குள்ள பெருங்குறை 'தகுந்த நாடகப்பிரதி கிடைக்காமை' யாகும். இந்தப் பின்னணியில், ஒரு நாடகாசிரியர் நூற்றிருபத்தைந்து நாடகங்களைஎழுதியுள்ளார் என்றல்-அந்த உழைப்புக்ககாவே-அவர் பாராட்டப்பட வேண்டியவர். அந்தப் பெருமைக்குரியவர்தாம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. அவர் எழுதிய ஒன்பது வானொலி நாடகங்களின் தொகுப்பே 'கெட்டிக்காரர்கள்'.

இவற்றுள் பெரும்பாலானவை எமது சமூகத்தின் பல வீனங்களை, போலிக்கௌரவங்களைத் தோலுரித்துக் காட்டுபவை. யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தின் 'இரண்டுங் கெட்டான்' வாழ்க்கையை நையாண்டி செய்பவை. இவற்றினூடு இழையோடும் நகைச்சுவையே நாடகாசிரியருடைய பலம். உண்மையில் இந்த நகைச்சுவையின் தோளில் ஏறி நாடகங்கள் சவாரி செய்து விடுகின்றன.

சிங்கராயருக்கு தெஹிவளையில் ஒரு சொந்த வீடு. தம் வீட்டின் ஒருபகுதியை வாடகைக்கு விட்டிருக்கிறர். யாழ்ப்பாணத்திலிருந்து புது குடித்தனம் நடத்தவரும் தியாகு அதிக வாடகையும் ஐயாயிரம் முற்பணமும் தர முன்வருகிறன். சிங்கராயரைப் பேராசை பிடிக்கிறது. ஏற்கெனவே குடியிருப்போரை எழுப்ப ஒரு சூழ்ச்சி செய்கிறர். இரவில், குடியிருப்பாளர் பகுதிக் கூரையில் ஏறி ஓட்டை உடைக்கிறர். (இருட்டில், தன்பக்கத்து ஓட்டையும் உடைத்து விடுகிறர்) ரோந்து சுற்றி வரும் பொலிஸ்காரரிடம் மாட்டிக்கொள்கிறர். ஒருவாறு தப்பிவந்தால், வீடு ஒரே ஒழுக்கு! விடிய, மழை நீரைச்சிங்கராயர் தள்ளிக் கொண்டிருக்கையில் வந்து சேரும் தியாகு, எடுக்கிறன் ஓட்டம்! 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற பழையநீதி புதிய வடிவமெடுக்கிறது, இந்த ('ஐயாயிரம்') நாடகத்தில்.

தன் சக்திக்கு மீறிய ஸ்கூட்டர் ஆசை பகீரதனுக்கு! ஆருயிர் நண்பனிடமே கடன் வாங்குகிறன். (நண்பன், நண்பன் மனைவி இருவருக்கும் அடிக்கடி, 'நண்பனுக்குக் கடன் கொடாதே!' என்ற ரஷ்யப் பழமொழி நினைவு வருகிறது!) எதிர்பார்த்தபடியே, முடிவில், சங்கடம், கசப்பு எல்லாம் ஏற்படுகின்றன. பகீரதன் மனைவி தன் நகையைத்தர முன்வருகிறள். மற்றவள் கொஞ்சம் புரிந்துகொண்டு அவகாசம் தருகிறுள்- ஸ்கூட்டர் விற்கும் வரை. ஒருவகைப் 'பாமா விஜய'க் கரு இது.

("கடன் படாதே கடன் கொடாதே!")

"வாத்தியார் கவனம்" 'வல்லவனுக்கு வல்லவன்' வாய்ப்பாட்டில் அமைந்தது.

"முரண்பாடு - Conflict இல்லாவிட்டால் நாடகமே இல்லை" என்று அடித்துச் சொல்கிறர் நாடகத்தயாரிப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரன் (முன்னுரை- பக் vi) அந்த அளவுகோல் கொண்டு பார்த்தால், மேற்குறிப்பிட்ட நாடகங்களில், பெரிதாக, எந்த Conflict உம் இல்லை என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் நாடக, கதாசிரியர்கள் போட்டுப் பிய்த்துதறிய சீதனம், சாதி என்ற இரண்டையும் 'விட்டு விடுதலையாகி' நிற்பதற்காக, சுந்தரம்பிள்ளையைப் பாராட்டலாம்.

உண்மையில் 'பெறுமதி'' 'சலரோகம்', 'ஆடு வளர்ப்பது எப்படி?' ஆகியவற்றுக்கு நகைச்சுவைச் சித்திரங்கள் என்பதற்கு மேல் பெறுமானம்- பயன்பாடு- இல்லை.

அதிர்ஷ்டவசமாக, மலையகத்தைக் களமாகக் கொண்ட இரு நாடகங்களும் எனக்குப் பிடித்திருக்கின்றன.

மலையகத்திற் பணியாற்றச் செல்லும் யாழ்ப்பாண ஆசிரியர்கள் பெரும்பாலோர், தம் சொந்த நலன்களைக் கவனித்துக்கொண்டு மலையகச் சிருர்களை மண்ணுக்குகிருர்கள் என்ற குற்றச்சாட்டு சற்றுப் பலமாகவே ஒலிப்பதுண்டு.

அருள் இதற்கு விதிவிலக்கு. மிக்க உற்சாகத்தோடு கல்விப் பணி செய்கிறன்; விழா எடுக்கிறன். திறமை சான்ற மாணவியான கமலத்துக்கும் அவனுக்கும் ஓர் ஒட்டுதல்( தாகூரின் 'போஸ்ட்மாஸ்டர்'பாணியில்!)

திடீரென்று கமலத்துக்குத் திருமணம் ஏற்பாடாகிறது (மாப்பிள்ளை தொழிலாளி) கமலம் பல்கலைக்கழகம் புகுவாள் என்ற அருளின் கனவும் (ஏனைய கனவுகளும்!) மலராது கருகிவிடுகின்றன. "மலராத மொட்டுக்கள்" நல்ல குறியீடு!

தாம் ஒடுக்கப்படுவதாகக் கூக்குரலிடும் தமிழர் சிலர் சக தமிழர்களை எப்படி நடத்துகிறர்கள் என்பதே "புதிய அடிமைக"ளின் கரு.

லச்சுமி மலையகத்துச் சிறுமி; ஓர் ஏழைத் தொழிலாளியின் மகள் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் குடும்பம் ஒன்றில் வேலைக்காரியாக உழைக்கிருள். தீபாவளி வருகிறது. வீடே அமர்க்களப் படுகிறது. தன்னை அழைத்துச் செல்ல கண்டியிலிருந்து தகப்பன் வருவான், போய்த் தாய், சகோதரங்களைக் காணலாம் என்று கனவுகாணுகிருள் லச்சுமி.

குடும்பத் தலைவி நல்லம்மாவோ லச்சுமியை ஊருக்குப் போகாது தடுக்கப் பல சூழ்ச்சிகள் செய்கிருள். மாரிமுத்துவின் ஏழ்மை அவனை ஏலாதவனுக்கிவிட, மகளை விட்டு விட்டு ஊர்திரும்புகிருன் அவன். தந்தையும் மகளும் பிரிவது நெஞ்சை உருக்கும் கட்டம்.

லச்சுமிக்குப் புதுச் சட்டை வாங்கும் படி சிறுமி சுதா வற்புறுத்துவதும், உலகத்துக்குத் துன்பஞ் செய்த நரகாசுரன், கதையைச் சிறுமிக்குத் தந்தை சொல்வதும், நல்ல உத்திகள். கள்ளங் கபடமற்ற சிறுவர் உலகம் வஞ்சகமும் சுயநலமும் கொண்ட மூத்தோர் உலகத்தோடுமுரண்படுவதை ஆசிரியர் சூசகமாகக் காட்டுகிருர்.

மலையகப் பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தும் தமிழர்களுடைய மனச்சாட்சியை உலுக்கும் இந்த நாடகத்தைப் படைத்தற்காக சுந்தரம்பிள்ளைக்கு ஒரு சபாஷ்!

'கெட்டிக்காரர்கள்' எதிர்கால வானொலி நாடக எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்ற தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் நம்பிக்கை வீண்போகாதிருக்க வேண்டுமானல், ஊடகத்துக்குப் பொருத்தமான தயாரிப்புக் குறிப்புக்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியர் தந்திருப்பவை (உ+ம்: 'கண்டிப்பாக', 'காரமாக', 'எரிச்சலாக', 'கோபமாக', 'பிடிவாதமாக', 'ஏளனமாக'-பக். 8-9) எல்லாம் பொதுக்குறிப்புக்களே; Sound effects பற்றி ஒன்றையுங் காணேம்!

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழை எடுத்தாளுவதில் சுந்தரம்பிள்ளை கணிசமான வெற்றி கண்டிருக்கிருர் என்று தயக்கமின்றிச் சொல்லலாம்.

மலையக நாடகங்களைப் பொறுத்தவரையில் ஆசிரியர் சற்று விழிப்பாக இருந்திருக்கலாம். பேச்சு வழக்கு என்பது இலேசான விஷயமா?(பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு இத்துறையில் இருந்த ஆற்றலை த.சண்முகசுந்தரம் சப்புக் கொட்டுவதுண்டு!)

'போட்டு வருவம்', 'போட்டு வா' (பக் 121), 'போட்டு வாறன்' (பக் 127)' உதைப் பற்றி' 'உந்த மாதிரி' (பக் 130), முதலியன யாழ்ப்பாண வழக்குக்கள் அல்லவா?

ஜோர்ஜ் சந்திரசேகரன் தம் முன்னுரையில் குறிப்பிடும் 'வெள்ளம்' நாடகத்தைத் தொகுப்பில் காணேம்! அது போல், இந் நூலில் இடம் பெருத 'நேசமனத்'துக்காக நாடகாசிரியர் நன்றி சொல்வதும் அபத்தம் என்

[11-ம் பர்க்கம் பார்க்க]

நூலகம்

நூல்: கெட்டிக்கரரர்கள் (வானொலி நாடகங்கள்)

ஆசிரியர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

வெளியீடு: ஒலி, ஒளி நேயர் மன்றம் (யாழ்ப்பாணம், 1988)

அச்சு: சைவப்பிரகாச அச்சகம்

# யாழ். சைவ சித்தாந்தக் கல்வி மரபு 1960-1985

திருமதி சு. இராமநாதன்
B. A., Dip- in - Ed.

## முன்னுரை

இலங்கையில் யாழ்ப்பாணம் கல்வி அறிவில் மேன்மையுற்றோர் (Educated Elite) வாழும் பகுதி. இத்தகையதொரு நிலையுருவாவதற்குக் கிறிஸ்துவ மிஷனரிமாரே காரணர் என்பர். மிஷனரிமாரின் நோக்கம் மதமாற்றமே தவிர யாழ்ப்பாணத்தவரின் கல்வியை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்பதல்ல. கல்வி வளர்ச்சி காலப்போக்கில் தவிர்க்கமுடியாது நிகழ்ந்த பக்கவிளைவே என்பாரும் உளர். எது எவ்வாறாயினும் மிஷனரிமாரின் மதமாற்றும் முயற்சிகளாலேயே யாழ்ப்பாணத்தில் பரவலாகவும், நாவலர்கால யாழ்ப்பாணத்தில் சிறப்பாகவும் சைவ சமய மறுமலர்ச்சி மிகுந்த வேகமும் முனைப்பும் கொண்டதாக அமைய நேர்ந்தது. அதன் பயனாகப் புதிய புதிய துறைகளில் சைவம் வீறுகொண்டெழுந்தது: பயன் பல விளைத்தது.

நாவலரின் வழி வந்தோரும் நாவலர் போலவே கல்விக் கூடங்களை நிறுவியும் நூல்களை வெளியிட்டும் சைவசித்தாந்தக் கல்விச் சிந்தனை வேரூன்றப் பணிபுரிந்தனர். புராண படனம், சொற்பொழிவு முதலாம் இவர் பணிகள் நிறுவன ரீதியிலமையாத கல்வி வளர்ச்சியையும் ஏற்படுத்தின. கோயில்கள் கலைப்பீடங்கள் ஆயின. இங்ஙனம் பல்வகையில் மேற்கொள்ளப்பட்ட கல்விப்பணிகள் நீண்ட நிலைத்த சைவ சித்தாந்தக் கல்வி மரபொன்றைப் பேணின.

யாழ்ப்பாணத்தில் 1960 முதல் 1985 வரையிலான 25 வருடச் சைவ சித்தாந்தக் கல்வி மரபின் வளர்ச்சி யாழ். பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்துறையை நிறுவ வேண்டுமென்ற தீவிர உணர்ச்சியை ஏற்படுத்தித் தூண்டி நிற்றல் கண்கூடு

இத்தகையதொரு சூழ்நிலையில்,

சமயரீதியில் அமைந்த பாரம்பரியக் கல்வியின் தாரதம்மியத்தை உணரவும், 25 வருட கால யாழ்ப்பாணக் கல்விச் சூழ்நிலை, வளர்ச்சி என்பன பற்றி அறியவும் துணைபுரிவதாக இக்கட்டுரை அமையும் என நம்புகிறேன்.

## கல்வி மரபின் தோற்றம்

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றை நூற்றாண்டுகளுக்கூடாகப் பின்னோக்கிப் பார்க்கும் எவரும் சைவ சித்தாந்த மரபிலான கல்வி யாழ்ப்பாணத்தில் பன்னெடுங்காலமாகப் பரவியிருந்தது என்பதை உணரத் தவறார். ஆயின் இன்றைய கல்வியின் வரலாறு மேற்கத்திய அரசுகளின் வருகையிலிருந்தே கணிக்கப்பட வேண்டுமென்று கருதுவோரும் உளர். கல்விக்கு இன்று நாம் கொடும் வரைவிலக்கணம், கல்வியின் பயன்களாக நாம் எதிர்பார்ப்பவை, எமது வாழ்வில் கல்விக்கு நாம் கொடுத்துள்ள இடம் என்பவற்றை அளவுகோல்களாக்கி மதிப்பிடுகையில் இக்கருத்து ஏற்புடையதாவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஆயின் மேனாட்டினரின் வருகைக்கு முன்பிருந்தே நம்மூதாதையரிடை நிலவியவையும் நம் மூதாதையரால் நமக்கென விட்டுச் செல்லப்பட்டவையுமான பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தாக்கத்துக்குட்பட்டிருக்கிறோம் என்பதை ஒதுக்கிவிடமுடியாது.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே நமது நாட்டில் வேரூன்றியிருந்த சித்தாந்த சைவ பாரம்பரியம் எமக்கு இன்றும் ஆன்மிக பலத்தைக் கொடுத்துவர நாம் காண்கிறோம். மேற்கத்திய பாணியிலான கல்வி உலகியல் வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் துறைகளிலும் அறிவை விருத்தி செய்து ஆக்கம் அளிப்பினும் இவ்வுலக வாழ்வுக்கப்பால் நிலைக்கு- மறுமைக்கு- எம்மைப் பண்படுத்தும் வன்மை அற்றதாக விளங்கக் காண்கிறோம். மதப்பாரம்பரியத்தில் ஊறிய கல்வியே அவ்வாற்றலை நமக்கு அளிக்கின்றது. கீழைத்தேய நாகரிகங்கள் யாவும் ஆன்மிகத் துறைக்குப் பெரிதும்முதன்மை அளிக்கின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் சித்தாந்த சைவ மரபிலான கல்வி மரபின் ஆதிக்கம் அந்நியர் ஆட்சியில்- இடைப்பட்ட காலத்தில்-ஒடுக்கப்பட்டிருந்தாலும் ஒருபோதும் முற்றாக ஒழிக்கப்பட்டது கிடையாது. இம்மரபு இன்றும் எமது வாழ்க்கையின் அடித்தளமாகத் திகழ்வதே அதன் அழியாச் சிறப்புக்கு அத்தாட்சியாகும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 25 வருட காலத்தில் நிலவிய சைவசித்தாந்தக் கல்வி மரபின் வளர்ச்சியை ஆராய முற்படுகையில் அதன் தோற்றத்தையும், ஆதிவரலாற்றையும் சுருக்கமாகவேனும் நோக்குவது இன்றியமையாததாகும்.

வேதங்கள் உபநிடதங்கள் என்பவற்றில் மறைந்து கிடக்கும் உண்மைகளை விளக்கிக் கூறும் 28 ஆகமங்களின் பிழிவே 'ஆகமாந்தா' என வழங்கும் சைவசித்தாந்தசாஸ்திரங்கள் இவைஎழுந்தது காஷ்மீரத்தில்என்பர்,சைவசித்தாந்தம் காஷ்மீரில், பிரத்ய பிஞ் 'ஞானதரிசனம்' என வழங்கியது அதுவே தென் தமிழ் நாட்டில் சைவ சித்தாந்த தரிஸனம் என வழங்கி வருகின்றதென்பது ஆய்வாளர் அனைவருக்கும் ஒப்ப முடிந்த உண்மை.

காஷ்மீரத்துக்கு வடகிழக்கில் உள்ள பெரிய மலைத் தொடர் கைலை. திருமூலர் கைலையினின்றும் வந்தவராகக் கூறப்படுகின்றார். இவர் செய்த அரிய நூல் திருமந்திரம். சைவத்திருமுறைகளில் பத்தாந் திருமுறையாக ஏத்தப்படும் சிறப்புக்குரியது அது திருமந்திரத்துக்கும் காஷ்மீரில் தோன்றிய,பிரத்ய பிஞ்ஞான தரிஸனத்துக்கும் இடையில் நிரம்பிய ஒருமைப்பாடுகாணப்படுகின்றது.

கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் திருமூலர் தமிழ் நாட்டில் இருந்து காஷ்மீர் சென்று சைவசமயத்துண்மைகளைத் தத்துவார்த்த ரீதியில் விளக்கி நூல் செய்தார் என்பர். இவர் கருத்தின்படி திருமந்திரமே பிரத்யபிஞ்ஞானத்தின்தோற்றத்துக்குக்காரணம் என்று ஏற்கப்படுகிறது. எது எவ்வாறாயினும் திருமூலரின் திருமந்திரம் பிரத்ய பிஞ்ஞான தரிஸனம் காஷ்மீரில் முகிழ்த்த காலத்தில் எழுந்த நூல் என்பது உறுதியாவது தவிர்க்க இயலாததாகின்றது;

டாக்டர் ரமண சாஸ்திரி:

சைவத் துறையில் சிறந்த ஆசாரியர் இருவர். ஒருவர் சிவதிருஷ்டி என்ற நூலைச் செய்த சோமநாதர்; மற்றவர் பாமார்த் சாரம் என்ற நூலைச் செய்த அபிநவகுப்தர் இருவரும் கி பி 10 நூற்றாண்டினைச் சேர்ந்தவர் திருமூலர் இவ்விருவரிற்கும் முற்பட்டவர் என்பர்.

"குப்தர்கள் காலத்தில் கோதாவரியாற்றங்கரையில் மந்த்ரகலேஸ்வர் என்ற இடத்தில் மந்த்ர கலேஸ்வர் கோவிலைச் சுற்றி நான்கு சைவ மடங்கள் இருந்தன. அங்கு ஆகமச் சைவர்கள் இருந்தார்கள்... இந்த கி.பி 4,5,6ஆம் நூற்றாண்டுகளில் திருமூலர் ஒரு நூற்றாண்டைச் சேர்ந்தவராதல் வேண்டும் "என டாக்டர் மா.இராஜமாணிக்கனார் கருதுவர்.

திருமூலருக்கு முன் தமிழ் மொழியில் சைவ சித்தாந்த நூல்கள் பல இருந்திருக்கலாம்.ஆனால் அவர் செய்த திருமந்திரமே இன்று நமக்குக் கிடைக்கும் மிகப் பழைய சைவசித்தாந்த நூல்,திருமூலரின் திருமந்திரத்திலே தான் 'சைவசித்தாந்தர்' என்ற தொடர் முதல் முதலிற் காணப்படுகிறது.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே,

எனவே கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்கும் 6ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் சைவசித்தாந்தக் கல்வி மரபின் தோற்றக் காலம் எனக் கொள்வது தவறாகாது.

திருமந்திரம் இலங்கையைச் சிவபூமி என்று பாராட்டுகிறது. தமிழில் இன்று கிடைக்கும் மிகப் பழைய சைவசித்தாந்த நூல் இலங்கையைச் சிவபூமி எனுமாயின் அந்த நூல் எழுந்த காலப் பிரிவிலேயே இங்கும் சைவசித்தாந்தக் கல்விமரபொன்று வேரூன்றியிருந்தது எனக் கருத இடமுண்டு.

திருமந்திரத்தில் சைவசித்தாந்தம் 'சைவசித்தாந்தர்' என்ற தொடர்கள் இடம் பெற்றபின் இராஜசிம்ம பல்லவனது கயிலாசநாதர் கோயிற் கல்வெட்டு ஒன்றிலேயே அத்தகையபிரயோகத்தைக் காண்கிறோம்.

'சிவசூடாமணி, சங்கரபத்தன், ஆகமப்பிரியன் சைவ சித்தாந்தப்படி நடப்பவன், அதனையே ஆதாரமாகக் கொண்டவன், சிவனைத்தன் முடிமீது தரித்துள்ளவன்' எனத் தன்னை இராஜசிம்மன் பிரகடனப்படுத்திக்கொள்ளும் இக்கல்வெட்டில் 'சைவசித்' தாந்தப்படி நடப்பவன், 'அதனையே ஆதாரமாகக் கொண்டவன்' என்றெல்லாம் அவன் குறிப்பிட்டிருப்பவை விசேடகவனத்துக்குரியவையாகும். பல்லவர்காலத்தில் குறிப்பாக ராஜசிம்மன் காலத்தில் (கி.பி 600-700) சைவசித்தாந்த சாஸ்திரப் பயிற்சி நிலவியது என்று ஊகிக்க இது இடமளிக்கிறது. திருமூலர் காலத்துக்கும் இராஜசிம்மபல்லவன் காலத்துக்குமிடையில் சைவசித்தாந்தக் கல்வி நிலவியமைக்கான சான்றுகள் கிடைக்காது போயினும் தொடர்ச்சியான சித்தாந்தக் கல்விமரபு பேணப்பட்டிருக்காது போயின் பல்லவர் காலத்தில் தன்னைச் சைவசித்தாந்தியாகச் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படும்படியானநிலை இராஜசிம்மனுக்கு ஏற்பட்டிருக்க முடியாது. தமிழகத்தில் தொடர்ந்தது போலவே இலங்கையிலும் அருந் தொடர்ச்சியான சைவசித்தாந்தக்கல்வி மரபு திருமூலர் காலத்திலிருந்து நிலவியதென்பதற்கு ஆதாரமான குறிப்புக்கள் கிடைக்கின்றன.

'Long before the arrival of Vijaya, there were in Lanka four recognised Iswarams of Siva which claimed and receievd the adoration of all India. These were Tiruketeeswaram. Munne waram Tondeswaram and Tirukoneswaram' எனப் போல் ஈ பீறிஸ் குறிப்பிடுவது இக்கருத்தை அரண் செய்யக் காணலாம்

சைவ சிந்தாந்தச் சிந்தனை வளர்ச்சியில் இலங்கை தலைசிறந்திராவிட்டால் பாரத நாட்டினர் அபிமானித்து வழிபாடியற்றிய ஈஸ்வரங்கள் இங்கிருந்திருக்க மாட்டா. பல்லவர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், சுந்தரமூர்த்திநாயனாரும் திருப்பதிகங்கள் பாடி ஈழத்து ஈஸ்வரங்களைப் போற்றவும் நேர்ந்திராது. எனவே இங்கும் தென்தமிழகத்தைப் போலவே திருமூலர் காலத்திலிருந்து தொடர்ந்து சைவசித்தாந்தக் கல்விமரபு நிலவியிருந்தது என ஊகிக்கலாம். ஆயின் அதற்கான சான்றுகள், ஆதாரங்கள் இன்று கிட்டவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும்.

'This Island was peopled time out of meomry by the Hindu race' என, சேர் உவில்லியம் ஜோன்ஸ் கூறியிருப்பதுமுற்றிலும் உண்மை. எனினும் யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்தக் கல்விமரபு பற்றித் தொடர்பான வரலாற்று ஆதாரங்கள் போத்துக்கேயர் காலத்திலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன.

திண்ணைப் பள்ளிகளாக பள்ளிகள் இயங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே இங்கு தொடர்ச்சியான சைவசித்தாந்தக் கல்வி மரபு ஒன்று நிலவியிருந்திராவிடின் மெய்கண்டநாயனார் செய்த சிவஞானபோதம் (கி.பி. 1221) எனும் தலையாய சைவசித்தாந்தசாஸ்திர நூலுக்குஉரை விளக்கம் போல அதே காலப்பிரிவில் அருணந்திசிவாசாரியரால் ஆக்கப்பட்ட சிவஞானசித்தியாருக்கு உரைகண்ட அறுவரில் ஒருவராக ஈழத்து ஞானப்பிரகாச முனிவர் (17ஆம் நூ. ஆ.) அமைந்திருந்தல் சாத்தியமாகியிராது.

'19-ம் நூற்றாண்டின் கடைக்கூற்றிலே சிவஞான போதத்தை முதன் முதலில் திரு. மதுரநாயகம்பிள்ளை பதிப்பிக்கு முன்பே யாழ்ப்பாணச் சைவப் பேரறிஞர் சைவசித்தாந்த சாஸ்திரப் பயிற்சி மிக்கவராக விளங்கினர். ஓலைச்சுவடிகளில் சித்தாந்த சாஸ்திரங்கள் பயிலப்பட்டும் வந்தன' என நல். முருகேசமுதலியார் குறிப்பிட்டிருப்பது தமிழகத்தை விடவும் ஆழமான சைவசித்தாந்தக் கல்வி மரபு இங்கு வேரூன்றியிருந்தமையைப் புலப்படுத்தக் காணலாம்.

ஞானப்பிரகாச முனிவர் சூரியனார் கோயில் இலக்கணத் தம்பிரான் சுவாமிகள், செப்பறைச்சிதம்பர சுவாமிகள், சபாபதி நாவலர் எனத் தமிழ்நாட்டு ஆதீனங்களில் அமர்ந்து சைவசித்தாந்தக் கல்விமரபுக்கு அத்திவாரமிட்டவர்கள் யாழ்ப்பாணத்தவரேயென்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஈழத்துச் சைவசித்தாந்தக் கல்விமரபு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டே முகிழ்த்துப் பரந்ததாதலின் யாழ்ப்பாணத்து அன்றைய காலப் பின்னணியில் வைத்து அதை நோக்குதல் பொருத்தமாகும்.

தென்னிந்தியாவிலிருந்து படையெடுப்புக்களுடனும் தனித்தும் வந்து குடியேறியவர்களால் இலங்கையில் சைவ மரபின் செல்வாக்கு அதிகரித்தது. காலகதியில் இலங்கையின் வடபகுதியில்- யாழ்ப்பாணத்தில் தமிழரசொன்று உதயமாயிற்று. அவ்வரசின் கீழ் சைவமரபும், சைவக்கட்டுக் கோப்பினுள் அமைந்த கல்வி முறையும் செழித்தோங்கின இந்நிலை கி.பி 16 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

பதினாறும் நூற்றாண்டிலிருந்து மேனாட்டார் ஆட்சியும் ஆட்சியின் அரவணைப்புடன் கூடிய கிறிஸ்து மதப்பரப்பலும் சைவ மரபினையும் வழிபாட்டையும் அவற்றோடு பிணைந்த சித்தாந்த சைவக் கல்வியினையும் இடைக்காலத்தில் இருட்டில் அமிழ்த்தி விட்டன. அக்காலப் பகுதியை இலங்கைத் தேசிய மத மரபுகளின் 'களப்பிரர்' காலமெனலாம்.

முதலில் இலங்கை வந்த மேனாட்டினர் போத்துக்கேயராவர். யாழ்ப்பாணத்தின் முதலாவது போத்துக்கேய ஆள்பதியான டி ஒலிவேரா தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாழ்ந்த எல்லோரையும் கத்தோலிக்கர் ஆகும்படி கட்டாயப்படுத்தினான். தண்டனைக்கஞ்சிய மக்கள் போலிக் கிறிஸ்தவர்களாய்க் காலம் கழிக்க நேர்ந்தது.

போத்துக்கீசர் அரசாளத் தொடங்கிய முதலிரண்டு வருடத்தில் யாழ்ப்பாணத்தில் பண்டு தொட்டுச் சைவராயிருந்தோர் 52000 பெயர் ஞானஸ்நானம் பெற்று ரோமன் கத்தோலிக்கராயினர். இவர்களுள் 20 பெயர் இராசகுமாரர், 150 பெயர் கோவிற்பிராமணர். 3 பெயர் முதலிமார், 2 பெயர் வன்னியர் 2 பெயர் அதிகாரிகள் எனக்குறிப்பிடும் போத்துக்கீச அறிக்கை ஒன்றால் மதமாற்றத்துக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் புலனாகிறது. அதே அறிக்கை,

'ஒலிவேரா மரித்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் 40 ரோமன் கத்தோலிக்கக் குருமார் இருந்தனர்' எனக் கூறுவதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

'யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் கண்ணூறு உண்டானது. மிலேச்சர்களான பறங்கியர்கள் யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்த்தார்கள். காக்கை வன்னியன் என்ற கோடரிக் காம்பு பறங்கியரை வரவேற்றான். திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய தேவாரம் பெற்ற புண்ணியஸ்தலங்களும் மற்றும் சைவாலயங்களும் தரைமட்டமாயின. பெரிய, பெரிய புள்ளிகளெல்லாம் 'தொன்சுவான்'கள் ஆயினர். தலைப்பாகை வைக்கின்றவர்கள் சிலுவைக் குறித் தலைப்பாகைவைக்கவேண்டுமென்பது சட்டம். வாழையிலையிற் சாப்பிடுவதே சமயத்துரோகம். பசுக்கொலை பெரிய புண்ணியம்'

எனப் போத்துக்கேயர் கால யாழ்ப்பாணம் அடிதலை தடுமாறி நின்றபோது,

'இந்தக் கொடுமைகளைச் சகிக்காமல் திருநெல்வேலியிலிருந்த ஞானப்பிரகாசர் பிறவிக்கடலை நீந்துகின்றவர் போன்று பாக்கு நீரிணையை நீந்தி வேதாரணியக் கரையை அடைந்து தாய் நாட்டில் சரண் புகுந்தார்'

இந்த ஞானப்பிரகாச முனிவரிலிருந்தே யாழ்ப்பாணத்துச்சித்தாந்தக் கல்வி மரபை இன்று இனங்காண முடிகிறது.

## ஞானப்பிரகாசர்

மறைஞானதேசிகர் (கி.பி 600) சிவாக்கிரயோகி (கி.பி 1564) நிரம்ப வழகிய தேசிகர் (கி பி 1600) சுப்பிரமணிய தேசிகர் (கி பி 1870) மாதவச்சிவஞான யோகிகள் (மறைவு கி.பி. 1785) ஆகிய ஐவர் உரையோடு ஞானப்பிர

11ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாயம் இருபத்தொன்று

## சமூக நவீனம்




கே.எஸ்.ஆனந்தன்

கண்ணனுடைய ராஜலீலைகள் என்ற தலைப்பில் பௌராணிகர் ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான், ரகுவரன். முதலில் படித்த ஒரு வாக்கியத்தை திரும்பவும் படித்தான்.

'மனித உயிரானது பிறப்பதற்குக் காரணமாக இருப்பது காமம். காமவிகாரத்தால்தான் மனிதன் பிறக்கின்ருன். அவன் இறப்பதற்குக் காரணமாக இருப்பது காலம். அதனுல் தான் ஒருவன் இறந்துவிட்டால்' அவன் காலகதி அடைந்துவிட்டான்' என்று சொல்கின்ரேம்.

தத்துவார்த்தமான விடயங்கள் பலரும் படித்தறிந்து கொள்ளும் பொருட்டு சமய ஞானிகளால், அறிஞர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கிய அந்தச் சஞ்சிகையைப் புரட்டிப் பார்த்தான்.

'சின்னையா இந்த 'ஞானபூமி' புத்தகம் யார் கொண்டு வந்தது' என்று கேட்டான்.

'தம்பி இரவு புகையிலை வாங்கப்போனபோது கடையிலை இந்தப் புத்தகத்தைப் பார்த்தேன் ஸ்ரீ ரங்கநாத சுவாமியின் கோபுர படத்தைப் பார்த்ததும் புஸ்தகத்தை விரித்துப் பார்த்தேன். நல்ல பல விடயங்களிருந்தன. தம்பிக்கு உதவுமே என்று வாங்கி வந்தேன்' என்ருன்.

'நல்லது சின்னையா நீங்களும் படியுங்கள். பத்திரிகை கொண்டுவருபவரிடம் எங்களுக்கும் ஓர் பிரதி போடும்படி சொல்லுங்கள்' என்ருன்.

சினிமாக் கதாநாயகிகளின் அரை நிர்வாணப் படங்கள் கொண்ட சஞ்சிகைகளை அதிக விலை கொடுத்து வாங்கும்படிப் பறிவுள்ளவர்கள் மத்தியில் படிப்பறிவில்லாத சின்னையா போன்ரேரின் நிலையை எண்ணி வியந்தான். ஆன்மிக அறிவு ஒளிவீசும் விடயங்களைக் கொண்டிருந்த அந்த சஞ்சிகையை முழுவதும் படித்து முடித்த பின்பே எழுந்து கடமைக்குப் புறப்பட்டான்.

'தர்மம் எங்குள்ளதோ அங்கே வெற்றியும் இருக்கின்றது. உண்மையைவிட மேலானது தர்மம். சமூகப்பணி என்பதே பெரிய தர்மம் தான்' ஞானபூமியில் படித்த பாபாவின் அருள்மொழிகள் அவன் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

காரியாலயத்தில் செய்ய வேண்டிய கருமங்களை முடித்துக்கொண்ட பின் தனக்கு தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதங்களை எடுத்துப் பிரித்தான். முதலில் சிந்துவின் கடிதமே அவனை வரவேற்றது.

அன்புக்குரியவருக்கு

நீங்கள் கடிதம் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்று தெரிந்தும் எழுதுகின்றேன். உங்களை நேரில் காணமுடியாது போனுலும் என் இதயத்தில் இருந்து கொண்டிருப்பவரிடம் மானசீகமாக உறவாடுகின்றேன். கனவிலும் சரி, நனவிலும் சரி உங்களைத்தவிர வேறு சிந்தனையே எனக்கு இப்போ கிடையாது. அங்கிள் தன் மனைவி எனக்காக நகை வைத்திருப்பதாக கூறினுரே அது எங்கள் வீட்டில் பெரும் பிரச்சினையை உருவாக்கிவிட்டது. அப்பா அம்மாவை 'உன் மருமகனுக்கு நீ என்ன கொடுக்க வைத்திருக்கின்ருய்?' என்று கேட்டார் அது அம்மாவுக்கு ரோஷமாய் போச்சு. உங்களுக்காக ஒரு கார் வாங்கி கொடுப்பதாக சொல்லிவிட்டிருக்கின்ரு. எனக்கு எவ்வளவோ எழுதனும் போலிருந்தாலும் உங்கள் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

அன்புள்ள சிந்து

இரு முறை திருப்பிப் படித்தவன் சிரித்துக்கொண்டான் சிந்துவுக்கு கடிதம் எழுத வேண்டும் என்று தீர்மானித்தவாறே அடுத்த கடிதத்தினைப் பார்த்தான். நான்கு கடிதங்களின் பின்பு கனத்த தடித்த பெரிய உறையுடன் சமரசிங்காவின் கடிதம் ஒன்று காணப்பட்டது. ஆவலுடன் அதனைப் பிரித்தான்.

அவருடைய கையெழுத்தில் சிங்களத்தில் எழுதப்பட்ட ஓர் கடிதம். அத்துடன் பல நாட்களுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட கடிதம். கோணல் மாணலான எழுத்துக்களில் நான்கு பேப்பர் நிறைய எழுதப்பட்டிருந்தது. அத்துடன் ஓர் புகைப்படப் பிரதி. அதைப் பார்த்ததும் மின்சாரத்தால் தாக்குண்டவன் போன்ற அதிர்ச்சிக்கு ஆளானுன். சமரசிங்காவின் கடிதத்தைப் பார்த்ததும் அவனுக்கு யாவும் விளங்கிவிட்டதாயினும் கடிதங்களை மடித்து உறையில் வைத்துக் கொண்டான்.

சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான். பன்னிரண்டுக்கு இன்னும் பத்துநிமிடங்களிருந்தன. தலைமைக் குமாஸ்தாவை அழைத்து சில விடயங்களை கூறி விட்டுப் புறப்பட்டான்.

வழமைக்கு மாருக நேரத்துடன் திரும்பிவிட்ட ரகுவை வியப்புடன் நோக்கிய சின்னையா "என்ன தம்பி நேரத்துடன்..." என்ருர்

'சின்னையா ஸ்ரோங்கா ஒரு ரீ தாருங்கள். அங்கிள் ஒரு கட்டுக் கடிதம் அனுப்பியிருக்கின்ருர். அதனுல் தான் முன்னரே எழுந்து வந்தேன்' என்று கூறிவிட்டு உள்ளே சென்ருன்.

அன்புள்ள மகனே,

இப்படி அழைப்பதற்கே எனக்கு தகுதி கிடையாது. ஊர், உலகம் தெரியாத வயதில் நண்பனின் காலடியில் போட்டுவிட்டு ஓடிவந்த சண்டாளன், நான். மகனே என்று அழைத்தாலும் தந்தையென்று நீஎன்னை அழைக்க மாட்டாய். அதுதான் என் கர்மம். காலம் கடந்த பின்புதான் மனிதர்களுக்கு ஞானேதயம் ஏற்படுகின்றது. வாலிப வயதில் உணர்ச்சி வேகத்தால் நாம் சரி என்று எடுத்துக் கொண்டமுடிவுகள் காலப் போக்கில் உணர்ச்சிகள் தணிந்துவிட்ட நிலையில் நியாயப்படி சிந்தித்துப் பார்க்கும் போது அவை பாரதூரமான பிழைகளாகவே தென்படுகின்றன என் நண்பன் சமரசிங்கா என்னைப்பற்றி எதுவுமே கூற மாட்டான் அவன் ஓர் சாது. யாரையும் துன்பப்பட விடமாட்டான், அதனை நான் நன்குணர்ந்ததாலே தான் உன்னை அவன் காலடியில் வைத்துவிட்டு நான் மட்டும் ஓடினேன்.

உண்மையின்படி பார்க்கப் போனுல் நான் ஓர் சுயநலவாதி. உன்னைப் பெற்றவள் இறந்துவிட்டதாக பொய் சொன்னேன். அன்றைய நிலையில் எனக்கிருந்த மனநிலை அப்படிக் கூறவைத்தது. ஆனுல் இன்று அவளை நினைத்து நான் அழுது புலம்புகின்றேன். உன் தாய் இறக்கவில்லை. அவள் உயிரோடுதான் வாழ்கின்ருள்.

நான் கண்டியில் கடையில் சம்பளத்துக்கு வேலை பார்த்த போது என்னிடமிருந்த வாலிபமும், துடுக்கும் என்னை சிரழித்துவிட்டன. குடி, கூத்தி என்று நான் செய்யாத பாவங்களே இல்லை. சமரசிங்கா என்னை நல்வழிப்படுத்த எவ்வளவோ முயன்ருன். நாய் வாலை நிமிர்த்த முடியுமா? ஆனுலும் என்மீது உயிரையே வைத்துள்ள ஒரே சிங்கள நண்பன் சமரசிங்காதான்.

நான் ஊருக்கு சென்ற போது உன்தாயின் அழகில் மயங்கி அவளைச் சீதனம் ஏதுமின்றி கல்யாணம் செய்தேன். அவள் ஏற்கனவே ஒருதனைக் காதலித்திருந்தாள். அவள் பெற்ரேர் அதனை விரும்பாது எனக்கு கட்டாயக் கல்யாணம் செய்து வைத்தனர்.

நான் நீ பிறக்கும் வரை மனிதனுகவே சில காலம் வாழ்ந்தேன். மீண்டும் என்னைப் பழைய நோய் பற்றிக் கொண்டது. உன் தாய் அழுதாள் கும்பிட்டு மன்ருடினுள். வேலைக்குப் போகாமல் உள்ளூரில் மரக்கறி வியாபாரம் செய்தேன், குடித்தேன், நோய்க்கு ஆளானேன். சீவியம் கஷ்டம் என் உழைப்பு உன்னைப் பராமரிக்கவே போதாது.

ஒரு பெண் உணவுக்கும் உடைக்கும் மட்டும்தான் புருஷனை எதிர்பார்ப்பாளா? அவள் வறுமையில் வாடினுலும் புருஷனிடமிருந்து கிடைக்கும் அன்பை, சுகத்தைக் கூட பெற முடியாதவளாயிருந்தால் என்ன செய்வாள்? அந்நிலையில்தான் வாடினுள் உன் தாய்.

அப்படியான ஒரு நிலையில் தாய்வீடு சென்றிருந்தாள். அவளுக்காகவே வாழ்ந்து கல்யாணம் செய்யாமலிருந்த அவளுடைய காதலனைச் சந்தித்திருகின்ருள். காலம், சூழ்நிலை, சந்தர்ப்பம் என்னுடைய கையாலாகாத்தனம் யாவும் அவள் மனதை மாற்றி விட்டது போலும், தன்னை வாழ வைப்பதாகக் கூறி தன் வாழ்வைச் சீரழித்துக் கொண்டிருக்கும் என்னைவிடத் தனக்காகவே வாழ்வை வெறுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவனுடன் வாழத் தீர்மானித்து விட்டாள் போலும், அவர்கள் உறவு எனக்குத் தெரிய வருமுன்பே என்னைவிட்டு விலகி அவனேடு போய்விட்டாள்.

ஆனுலும் அவள் நல்லவள். எனக்குரிய சொத்தானஉன்னை என்னுடனே விட்டுச் சென்ருள். உன்னை அவள் கூட்டிச் சென்றிருந்தாலும் நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆனுலும் அவள் உரியவனிடம் உன்னை ஒப்படைத்து விட்டே சென்றிருந்தாள். பாவி நான் உன்னை அநாதரவாய் விட்டல்லவா ஓடிவந்தேன். இந்நிலையில் பார்த்தால் அவள் என்னைவிட பல படிகள் உயர்ந்தே காணப்படுகின்ருள்.

என்னை நம்பி வந்த ஒருத்தியை வைத்துக் காப்பாற்ற முடியாத எனக்கு என்ன வாழ்க்கை வேண்டும்? நீ நன்ருக வாழ வேண்டும் என்ருல் நான் உன்னைப் பிரிந்தே வாழ வேண்டும் என்று தீர்மானித்து இந்தியா வந்தேன். சமரசிங்காவுக்கு கடிதம் அனுப்பினேன் தன் பிள்ளையாக உன்னை வளர்ப்பதாக எழுதியிருந்தான். என்னை வரும்படி வற்புறுத்தினுன் மரணத்தின் வாசலைச் சமீபித்துவிட்ட என்னுல் உனக்கு சிரமம் ஏற்படக்கூடாது என்றே நான் வர விரும்பவில்லை.

நான் வளர்க்காவிட்டாலும் என் மகனின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. சமரசிங்கா மீது எனக்கு அத்தனை நம்பிக்கை கடவுள் உன்னை காப்பாற்றுவார்.

உன் அன்னையை நீ வெறுக்காதே. அவள் எங்கிருந்தாலும் அவளைத் தேடிக் கண்டுபிடித்து உன்னுலானவற்றைச் செய்யவேண்டும். நான் அவளை சந்தோஷமாக வாழ வைக்கவில்லை. உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் அவள். பரிதாபத்துக்குரிய அவள் என்ன நிலையிலிருக்கின்ருளோ நான் அறியேன், மகனே என அழைக்கும் உரிமை எனக்கு இல்லையானுலும் அவளுக்கு அந்த உரிமை உண்டு. உன்னை அவள் உரியவனிடம்தான் விட்டுச் சென்ருள். நான் அதனை மறந்து... இத்துடன் என் இல்லை இல்லை உன் தாயுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இருக்கின்றது. அவள் பெயர் சந்திரஞானம் உன் தாயைச் சந்திக்க நேர்ந்தால் என் நிலையைக் கூறி வைப்பாய் என்ற நம்பிக்கையில் உயிர் விடப்போகும் உன் தந்தை– சத்தியமூர்த்தி.

கடிதத்தைப் படித்து முடித்த போது அவனுடைய விழிகளில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. உண்மையிலே அவன் தந்தை இறந்து விட்டான். அதை நினைத்து அவனுல் அழத்தான் முடிந்தது.

'ரகு நீ சின்னப்பிள்ளை இல்லை. உலகத்தை நன்குணர்ந்து கொண்டவன் என்பதால் உன் தந்தையை அவனுடைய வேண்டுகோளை நிறைவேற்றக் கூடிய சூழ்நிலையை இறைவனுகவே தோற்றுவித்து விட்டான். உன் தாய் வேறு யாருமில்லை சந்திரஞானம் தான். அருண்மொழி உன் தங்கைதான்.

கர்த்தர் எப்படியோ உன்னை உரிய இடத்திற்கு அனுப்பி உன் உறவு பந்த பாசங்களை எல்லாம் ஒரு கோணத்துக்குள் அடக்கி விட்டார். உனக்கு திருமணம் நடக்கப் போகும் வேளையில் சுபசகுனமாக எல்லாம் அமைய வேண்டும் என்றே உன் தாய்க்கு விடயத்தைக்கூறி அன்றுஅழைத்து வந்தேன். முருகன் சந்நிதானத்தில் தான் செய்த பாவத்துக்கு விமோசனம் தேடி உனக்கு பிரசாதம் வழங்கி விமோசனம் பெற்றுக்கொண்டாள் உன் அன்னை, சிந்துவின் குடும்பத்துக்கே இந்த விடயங்கள் தெரியும் உனக்கு நானே தெரியப்படுத்தும் வரை யாரும் கூறக்கூடாது என்று வேண்டிக் கொண்டேன். நான், நந்தா, சந்திரி, கணவன் எல்லோரும் நாளை புறப்பட்டு உவ்விடம் வருகின்ரேம். உன் திருமணம் முடிந்த பின்பே ஊர் திரும்புவோம்– சமரசிங்கா'

விழிகளின் நீரைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்த போது சின்னையா கையில் கோப்பையுடன் தன்னையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டான்.

'தண்ணி ஆறிப்போச்சு சூடாகக் கொண்டு வருகின்றேன் தம்பி.

'என் மனமும் ஆறிப் போச்சு சின்னையா இது... இது...'

'தெரியும் தம்பி. அங்கிள் எனக்கு பூரா விபரமும் கூறியிருக்கின்ருர்'

'அங்கிள் பெரிய ஆள்தான் அவர்கள் குடும்பமே நாளைக்கு வருகின்றது சின்னையா'

'சந்தோஷம் தம்பி. ரீ வேணுமா– சாப்பிடலாமா?'

'சாப்பிடுவோம். எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?'

'சொல்லுங்கள் தம்பி'

'சாப்பாட்டை முடித்துக் கொண்டு இந்தக் கடிதத்தைக் கொண்டு சென்று மிஸ்டர் மாசிலாமணியிடம் கொடுத்து விடுங்கள்' என்ருன்.

அன்று மாலை நாலு மணியளவில் மாசிலாமணி வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. வீடு அமைதியாகவே விளங்கியது. கை நிறையப் பார்சல்களுடன் ரகு வண்டியை விட்டிறங்கினுன் வெளியே ஓடிவந்த மாசிலாமணி 'வாங்கதம்பி' என்று வரவேற்று அழைத்துச் சென்ருர். வாசலில் சந்திரஞானம் நின்றிருந்தாள்.

'அம்மா' என்ருன் ரகு. அவன் விழிக்கடைகளில் நீர் முத்துக்கள்.

சந்திரஞானம் ஓடி வந்து அவனைக் கட்டியணைத்துக் கொண்டாள். மகளுக்கு, மற்றவர்களுக்குப் பயந்து அதுவரை நாள் மூடி மறைத்து வைத்து குமுறிய தாய்ப்பாசம் அன்று மடைதிறந்த வெள்ளம் ஆகிவிட்டது.

'என்னை மன்னித்து விடப்பா' என்ருள்.

'இல்லை அம்மா அன்று என்னையறியாமலே அம்மா என்று உங்களை அழைத்தேன் இன்று யாவும் புரிந்துணர்ந்த வேளையில்...' அவனுல் பேச முடியவில்லை.

'இதெல்லாம் எதற்கு ரகு? என்பிள்ளையை எனக்கு தந்திருக்கிருனே ஆண்டவன். என் நெஞ்சுவெடித்து சாவதற்குள் உன்னைப் பார்த்ததே போதுமப்பா' என்று கதறினுள்.

'அப்படிச் சொல்லாதீங்கள். நான் அனுதை இல்லை. பெற்ரேர்கள் இருக்கிருர்கள் என்று என்னை வளர்த்தவர் ஊர்ஜிதம் செய்யும் வரை என் மனமே சூனியக் காடாக இருந்தது. இன்று......'

'போதுமப்பா போதும்' என்று கூறிமுடிக்கும் போது அருண்மொழி ஓடி வந்தாள்.

அவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி 'என்னை மன்னித்து விடுங்கள் அண்ணு' என்ருள்.

'அருண் நீ என்னம்மா தவறு செய்தாய்? நான் ஏன் மன்னிக்க வேண்டும்' என்று அவளை தூக்கி நிறுத்தி தலையைத் தடவினுன்.

'இந்தப்பாவி உங்களையறியாமலே உங்களைப் பற்றி தவருக எல்லாம் சிந்தித்து .....'

'அருண்மொழியின் இரு

—11ஆம் பக்கம் பார்க்க

# சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டிய அறிஞர் 'ஷோ'

சி. து. இராஜேந்திரம் B. A., M. Ed.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றுண்டுகளில் கீழைத்தேய நாடுகளிலும் மேலைநாடுகளிலும் உலகப் புகழ் பெற்ற தலைவர்கள் பலர் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியுள்ளனர். காந்தியடிகள், சுவாமிவிவேகானந்தர் போன்றோர் தம் போதனைகளைச் சாதனைகளாக்கிக் காட்டிய மகான்கள் ஆவர். இவர்களைப் போன்று அயர்லாந்து நாட்டவரான பெர்னுர்ட்ஷா தம் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். தாம் எழுதிய நாடகங்கள், கட்டுரைகள், விமரிசனங்கள், புனைகதைகள் மூலமும் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வாயிலாகவும் அரிய பெரிய கருத்துக்களை அள்ளித் தந்த சிந்தனைச் சிற்பி.

## இளமைப்பருவம்

பெர்னுட் ஷா அவர்கள் தம்மைப் பற்றி எழுதி வைத்த குறிப்புக்களாலும் இவரோடு நெருங்கிப் பழகிய எச். ஜி. வெல்ஸ், மரே போன்றோர் ஷா பற்றி எழுதியவற்றைக் கொண்டும் இவரது வாழ்க்கைச் சரிதத்தை முழுமையாக அறிந்து கொள்ளலாம்.

அயர்லாந்து தேசத்தின் தலைநகராக விளங்கிய டப்ளினில் (Dublin) 1856-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ந் திகதி ஜோர்ஜ் பேர்னுர்ட் ஷா பிறந்தார். அப்பொழுது அயர்லாந்து இன்று போல சுயாட்சி பெற்ற தனியரசாக விளங்கவில்லை. பெரிய பிரித்தானியாவுடன் இணைந்த பகுதியாகவே விளங்கியது. பெர்னுர்ட் ஷா தமது முதல் இருபது வருடங்களையும் அயர்லாந்திலேயே கழித்தார். அவரது குடும்பத்தினர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவரது தாய் தந்தையருக்கு ஆண்மகவு இவர் ஒருவரே. ஆனால் இரண்டு மூத்த சகோதரிகள் இருந்தனர். இவரது தந்தை ஜோர்ஜ் கார் ஷா குடிக்கு அடிமையாகித் தமது ஊதாரித்தனத்தால் உழைத்த பணமெல்லாவற்றையும் இழந்து வெறுங்கையரானுர். இதனுல் பெர்னுர்ட் ஷாவின் இளமைப் பிராயம் வறுமையின் கோரப் பிடிக்குள் அகப்பட்டு ஊசலாடியது. இவரது பள்ளிப் படிப்பும் பாதிக்கப்பட்டது. அத்துடன் அன்று பாடசாலைகளில் வழங்கப்பட்ட கல்வி முறையையும் அவர் வெறுத்தார். அத்துடன் இவரது கல்வியில் அக்கறை எடுக்கக் கூடிய ஆசிரியர் எவரும் இருக்கவில்லை.

## இலண்டன் வாழ்க்கை

1876-ல் ஆண்டில் தமது இருபதாவது வயதில் அயர்லாந்திலிருந்து இலண்டன்மா நகருக்கு வந்து குடியமர்ந்த ஷாவை வறுமை அரக்கன் விட்டு வைக்கவில்லை. சுமார் பத்து வருடங்கள் வறுமை வாட்டிய போதிலும் அதற்காக இவர் வருந்தியது கிடையாது. ஆரம்பத்தில் தாம் சேர்ந்து கொண்ட எத்தொழிலும் அவர் நிரந்தரமாக ஒட்டிக் கொள்ளவில்லை. தமது தாயார் லூஸிந்தாவின் ஆதரவிலேயே காலத்தைக் கழித்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நாவல்கள் எழுதி வந்தார். ஆனால் அவை வருவாயைப் பெற்றுத் தரக் கூடியவகையில் எப்பத்திரிகையிலும் பிரசுரிக்கக் கூடிய வாய்ப்பினைப் பெறவில்லை. அதற்காக மனம் நொந்து எழுத்துத் தொழிலைக் கைவிட்டுவிடாது தமது முயற்சியைத் தொடர்ந்தார். இவரது கடின உழைப்பிற்கும் அயரா முயற்சிக்கும் இது ஓர் எடுத்துக்காட்டு.

ஷா இளமை தொட்டுத் தம் தாயாரின் உதவியுடன் இசைப்புலமையை விருத்தி செய்து வந்தார். அதிலும் பியானே வாசிப்பது இவருக்குக் கைவந்த கலையாகும். நல்ல ஓவியராகவும் விளங்கினுர் இதனுல் இசை நிகழ்ச்சிகளையும் ஓவியங்களையும் விமர்சித்துப் பத்திரிகைகட்கு எழுதும் வாய்ப்பும் கிட்டியது. இவ்வாறே எழுத்துலகில் பிரபல்யம் அடையக் கூடிய சந்தர்ப்பம் இவரைத் தேடி வந்தது.

## மேடைப் பேச்சுவன்மை

ஷா எழுத்தாளராக ஓரளவு புகழ் பெற்று வந்த வேளையில் புதுமைப் புரட்சியை அவாவி நின்ற பேபியன் கழகத்தில் (Fabian Society) சேர்ந்து பணியாற்றத் தொடங்கினுர். இக் கழகத்தில் இவருடன் சேர்ந்து சேவையாற்றிய ஸிட்னி வெப், ஸிட்னி ஒலிவர் அனிபெஸண்ட் அம்மையார் போன்றோருடன் நெருங்கிய தொடர்பும் ஏற்பட்டது. 1914-ம் ஆண்டுவரை இக்கழகத்தின் முக்கிய உறுப்பினராக விளங்கிய ஷாவிற்கு இதில் சேர்ந்து கொண்டதற்குப் பின் தாம் ஒரு சிறந்த சொற்பொழிவாளராக வரவேண்டுமென்ற விருப்பம் உதயமாகியது. அதற்கான நடவடிக்கைகளையும் உடன் எடுத்துக் கொண்டார். தாம் தயாரித்து ஆயத்தம் செய்த விடயத்தை இலண்டன் ஹைட் பார்க்கிற்குச் சென்று பேசி வந்தார். ஒரு முறை இவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அங்கு பொழுது போக்க வந்த மூவரே! மற்றொரு முறை இவரது பேச்சைக் கேட்டவர்கள் அறுவரே! இவ்வறுவரும் இவர் அரசியல் பேசுகிறுரா எனக் கண்காணிக்க அனுப்பப்பட்ட பொலிஸாராகும். அதனுலேயே அடாது மழை பெய்த போதிலும் இவரது பேச்சை ஒன்றரை மணித்தியாலமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்! இது புரியாத ஷா தம் பேச்சைத் தான் ஆர்வமுடன் கேட்கிறுர்கள் என நினைத்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். தம் இலட்சியத்தை அடையும் வரை அயராது உழைக்கும் தன்மை வாய்ந்த ஷா தொடர்ந்தும் முயற்சி செய்தார். இலண்டன் பொருட்காட்சி நூல் நிலையத்தில் பல நூல்களையும் கற்றுத் தேர்ந்து அறிவைப் பெருக்கிக் கொண்டார். கார்ல்மார்க்ஸ் எழுதிய முதலீடு (Das Kapital) என்ற நூலைப் படித்து மார்க்ஸியப் பொருளாதாரக் கோட்பாட்டினை அறிந்து கொண்டார். இவர் கற்றவை யாவும்இவரை உலகத்திலேயே சிறந்த மேடைப் பேச்சாளர் ஆக்க உதவின.

பேபியன் கழகத்தோடு இவருக்குத் தொடர்பு இருந்த கால கட்டத்திலேயே இவரது வாழ்க்கையில் மற்றுமொரு முக்கிய நிகழ்வு ஏற்பட்டது. இவ்வேளையிலேயே பயினே டவுன்ஸ்ஹென்ட் என்னும் இளம் பெண்ணின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. முதலில் இவரது காரியதரிசியாகத் துணை புரிந்த இப் பெண் பின்னர் இவருக்கு வாழ்க்கைத் துணைவியானுர். இவர்களது இல்வாழ்க்கை மற்றவருக்கு ஓர் எடுத்துக்காட்டாக மிகச் சிறப்புடன் விளங்கியது.

## நாடக மேதை

புனைகதைகளும் விமர்சனங்களும் எழுத ஆரம்பித்த ஷா அவர்கள் 1890-ம் ஆண்டிற்குப்பின்பே நாடக உலகில் தீவிரமாகப் பிரவேசித்தார். இவர் எழுதிய முதல் நாடகமான 'மனைவியை இழந்தவரது மனைகள்' (Widowers Houses) மேடையேற்றப்பட்ட போதிலும் தோல்வி கண்டது. 1894-ல் எழுதப்பட்ட அடுத்த நாடகமாகிய 'திருமதி வாரனின் தொழில் Mrs Warren's Profession) அரசாங்கத்தினுல் தடைசெய்யப்பட்டது ஆனுல் ஆரம்பத்தில் ஏற்பட்ட இத்தகைய தோல்விகளைக் கண்டு இவர் சலிப்படையவில்லை. இவரது அடுத்த நாடகமாகிய 'கன்டிகா' (Candika) பெரும் வெற்றியீட்டியது. இருபதாம் நூற்றுண்டின் முதல் கால் நூற்றுண்டில் ஷா எழுதிக் குவித்த நாடகங்களும் மேடையேற்றப்பட்டவையும் பற்பல இவற்றுள் 'மருத்துவரின் தடுமாற்றம்' (Doctor's Dilemma) பிக்மாலியன்' (Pygmalion) 'அன்ட்ராக்கிளிசும் சிங்கமும்' (Androcles and the Lion) 'புனித ஜோன்' (St John) போன்றன குறிப்பிடத்தக்கன. ஷாவின் நாடகங்கள் பொதுவாக அன்றைய இங்கிலாந்து சமுதாய அமைப்பில் காணப்பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டி நையாண்டி பண்ணுவனவாக இருந்தன. தனிமனித உணர்ச்சிப் போராட்டங்களும் இடையிடையே சித்திரிக்கப்பட்டன. அவர் சிறந்த நாடக ஆசிரியராக மட்டுமன்றி நடிகராகவும் நெறிப்படுத்துபவராகவும் விளங்கினுர். இவருக்கு 1925-ம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபற் பரிசு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். முதலில் இதனை ஏற்க மறுத்த ஷா, பின்னர் அதனை ஏற்றுக் கிடைத்த பணத்தை ஆங்கில இலக்கிய வளர்ச்சிப் பணிக்காகச் செலவிட்டார். இவர் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கியதற்குப் பின்பு இவரது வறுமை நீங்கி செல்வம் சேரத் தொடங்கியது

## சீர்திருத்தச் செம்மல்

ஷா அவர்கள் தம் எழுத்துக்களாலும் சொற்பொழிவுகளாலும் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க விரும்பிய சீர்திருத்தவாதியாவர். சமய, சமூக சீர்திருத்தத்திற்கான கருத்துக்களை வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறினுர். இதனுல் பலரோடும் முரண்படக் கூடிய சந்தர்ப்பங்களும் எழுந்தன. சமயத்துறையில் நிலவிய அர்த்தமற்ற குருட்டு நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் சாடினுர். சமயத்தின் வளர்ச்சி சமுதாயத் தொண்டில் தங்கியுள்ளதென்பதே அவரது கருத்தாகும். சமயங்கள் கூறிய அற்புதங்களையோ, சுவர்க்கம் நரகம் என்பவற்றையோ அவர் நம்பவில்லை. அதற்காக அவரை வெறும் நாத்திகரென்று குற்றம் சாட்டி விடவும் முடியாது. அவர் கடவுட் கொள்கையின் விரோதியல்லர். சமயத்தின் பெயரால் ஏற்பட்ட அநர்த்தங்களைக் கண்டித்தவர். சுருங்கக் கூறின் வாழ்க்கை குறிக்கோள் உடையதாக இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தி அதனடிப்படையில் ஒரு வாழ்க்கைத் திட்டத்தையே அமைத்துக் கொடுத்தார்.

பெண்களை ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாகக் கருதிய ஷா, அவர்களின் உரிமைகட்காகக் குரல் கொடுத்தவர். இதன் பிரதிபலிப்பை இவரது சில நாடகங்களிற் கூடக் காணலாம். 'பெண்கள் தமக்குள்ள ஏராளமான ஆற்றலைப் பொறுப்புணர்வுடன் பொது வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்பது அவரது விருப்பமாகும். இதற்காக அவர்களுக்கு அரசியலில் அதிக பங்காற்றும் உரிமை வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தினுர்.

சமூகத்தில் பரவலாகப் பலராலும் வெறுத்து ஒதுக்கப்படும் வர்க்கத்தினரான சிறைக்கைதிகள் பற்றியும் பல புரட்சிகரக் கருத்துக்களை வெளியிட்டார். 1925-ம் ஆண்டில் சிறைச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள் வழங்கும் குழுவில் ஷா அவர்கள் இடம்பெற்றதால் தம் எண்ணங்களை வெளியிடக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. குற்றவாளிகளைச் சிறையில் பூட்டி வைத்துத் தண்டிப்பது அதிக பலனைத் தராது என்பது இவர் கருத்தாகும். "... சிறை வாழ்க்கை குற்றவாளியின் உயிரைப் போக்காதிருக்கலாம். ஆனுல் மிகக் கொடுமையாக அந்த உயிரைக் கெடுத்து வீணுக்கிவிடுகிறது" என்ற இவரது கூற்று இதனைத் தெளிவுபடுத்துகிறது. குற்றவாளிகள் சீர்திருத்தப்பட்டு சமூகப் பொருத்தப்பாடடையச் செய்யப்பட வேண்டுமென்றே விரும்பினுர்.

## கல்விச்சிந்தனையாளர்

கல்வி பற்றி ஷா அவர்கள் தெரிவித்த கருத்துக்களும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியனவாகும். வகுப்பறைக் கல்வி பயனற்றதென்பதை அயர்லாந்தில் அநுபவரீதியாக உணர்ந்துகொண்டவர். நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடந்து கற்கும் கல்வி அதிக பலனைத்தரமாட்டாதென எண்ணினுர். மேலும் அவர் வகுப்பறைக் கற்பித்தல் பற்றிக் குறிப்பிடுகையில் "... விரும்பாதவற்றைத் திணித்துப் புகட்டும் கல்வி முறை மரத்தூளை வற்புறுத்தி உண்ணச் செய்வது போன்றது" என்றுர். சுதந்திரமான இயற்கைச் சூழலில் பிள்ளைகள் இயல்பாகக் கற்றல் வேண்டுமென்பதே இவரது கருத்தாகும்.

போட்டி அடிப்படையில் அமைந்த பரீட்சை முறைகளையும் ஷா கண்டித்தார். இப் பரீட்சைகள் மாணவரின் அடைவுகளைச் சரிவர மதிப்பிடுவதில்லை எனக் கருதினுர். அத்துடன் போட்டியானது மாணவரிடையே தவருன மனப்பாங்குகளை வளர்த்து விடுகிறது. ஒரு மாணவன் மற்றொரு மாணவனின் அறியாமையிலும், வீழ்ச்சியிலும் மகிழ்ச்சி அடையும் மனப்பாங்கினையே வளர்த்துக்கொள்கிறுன் என்ற கருத்தினை வெளியிட்டார்.

கல்வியானது கருவிலிருந்து கல்லறை வரை தொடரப்பட வேண்டுமென்ற இவரது சிந்தனை "கல்வி என்பது ஒருவனது இளமையோடு மட்டும் தொடர்புடையது அன்று, எனக்கு எண்பத்தெட்டாவது வயது நடக்கிறது ஆனுல் இன்னும் எவ்வளவோ கற்க வேண்டியுள்ளது" என்ற இவரது கூற்றிலிருந்து புலனாகின்றது.

## பண்பட்ட நகைச்சுவையாளர்

ஷா அவர்களைவறுமை வாட்டிய போதும், துன்பங்கள் நெருங்கியபோதும், நோய்கள் வருத்திய வேளையிலும் மனம் சோராது இருந்ததற்கு இவரிடம் இயல்பாக இருந்த நகைச்சுவைப் பண்பே காரணமாகும், ஷாவின் கூற்றுக்கள் பல எம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன.

ஒருமுறை சீனதேசத்தவர் ஒருவர் ஷாவைச் சந்தித்துப் பேசிய போது ஷாவினது அழகான பல்வரிசையைக் கண்டு பாராட்டிய வேளை ஷா "அப்படியானுல் அதை அருகில் வைத்தே பாருங்களேன்" என்று கூறித் தனது பொய்ப் பற்களைக் கையில் எடுத்துக் கொடுத்தாராம்

அரசினர் வைத்தியசாலைகளையும் பிரத்தியேக மருத்துவ நிலையங்களையும் (Private NursingHomes) ஷா அவர்கள் வேறு பிரித்துக்காட்டும் முறை வேடிக்கையானது.

"அரசினர் வைத்திய சாலைகளில் நோய் பாதி தீர்வதற்கு முன்பே உன்னைத் துரத்தி விடுகின்றுர்கள்; ஆனுல் பிரத்தியேக மருத்துவ நிலையங்களில் நீ சாகும் வரை உன்னை வெளியே அனுப்புவதில்லை" என்ற இவரது கூற்றில் நகைச்சுவையும் நையாண்டியும் இழையோடுகின்றன.

குடி தனது குடியையே கெடுத்ததைக் கண்டவர் ஷா எனவே குடியை அடியோடு வெறுத்தவர். ஒருவர் குடியை ஷா வெறுப்பதற்கான காரணத்தை ஒருமுறை கேட்ட போது "என் குடும்பத்தைச் சேர்ந்த முன்னேர் என்போல் பலருடைய பங்குகளையும் சேர்த்து தாங்களே குடித்து முடித்து விட்டதால் எனக்குரிய பங்கு இல்லாமல் போய் விட்டது" என விடை அளித்தார்.

ஷா உருவத்தால் மெலிந்தவர். அவருடைய நண்பர் ஜி.கே. செஸ்டர்டன் பருமனவர். செஸ்டர்டன் ஒருமுறை ஷாவைப் பார்த்து உன்னை யாராவது பார்த்தால் இங்கிலாந்தில் பஞ்சம் ஏற்பட்டு விட்டதென்றே எண்ணுவார்கள் என்றுர் வேடிக்கையாக ஷா விடவில்லை. "உன்னைப் பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணமும் தெரிந்து கொள்வார்கள்" என நறுக்காகப் பதிலளித்தார்.

பெர்னுர்ட் ஷா அவர்கள் தொண்ணூற்று நான்கு ஆண்டுகள் வாழ்ந்து ஆங்கில மொழிக்கும் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் அருந்தொண்டாற்றியவராவர். இவரது முதல் பாதி வாழ்க்கையும் வறுமையில் கழிந்தது. எனினும் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தவர். கடைசிப் பாதி வாழ்க்கையில் நிறைபச் செல்வம் குவிந்தது. ஆனுல் ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். இவர் விட்டுச்சென்ற பாரிய செல்வம் முழுவதும் ஆங்கிலமொழி வளர்ச்சிக்காகவே பயன்படுத்தப் படவேண்டுமென்பதே இவரது இறுதி விருப்பமாக இருந்தது. விடா முயற்சி, சகிப்புத்தன்மை, அயராதஉழைப்பு, மனிதநேயம் என்பனவே மனிதமேம்பாட்டிற்கு உதவும் என்பதே இவரது வாழ்க்கை எமக்குக் கற்றுத்தரும் பாடமாகும்.

# கவி அரங்கம்

## யார் செய்த குற்றம் இது?

ஓ!
பெண் வர்க்கமே!
உன் குணமே
இதுதான்
திருமணவாழ்வில்
ஓர்
ஆணைப்பற்றித்
தப்புக்கணக்குப்
போடுகிறாய்
உண்மையில் நீதான்
குற்றவாளி

பெண்குலமே!
'சீதனம்' என்பது
தவிர்க்க வேண்டியதுதான்
ஆனால் முற்றிலும்
தவிர்க்க முடியாததும் கூட
நீதான் இப்போதெல்லாம்
'சீதனம்' என்ற நெருப்புக்கு
மண்ணெய் ஊற்றி
வருகிறாய்
புரியவில்லையா?

எமது நாட்டில்
'அழகான'
'அறிவுள்ள'
'குணமுள்ள-'
ஆண்கள் இருப்பதை
மறந்து விட்டு
இங்கிருக்க-
துணிவில்லாது-
ஆண்மையில்லாது-
வெளிநாட்டுக்கு
ஓடியவர்களை
விரும்பியதுதான்
நீ செய்த குற்றம்

பெண் குலமே
உன் வாழ்க்கைப்
பயணத்தை-
விமானத்தில் ஏற்றிப்
பார்க்கிறாய்
உன் ஆசையும்
இதுதான்
ஆனால்...
உன்னோடு
'சீதனமும்' ஏறுவதை
ஏன் நீ பார்க்கவில்லை?

பெண் குலமே!
யோசித்துப்பார்
தங்கள் மகன்மார்களுக்கு
'சீதனத்தை' வாங்கப்-
பெற்றோர்கள்
மறுத்திருந்தால்
ஒருவேளை...
மகள்மார்களுக்கு
'சீதனம்' கொடுக்க
அவசியம் இருந்திருக்காது
இது தான்
இன்றைய வாழ்வில்
மறுக்க முடியாத
உண்மைகள்

அளவையூர்
நா. முகுந்தன்

## எல்லாமே நீதான் எமக்கு

அத்தா னுடன்நானும் ஓர்பிள்ளை இல்லையென்று
எத்தனையோ தானதவம் இயற்றியதால்—பெற்றெடுத்த
முத்தே மரகதமே மண்ணிலுள்ள இன்பங்கள்
அத்தனையும் நீதான் எமக்கு

கண்ணின் மணியாகக் காலமெல்லாம் உன்னைநாம்
எண்ணியே காத்திடுவோம் அன்போடு — வண்ணமிகு
செல்வமே செந்தேனே சுந்தரனே இவ்வுலகில்
எல்லாமே நீ தான் எமக்கு

மழலைச்சொல் கேட்டாலே நெஞ்சத்து நீங்கா
துளத்துயர்கள் அத்தனையும் நீங்கும் — குழந்தையுனை
நெஞ்சோடு சேர்த்தணைத்து நீங்காமல் வைத்திருந்து
கொஞ்சுவேன் என்னைமறப் பேன்

அன்போ டெனையென்றும் 'அம்மா' எனச் சொல்ல
உன்போ லுலகத்தில் ஆருண்டு — இன்பமாய்க்
கொள்ளுவது உன்சேவை நெஞ்செல்லாம் உன்நினைப்பு
சொல்லுவதும் உன்பேரைத் தான்

அள்ளி எடுத்தணைத்து ஆசையுடன் முத்தமிட்டுப்
பள்ளி கொளச்செய்யப் பாடிடுவேன் — கிள்ளை நீ
பொய்யாய் இமைமூடிப் பாடுவது நின்றதுமே
பொய்க்கோபம் காட்டுவதும் ஏன்?

வட்டிலிலே சோறெடுத்து வாயினிலே தீற்றுதற்கு
கிட்ட அருகணைந்து கைப்பிடித்தால்- தட்டியதை
மண்ணிலே கொட்டிவிட்டு மண்ணோடு சேர்த்தெடுத்து
உண்ணுமுனைப் பேசுவனோ சொல்.

பா. மகாலிங்கசிவம்

## வேளை வரவில்லையா?

வஞ்சியெனை பூவனமென
வலம் வந்து தினம்
கெஞ்சியே நின்றாய்!
இதயத்தில் இடமொன்று
தா என்றாய்
நெஞ்சம் முழுவதையும்
நீ குடியிருக்கத் தந்தேன்!
நீ யில்லையென்றால்
என்னுயிர் பிரிந்து விடும்
நிதமும் உன் நினைவே
வாட்டி எனை வதைத்திடும்
மாலையிட்டு மணவறையில்
கைபிடிப்பேன் நாளை என்
மனையாளாகும்
நாயகி நீ எனமொழிந்தாய்!
காலங்கள் கடந்தாலும்
காத்திருப்பேன் என நானும்
காலமும் வருடமாக
மணநாளைத் தேடி நின்றேன்
காலமும் கடந்து
என் கரு முடியும்
நரைத்திட்டதே
வேளையே இன்னும்
வரவில்லையா உனக்கு!

இ. கிரிசாந்தி

## நம்பிக்கையும் வெற்றியும்

வெற்றி இலக்கை
அடைய
விடாமுயற்சி
வில்லையை
அருந்தி விட்டு
வாழ்க்கை
மைதானத்தில் ஓடு.
கடவுள் தான்
பந்தய நடுவர்
நம்பிக்கைதான்
வெற்றியின்
நுழை வாயில்

சாவ சண்முகதாசன்

## ஓர் இனிய பயணம்

நான்
இன்றிருக்கின்ற
நிலையில்
நீ உட்படயாரையும்
இழக்க விரும்பவில்லை.
காரணம்
உன்னை நெஞ்சம்
உவந்து கொள்வதால்
நான் மற்றவர்களுக்குப்
பூக்களால் அர்ச்சித்தால்
என் மீது
கல்லடி, சொல்லடி
தான் விழுகிறது.
எனது பணிவு மௌனம்
எனக்கு எதிரியாகவே
உருவெடுக்கின்றது
எது எப்படியாயினும்
எனக்குத் தெரிந்த
பாதையில்
என் பயணத்தைத்
தொடர்கின்றேன்
அந்தப் பாதை முழுவதும்
உன் அன்பின்
நிழல் தொடரும்
அதன் சுகம்
கிடைக்கும் என்ற
துணிவுடன்
என் பயணம் தொடர்
கிறேன்

எஸ். தயா

## இதயத்தில் நீ

உறக்கத்தில்-என்
கனவுகளில் நீ
விழிப்பில்-என்
நினைவுகளில் நீ
உறக்கத்திலும் விழிப்பிலும்
என் இதயத்தில் நீ
மொத்தத்தில் என்னை
ஆக்கிரமித்து கொண்டது நீ
என் எதிர் காலம்
நீ என்று நான்
கூறுவதற்காக
உன்னிடத்தில் வரும்போது
ஓடி ஒளியும் நீ
எப்போது என்னைப்
புரிந்துகொள்ளப் போகிறாய்
இம் மடல் மூலமாவது-நீ
என்னைப் புரிந்து கொண்டு
'என் இதயத்திலும் நீ'
என கூறுவாயா?

புலோலியூர்
சந்திரசேகர்

## நலமுற வாழ்க

கற்றறி!தொழிலைத் தேடு!
காசெடு! காலம் வந்தால்
உற்றறி! மனம் ஈர்ப்புற்றால்
உரிமையாய்க் காதல் கொள்ளு!
பெற்றவர் அறிய, நான்கு
பெரியவர் அறிய, மற்றும்
சுற்றத்தாருடனே வாழ்க்கைத்
துணை மணப் பதிவு செய்யே!

சாதகம் இதற்கேன்? நாளேன்?
சாதிகள் தொழிலால் ஏது?
சீதனம் உள்ளம் தீய்க்கும்!
சிக்கனச் செலவே போதும்!
சூதுகள் வஞ்சம் இல்லாத்
தூயநெஞ்சதனிற் தோன்றும்
காதலொன்றுண்மையாயின்
காணலாம் இன்பந்தானே!

ஆண்டுகள் சென்ற பின்போர்
ஆண்பெறு! ஐந்தாண்டின் பின்
மீண்டுமோர் பெண்பேற்றைறக்காண்;
மிதமிஞ்சிப் பெறுவாயானால்
தீண்டுமாம் வறுமை! சுற்றம்
சிறப்புற வாழமாட்டாய்!
வேண்டிய தெல்லாம் கொண்ட
விஞ்ஞான காலந்தானே?

இரா செழியன்

## ஊஞ்சலும் ஊசலும்

நான் எட்டாது என்று
விட்டு விட்டேன்
சாளரங்களை
தட்டித்திறந்த அவள்
இதயத்திரைகளை
எனக்காக விலக்கி
விட்டாள்

தேவதை என்று
தினமும் கவிதைப் பூக்களை
கொட்டிக் குவித்தேன்

கவிதைமை காயுமுன்
மமதை பிடித்தவள்
மாறிவிட்டாள்
என் இடிந்த இதயச்
சமாதிக்குமேல்
பொன்னூஞ்சல் கட்டி
புதிய ஒரு பறவையுடன்
புன்னகைத்து ஆடுகிறாள்
பூவாய் சொரிந்த
என் இதயம்
பாகாய் கரைகிறது
பார்த்து

செவ்வந்தி மகாலிங்கம்

## வெகு தூரம் அல்ல!

அன்பே!
நானுனை நேசிக்கின்றேன்
ஆனால் நீயோ
வெகுதூரத்தில் இருக்கிறாய்
நிட்சயமாய்
எனக்குத் தெரிகிறது
நீ கனன்று கொண்டிருக்கும்
நட்சத்திரமில்லை
குளிர் நிலவென்று
மற்றவர்கட்கு
அமாவாசையாக
தோற்றினாலும்
என்றும் எனக்கு நீ
பௌர்ணமி தான்
இடைவெளியை அளந்த
என் மனம் இறுதியாக
அறிவித்தது
நீ எட்டமுடியாத
தூரத்தில்
அல்ல வென்று

துதிகாந்தன்

## கொன்றையின் கோலங்கள்

கொன்றையின் பூ
கொட்டிடும்
நெற்றியின்
நங்கையர்
கொன்றையின்
இளைக்கது
மன்னனின்
பொன்மணி
கொன்றையின்
கொம்புகள்
அசைந்திடும்
அடுக்கிய
அசைவது
கொன்றையின்
நின்றுமே
அடிமரம்
அதன்மலர்

அழகு
பட்டம்
அணிகள்
பூங்
அழகு
போர்
ஓடை
அழகுப்
தோறும்
இனிய
பொற்
போலத்
மரத்தில்
உராய்வ
பொரிந்து
கொத்தாய்

மலர்ந்து
யானை
போலும்
போலும்
கொத்துக்கள்
சேர்க்கும்
யானைக்கு
போலும்
பூக்கள்
தொங்கி
காட்சி
காசுக்கள்
தோன்றும்
யானை
தாலே
தோன்றும்
தொங்கும்

வ. யோகானந்தசிவம்

## புரியுதா?

பிறப்பு முதல்
தொடர்ந்து வரும்
பிரிவில்லா நிழலிது

மறந்திருக்கும்
மனிதரையும்
நினைத்து வரும் நிழலிது

விலகிச் செல்வோர்
எவரெனினும்
அணுகி நிற்கும் நிழலிது

முதலில் வரும்
இடையில் வரும்
என்றும் வரும் நிழலிது

எங்கு வரும்?
எதனில் வரும்?
என்றறியாப் புதிரிது

வாழ்ந்தவர்க்கும்
தாழ்ந்தவர்க்கும்
வாய்க்குமிது நிச்சயம்

எந்த நிலை
பெற்றவர்க்கும்
இந்நிலைமை நிச்சயம்

உயர்வு தாழ்வு
வறுமை செல்வம்
பேதம் போக்கும் மருந்திது

இன்று நாளை
என்று தவணை
ஏதுமில்லாத் தீர்ப்பிது

வினை முடிந்தால்
தினைப் பொழுதும்
காத்திராத் தீர்ப்பிது

வந்த பணி
முடித்தவர்க்கு
வழியனுப்பும் நிகழ்விது

அது மரணமென்று
புரியுதா?

முருகு



# நடிகமணி ஒரு பன்முகப் பாரம்பரியக் கலைஞர்!

தெணியான்

நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களின் மறைவு நாடகக் கலைஞர்களையும் குறிப்பாக மரபு வழிவந்த நாடகக் கலைஞர்களையும் நாடக ரசிகர்களையும், பொதுவாக ஈழத்துத் தமிழ் மக்களையும் பெரிதும் பாதித்திருக்கிறது. இந்தப் பாதிப்பு நடிகமணி அவர்களுக்கு இருந்து வந்த நாடகத் துறை சார்ந்த முக்கியத்துவம் காரணமாகவே உண்டான தென்பதினை மனங்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய முக்கியத்துவத்தினை நடிகமணி பெறுவதற்கு வழி சமைத்தவை அன்னாரின் பாரம்பரியங்கள் தான் என்பதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

நடிகமணி அவர்களின் நாடகத்துறை சார்ந்த பாரம்பரியங்களை மூன்று வகையினவாகப் பகுத்து நோக்கலாம். நாடகத்துறை வருகைக்கான கால்கோளின் பாரம்பரியம், குடும்பப் பாரம்பரியம், நாடகப் பாங்கு அல்லது முறைமை அல்லது மரபு சார்ந்த பாரம்பரியம் என்னும் முப்பரிமாணங்களைக் கொண்ட பாரம்பரியங்களை உடையவராக நடிகமணி அவர்கள் விளங்கினார்கள்.

காங்கேசன்துறை வைரமுத்து அவர்கள் கரவெட்டி தேவரையாளி சைவவித்தியாசாலை (இப்போது இந்துக்கல்லூரி)யிற் கல்வி பயின்றவர். தேவரையாளி இந்துக்கல்லூரி ஈழத்துக் கல்வித்துறை சார்ந்த வரலாற்றிலும், அதனூடே பரிணமித்த சமய, கலை, கலாசார வரலாற்றிலும் பிரத்தியேகமான சிறப்பம்சங்கள் பலவற்றையுடைய பாரம்பரியத்தினைக் கொண்டது. சைவப்பெரியார், ஆசாரியார் கா. சூரன் வழிவந்த இப் பாரம்பரியம் ஆசிரியர்களான கவிஞர் மு. செல்லையா, சைவப் புலவர் சி. வல்லிபுரம், க. முருகேசு (வைரமுத்துஅவர்களின் வளர்ப்புத் தந்தை) ஆ. ம. செல்வத்துரை ஆகிய சமூக முன்னோடிப் பெரியார்களால் பின்னும் வளர்ச்சி பெற்றது. ஈழத்தமிழ் மக்கள் மத்தியிலே தேவரையாளிச் சமூகம் எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒரு மக்கள் கூட்டத்தின் பாரம்பரிய வழிவந்த நாடகக்கலைஞனாக உருவானவர் நடிகமணி அவர்கள்.

வைரமுத்து அக்கல்லூரியில் மாணவனாகக் கல்வி பயின்ற காலத்தில் கல்லூரி நாடகத்திலே 'அப்பூதி அடிகளாக' வேடந்தாங்கி நாடக மேடைக்கு முதன் முறையாக வந்தார். நடிகமணி அவர்களின் இந்த ஆரம்பமே ஒரு பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வருகையாக அமைந்ததெனலாம்.

நடிகமணி அவர்கள் மரபு வழி நாடகக் கலைஞராகச் சிறந்து விளங்கி முக்கியத்துவம் பெறுவதற்கான இன்னொரு காரணி அன்னாரின் குடும்பப் பாரம்பரியம். குடும்பப் பாரம்பரியம் என்னும் போது கலைஞனுக்குரிய அம்சங்களைக் கருத்தில் கொள்ளாது, வேண்டப்படாத அம்சங்களை முதன்மைப்படுத்தி நோக்குவாரும் நம்மிடையே இல்லாமல் இல்லை. அத்தகையவர்கள் நடிகமணி என்ற கலைஞனின் குடும்பப் பாரம்பரியம் என்பதனை ஏளனமாக நோக்குதலும் கூடும். அத்தகையோரின் நோக்குக்கும் மறுப்பின்றி இணங்கவே நடிகமணி அவர்களின் கலைத்துறை சார்ந்த குடும்பப் பாரம்பரியத்தினை இருவகையாகப் பகுத்து நோக்கலாம்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கலைத் துறைசார்ந்த பாரம்பரியம் பற்றிப் பேசும் போது இவ்வாறு குறிப்பிடுவார்:

''நிலவுடைமையாளன் மகிழ்ச்சியாகப் பொழுது போக்க விரும்பிய சமயங்களிலெல்லாம், அவன் கீழிருந்த அடிமைகுடிமைகள் ஆடிப்பாடி நடித்து அவனை மகிழ்வித்தனர். அதனால் நிலவுடைமையாளன் பார்வையாளனாக இருந்தான், அடிமை குடிமைகள் கலைஞர்களாக மிளிர்ந்தனர், எனவே கலை என்பது கீழ் மட்ட மக்களுக்கு பாரம்பரியமான ஒரு சொத்து.''

பேராசிரியர் அவர்களின் இக் கூற்றினைக் கருத்திற்கொண்டு நோக்கும்போது நடிகமணி அவர்களும் வரலாற்றுப் பழமை வாய்ந்த சமூக அடிப்படையிலான பாரம்பரியம் மிக்க ஒரு கலைஞராகத் தோன்றியவராவார். நடிகமணி அவர்களின் பாட்டனார் நாட்டுக்கூத்து அண்ணாவியாராக விளங்கியவர். நாட்டுக் கூத்துக்களுக்கு மிருதங்கம் அடிக்கும் கலைஞனாகவும், மிருதங்கங்களை உருவாக்கும் தொழில்நுட்பக் கலைஞனாகவும் வாழ்ந்தார். நடிகமணி அவர்களின் தாய்மாமன் புள்ளைநாயகம் அவர்கள் தமிழ்நாடு சென்று மிருதங்கக்கலையினைக் கற்றுத் தேறிய ஒரு கலைஞர், நடிகமணி அவர்களின் தமையனார் காசிநாதன் அவர்கள் மிருதங்கம் வாசிக்கும் கலைஞராகவும் மிருதங்கங்களை உருவாக்கும் தொழில்நுட்பக் கலைஞராகவும் வாழ்ந்தார். அத்துடன் மிருதங்கக் கலையினைக் கற்றுக்கொடுக்கும் குருவாகவும் இருந்தார். இத்தகைய பாரம்பரியங்களையுடைய ஒரு குடும்பத்தில் தோன்றியமையினாலேயே நடிகமணி அவர்கள் தலைசிறந்த நாடகக்கலைஞனாக மாத்திரமன்றி, பல்வேறு இசைக் கருவிகளை இசைக்க வல்ல பல்துறைக் கலைஞனாகவும் திகழ்ந்தார்.

நடிகமணி அவர்களின் நாடகத்துறை சார்ந்த பாரம்பரியம் என்பது மேற்குறிப்பிடப் பட்ட பாரம்பரியங்களிலிருந்து சற்று மாறுபட்டதாகும். பாரம்பரியம் சார்ந்த நாடகத் துறையில் அல்லது மரபுவழி நாடகத்தில் ஒரு நடிகனாக விளங்கியமையும், தமது பேராற்றல் காரணமாக மரபு நாடகத்துறையில் தமக்கென ஒரு பாரம்பரியத்தினை உருவாக்கிச் சென்றமையுமே நடிகமணி அவர்களின் நாடகப் பாரம்பரியமெனலாம்.

நாடகத்துறை நவீன மயப் படுத்தப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் மரபுவழிநாடகம் அல்லது கொட்டகைக் கூத்து என்னும் நாடகம் சிறப்புற்று மேலோங்கி நிலைத்து நிற்க வேண்டுமானால் அந்நாடகத் துறை சார்ந்த கலைஞர்களின் ஆற்றலிலேயே அது தங்கியுள்ளது. ஈழத்து மரபுவழி நாடகத்துறையினைப் பேணி வந்தவரும், அந்நாடகங்களுக்குப் புதிய பரிமாணங்களைக் கொடுத்து வளர்த்து வந்தவருமெனப் போற்றத்தகுந்தவர்களுள் தலைமகனாக நடிகமணி அவர்களைக் கொள்ளலாம். நடிகமணி அவர்களின் நாடகப் பாரம்பரியம் பேணும் இயல்பின் இன்னோரம்சமாக நாட்டுக்கூத்தாக ஆடப் பெற்றுவந்த பூதத்தம்பி கூத்தினை, மேடை நாடகமாக-பூத்தம்பி நாடகமாக பல மேடைகளில் நடித்து வந்தமையையும் குறிப்பிடலாம்.

நடிகமணி வீ.வீ வைரமுத்து அவர்கள் மேற்குறிப்பிட்ட பாரம்பரியங்களுக்கூடாக வந்தமையும் அன்னாரின் தனித்துவம் மிக்க ஆற்றலுமே அன்னார் பெற்றுள்ள முக்கியத்துவங்களுக்குரிய நியாயங்களென இங்கு சுட்டப்பட்டுள்ளன.

நடிகமணி அவர்கள் வெவ்வேறு கோணங்களில் நோக்கப்படவேண்டியவர்; அவ்வாறு நோக்கும்போது அன்னாரின் 'ஆற்றல்' என்ற பொதுவான குறியீடு பல கிளைகளை உடையதாய்ப் பரந்துவிரிந்து செல்வதனைக் காணலாம். அதனைக் காணவும் – காட்டவும் எண்ணும் ஆய்வாளர்கள் தமது பணியினை முடிக்கும் போது நாடக இரசிகர்களும், வாசகர்களும் நடிகமணி பற்றிய புதிய பரிமாணங்கள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். அவ்வாய்ப்பினை எமது ஆய்வாளர்கள் முடக்கமின்றித் தருவார்களென எதிர் பார்ப்போம்.

# ரெனிஸ் - ஓர் அறிமுகம்

வை. சிவநேசன்

இன்று உலகில் கிரிக்கெட் உதைபந்தாட்டம் என்பவற்றை அடுத்து மிக அதிகளவான ரசிகர்களைக் கொண்ட விளையாட்டாக ரென்னிஸ் விளங்குகிறது. இயன்போதம், சுனில் கவாஸ்கர் முதலிய கிரிக்செட் வீரர்கள் உலகெங்கும் பிரபலமாகியிருக்கின்ற ஜோன்மக்கன்ரோ, பியான்னர். போர்க் போன்ற ரென்னிஸ் நட்சத்திரங்களும் அவ்வாறே சர்வதேச விளையாட்டரங்கில் பிரபலமானவர்கள்.

ரென்னிஸ் ஆட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் ஆண்கள் ரென்னிஸ் போட்டிகளைப் போன்றே பெண்களுக்கான ரென்னிஸ் போட்டிகளும் மிக அதிகளவில் இடம் பெறுவதாகும்.

மார்ட்டினா நவ்ரத்தின்லோவா, கிரிஸ் எவர்ட், அண்மைக்காலத்தில் ஸ்ரபி கிராவ், என்று பெண் ரென்னிஸ் வீராங்கனைகளின் பட்டியலும் தொடர்கிறது. உலகின் வேறெந்த விளையாட்டுகளிலும் பெண்கள் இந்தளவு ஆண்களுக்குச் சமனான நிலையைப் பெறவில்லை.

முதன் முதலில் ரென்னிஸ் இங்கிலாந்திலேயே ஆடப்பட்டது. இந்த ஆட்டத்தைப் பிரபலப்படுத்திய பெருமை இங்கிலாந்தைச் சேர்ந்த வால்ரர் கிளாப்ரன் (Walter Cloton) என்பவரைச் சாரும். எனினும் இவர் 'Sphairistike' என்ற பெயரிலேயே இவ் ஆட்டத்தை அழைத்தார். பின்னர் (Tenir) என்ற பிரெஞ்சு சொல்லில் இருந்தே ரென்னிஸ் என்ற பெயர் ஏற்பட்டது.

ரென்னிஸ் போட்டிகளுக்கான விதிகள் (Maryle bone Cricket Club) மெரில்போன் கிரிக்கெட் கழகத்தினால் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன.

ஆண்களுக்கான ரென்னிஸ் போட்டிகள் லண்டனில் உள்ள 'விம்பிள்டன்' எனுமிடத்தில் 1877-ம் ஆண்டில் தொடக்கப் பட்டது. இவ் 'விம்பிள்டன் போட்டியே' ரென்னிஸ் ஆட்டத்தின் 'மெக்கா' வாகக் கருதப்படுகின்றது.

விம்பிள்டன் போட்டியில் வெற்றி பெறுபவரே உலகின் மிகச் சிறந்த ரென்னிஸ் வீரராகக் கருதப்படுகின்றார்.

முதல் விம்பிள்டன் போட்டியில் (1877) இருபத்திரண்டு பேரே பங்கு கொண்டனர்.

இரட்டையர் போட்டிகள் விம்பிள்டனில் 1884-ம் ஆண்டில் அறிமுகமாயின. இதே ஆண்டில் பெண்களுக்கான ஒற்றையர் போட்டிகளுக்கும் விம்பிள்டனில் இடமளிக்கப் பட்டது முதலாவது விம்பிள்டன் பெண்கள் ரென்னிஸ் போட்டியில் ஐவர் மாத்திரமே பங்குகொண்டனர். 1913-ம் ஆண்டில் பெண்கள்- இரட்டையர், கலப்பு இரட்டையர் (Mixed dou bles) போட்டிகள் உள்ளடக்கப்பட்டன.

அன்று உலகெங்கும் ஏராளமான ரென்னிஸ் போட்டிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி நடாத்தப்பட்டு வருகின்றன. இப் போட்டிகளில் பெருந்தொகையான தொழில் ரீதியான (Professio-nal) ரென்னிஸ் வீரர்கள் பங்கு கொள்கின்றனர். எனினும் பின்வரும் நான்கு சுற்றுப்போட்டிகளே மிக மதிப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

1.) விம்பிள்டன் ரென்னிஸ் சுற்றுப்போட்டி

2.) அமெரிக்கன் ரென்னிஸ் சுற்றுப்போட்டி (American Open)

3.) பிரெஞ்சு ரென்னிஸ் சுற்றுப்போட்டி (French Open

4. அவுஸ்ரேலியன் சுற்றுப் போட்டி (Australian Open)

இந்நான்குமே 'Grand Slam' [கிராண்ட் சிலாம்] எனப்படுகின்றன. இந்நான்கு சுற்றுப் போட்டிகளிலும் ஒரே ஆண்டில் வெற்றிபெறுவதென்பது கிடைத்ததற்கரிய ஒரு பேருகக் கருதப்படுகிறது. மேற்கு ஜெர்மனி வீராங்கனை ஸ்ரபி கிராவ் சென்ற ஆண்டில் (1988) இச் சாதனையைப் புரிந்தார். இதற்கு முன் வேறு சிலருக்கும் இப்பேறு கிடைத்தது.

தொழில் ரீதியற்ற ரென்னிஸ் போட்டிகளுள் மிகப் பிரபலமானது டேவிஸ் கிண்ணப் போட்டி ஆகும்.

1900ம்-ஆண்டில் அமெரிக்க வீரரான Dwight Davis என்பவரால் இச்சுற்றுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டதனால் இப் பெயர் வழங்கினாலும் இதன் உத்தியோகபூர்வ பெயர் 'சர்வதேச ரென்னிஸ் சம்பியன் கிண்ணம் International Lawn Tennis Championship என்பதாகும்.

டேவிஸ் கிண்ண போட்டிகள் வருடாந்தம் நாடுகளுக்கிடையே நடைபெற்று வருகின்றன. ஆரம்பத்தில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் தமக்கிடையே இக்கிண்ணத்திற்கென ஆடிவந்தாலும் இன்று ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் இதில் பங்கு கொள்கின்றன. 'நாட்டிற்காக ஆடுதல் என்பது டேவிஸ் கிண்ணப் போட்டிகளின் சிறப்பம்சமாகும். பணப்பரிசுகள் இதில் வழங்கப் படுவதில்லை. நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் 1988 சியோல் ஒலிம்பிக்கில் ரென்னிஸ் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்க தொன்று.

ரென்னிஸ் போட்டிக்கு இடைவிடாத பயிற்சியும் சிறந்த உடற்திறனும் வேண்டப்படுகின்றன. சிறப்பான பயிற்சி வசதிகளும் அவசியமானவை வளர்முக நாடுகளில் இவ்வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருப்பதே இந்நாடுகள் ரென்னிஸ் அரங்கில் அதிகம் பிரகாசிக்க இயலாததற்குக் காரணமாகும். எனினும் இந்தியாவைச் சேர்ந்த ராமநாதன் கிருஷ்ணன் இவரது புதல்வரான ரமேஷ் கிருஷ்ணன், விஜய் அமிர்தராஜ், ஆனந் அமிர்தராஜ் சகோதரர்கள் முதலாம் தமிழ்நாட்டு வீரர்கள் உலக ரென்னிஸ் களங்களில் ஓரளவு சிறப்புற்று விளங்குவது தமிழர்களுக்குப் பெருமை தருவதாகும். 1954-ம் ஆண்டின் விம்பிள்டன் யூனியர் சம்பியன் பட்டத்தை ராமநாதன் கிருஷ்ணன் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் [International Lawn Tennis Federationஎன்ற அமைப்பே (ILTF) உலகளாவிய ரீதியில் ரென்னிஸ் போட்டிகளின் நிர்வாக அமைப்பாக விளங்குகின்றது.

## அமெரிக்கக் கொடி

உலகின் இரு பெரும் வல்லரசுகளில் ஒன்று அமெரிக்கா. அமெரிக்கக்கொடி மிகப் பழமை வாய்ந்தது. இக் கொடிஅடிக்கடிமாற்றி அமைக்கப்பட்டது. தற்போதைய கொடி 1960-ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டதாகும்.

அமெரிக்கக் கொடியின் இடது பக்க மேல் மூலையில் நீல நிறப் பின்னணியில் வெள்ளை நிறத்திலான 50 நட்சத்திரங்கள் உள்ளன. இவைஒவ்வொன்றும் ஒவ்வொரு மாநிலங்களைக் குறிக்கின்றன.

மிகுதி வெளிகளிற் சிவப்பு. வெள்ளை நிறத்திலான 13 பட்டைள் காணப்படுகின்றன. இவை பிரிட்டிஷ் ஆட்சியின் போது இருந்த 13 குடியேற்றப் பகுதிகளைக் குறிக்கின்றன.

இதுவரை தயாரிக்கப் பட்ட பறக்க விடப்படாத கொடிகளில் மிகப் பெரியது அமெரிக்க கொடியாகும். இது 411'×210' பரப்புடையது.

தொகுத்தவர்:

கு. ஞானகாந்தன்

## நகைச்சுவையின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதைச் சுட்டிக் காட்டவேண்டும்.

கெட்டிக்காரர்களின் அட்டை மிக அழகாக இருக்கிறது. சைவப்பிரகாச அச்சகம் யாழ்ப்பாணத்தில் உள்ள பழமை வாய்ந்த அச்சகங்களுள் ஒன்று. அதற்காக, Layoutஇல் புதுமை செய்ய மாட்டோம் என்று அடம் பிடிக்க வேண்டுமா, என்ன?

## யாழ். சைவ ..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசரின் உரையையும் சேர்த்தே அறுவர் உரையென வழங்குவது சைவ சித்தாந்த மரபு. பழைய காலத்திலே பாடம் சொல்லி அநுபவம் பழுத்த ஆசியர்களோ சிறந்த உரையாசிரியர்களாக விளங்கினுர்கள்என்பதைஅவர்கள் உரை கொண்டு அறிய முடிகிறது. நூல்கள் பேணிக் காக்கப்படாது போயின் ஒன்றுக்கு மேற்பட்டோர் உரையெழுதும் வாய்ப்பு அமைவது அரிது. இந்த இரண்டு காரணங்களாலும் நீண்ட தொரு சைவ சித்தாந்தக்கல்வி மரபில் முகிழ்த்தலர்ந்த நன்மலரே ஞானப்பிரகாசர் என்பது தெளிவாகும்.

ஞானப்பிரகாசருக்கு நிரம்பிய சம்ஸ்கிருதப் புலமையிருந்தது. அந்தப் புலமையை அவர் பயன் செய்து பௌஷ்கராகம விருத்தி, சிவ ஞான போதவிருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிரசாததீபிகை, அஞ்ஞான விவகாரம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம் என்னும் எட்டு நூல்களை– சித்தாந்த அஷ்டகம் செய்த உமாபதிசிவம் போலவே– ஆக்கியளித்திருப்பது குறிப்பிடத் தக்கது. மணிப்பிரவாள நடையிலமைந்த இவரின் சிவஞான சித்தியார் உரை சிவசமவாதக் கொள்கையை நாட்டுவது எனக்கூறிச் சைவ சித்தாந்திகள் ஏற்கக் கூசுவதுண்டு. சிவாக்கிர யோகியின் உரையையும் சிவ ஐக்கிய வாதக் கொள்கையை நாட்டுவதெனக் கூறி ஏற்கத் தயங்குவர் சைவசித்தாந்தாந்திகள். சிவஞான சுவாமிகள் ஒருவரின் உரையே சைவசிந்தாந்த மரபினர் மதித்தேற்றுக் கொள்வதாக அமைந்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் ஐவர் உரையையும் பதிப்பித்த போதும் ஞானப்பிரகாசரின் உரையை இன்னமும் பதிபிக்கவில்லை. மாதவச் சிவஞான சுவாமிகள் சிவசமவாத கண்டனம் என ஒன்றே எழுதுமளவுக்கு ஞானப்பிரகாசரின் உரை அமைந்துள்ளமை ஞானப்பிரகாசரின் தனித்துவமான சுய சிந்தனைப் போக்கைத் துலாம்பரமாக்குகிறது.

ஞானப்பிரகாசர் பல்துறை வித்தகர் (Polymath) புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு இந்தியவியல்ஆராய்ச்சி நிறுவனம் (Institute D'francaisc Indo logie pondichery) ஆறு வருடங்களுக்கு முன்பு ஞானப்பிரகாசரின் சிவயோகரத்தினம் என்ற நூலைச் சிறந்த முறையில் பதித்து வெளியிட்டிருப்பது சைவசித்தாந்த ஆராய்ச்சித்துறையில் ஞானப்பிரகாசருக்கிருக்கும் சிறப்பிடத்தைத் தெளிவு படுத்துகிறது. அந்நூல் சிவ ஞானோத்தர ஆகமத்தின் யோகபாதத்தை விளக்குவது, ஞானப்பிரகாசர் திருவண்ணுமலை ஆதீனத்தைச் சார்ந்து தமிழ் நாட்டிலேயே வாழ்ந்து மறைந்தவராதலின் இலங்கையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பேரறிஞர்களும் ஞானப்பிரகாசரின் உரையை ஆராய்ச்சிக் கண் கொண்டு காணத்தவறி விட்டனர் என்பது குறிப்பிட வேண்டிய தொன்றுகும். யாழ்ப்பாணத்தின் சைவசித்தாந்தக் கல்வி மரபின் முன்னோடியான ஞானப்பிரகாசர் பற்றிய ஆராய்ச்சி யாழ்ப்பாணத்து சைவசித்தாந்தக் கல்வி மரபு பற்றிய புதிய பல செய்திகளை வெளிக்கொணர உதவலாம்.

## காலங்கள் மாறும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணத்தை நானே என் செலவில் நடாத்த வேண்டும். அதற்கு உங்கள் சம்மதம் வேண்டும்'

'தம்பி எதற்கப்பா எங்கள் அனுமதி, உங்கள் இஷ்டப் படியே செய்யுங்கள்' என்றுர் மாசிலாமணி.

## தங்க ..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழுத்தையறுக்கும். விதானை யாருக்கும் இனித்தான் கழுத்தறுப்பு.

விசுவலிங்கம்: நான் கொண்டு வாறன் பாரியாரியார்.

பரமலிங்கம்: மாஸ்ரர் உங்களுக்கு விஷயம் விளங்கேல்லை விதாதனையாருக்குத்தான் எங்கடை வைத்திய அருமை தெரியுது.

[ஒரு சிரிப்புச் சிரிக்கிறுர். சிரித்து முடிந்ததும் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்குகிறது மூச்செடுக்கக் கஷ்டப்படுகிறுர். ஒருகுளிசையை எடுக்கிறுர்.)

விதானையார்;– கொஞ்சம் தண்ணி கொண்டாருங்கோ. (விதானையார் தண்ணீர் கொண்டு வரல் Tetral குளிசையைப் போட்டு விட்டு ஓய்வெடுத்து மீண்டும் பேசத் தொடங்கல்)

வேதவனம்:– அப்பபரியாரியாருக்கும் இந்த முட்டு இழுப்பு இருக்கும் போலை அது தான் E N T கிளினிக்குக்கு வந்தவர் போலை. உந்த இங்கிலீசு மருந்தை விட்டுடிட்டு தங்க ஏலாதியை நீங்களும் சாப்பிட்டால் என்ன?

## ரீ. வீ.யில்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு இந்தச்சீலையும் உனக்கு உந்தச் சட்டையும் போது மடா ராசா!'

கண்ணீருடன்கூறுவாள்சாந்தி.

ரகு மட்டும் மற்றவர்களுக்கு முடிகிறதே எங்களுக்கு மட்டும் ஏன் முடியவில்லை என்று ஏங்குவான்; கேள்விக்கு விடைதெரியாமல் திண்டாடுவான்.

இவ்வளவு நாளும் ரீ.வி. பார்க்கப் போகாமல் சாந்தியின் தடை உத்தரவுக்கு அடங்கிக் கிடந்த ரகு மீண்டும் போகக் கேட்டதும்– அடம் பிடித்ததும் சாந்திக்குப் பொறுக்கமுடியவில்லை.

ரகுவை அடித்தது சாந்திக்கு வேதனையாக இருந்தது. தன்னருகே சந்தோஷமாக ரீ. வீ. யில் வருபவைகளை கனவு கண்டுகொண்டிருக்கும் ரகுவை அணைத்துத் தூக்க முயன்ருள்; முடியவில்லை. ரகு மீது வந்த ஆத்திரம் அநுதாபமாக மாற அவள் ஆத்திரம் அந்த ரீ.வீ. மீதும், நிகழ்ச்சிகளைத் தருவோர் மீதும்,விளம்பரதாரர் மீதும் திரும்பியது.

''சீ... என்ன ரீ. வீக்காரங்கள்! ஏன் இவங்கள் பணக்காரங்களுக்கேத்த விளம்பரங்களைப் போடவேணும்? எங்களைப் போலை ஏழையளுக்கும் ஏத்தாப்போலை ஏன் போடக்குடாது? ஒரு உறட்டித்துண்டை இந்தக் கொட்டிலுக்கை இப்பிடிக் கிழிஞ்ச உடுப்போடை எல்லாரும் சந்தோஷமாகச் சாப்பிடறது போலை ஏன் ஒரு விளம்பரம் போடப்பிடாது. குடிக்கிற கஞ்சியாலை தான் குழந்தையள் வடிவாயும், கொழுகொழெண்டும், கெட்டித்தனமா முன்னுக்கு வருகினம் எண்டமாதிரி ஏன் காட்டுறுங்கள் இல்லை?

அவள் அப்படியே உறங்கி விட்டாள்...

அவள் கனவில்...

ரகு ஓடிவந்து,

''அம்மா! ரீ வியிலை வாற மாதிரி எனக்குக் கஞ்சி தாம்மா...'' என்று கேட்பது போலவும், அவள் கஞ்சியை ரகுவுக்கும் கொடுத்துத் தானும் சந்தோஷமாகக் குடிப்பது போலவும் ஒரு காட்சி கறுப்பு, வெள்ளையிலும் கலரிலும் மாறிமாறி வந்து கொண்டிருந்தது.

'அந்தக் காட்சியைப் பார்த்து மெய்சிலிர்த்து நின்றுர் சின்னையா.

சிறி–அருண்மொழி திருமணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சமரசிங்கா குடும்பத்தினரும் ரகுவுடன் சேர்ந்து தங்கள் வீட்டு திருமணமாக நடாத்தி வைத்தனர்.

சந்திரிகா குடும்பத்தினர் சிந்து வீட்டிலேயே ஒரு வாரம் தங்கியிருந்தனர். ரகு–சிந்து திருமணத்துக்கான சகல ஏற்பாடுகளும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தன.

நல்லூர் சிவன் கோவில் கல்யாண மண்டபத்தில் அவர்கள் திருமண விழா இனிதே நடைபெற்றது. நண்பர்கள், உறவினர்கள் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்திருந்தனர். சந்திரஞானம்மா தன் மகள் கல்யாணத்தைப் பார்க்கிலும் ரகுவின் திருமணத்துக்கு தன் உறவினர்கள் எல்லோருக்கும் அழைப்புக் கொடுத்திருந்தாள்.

தன் சொந்த ஊருக்குள் கூனிக் குறுகிச் செல்வதற்கே பயந்திருந்தவள் சந்தோஷமாகவும் பயமின்றியும் தன் மகன் விசுவுடன் சென்று அழைப்புக் கொடுத்தாள்.

ஆறுமுகத்தையும், சரஸ்வதியையும் ஏற்கனவே தன் வீட்டிற்கு உதவிக்கு அழைத்திருந்தாள். மற்றும் உறவினர்கள் திருமண வைபவத்திற்கு வந்திருந்தனர்.

'சமயாசார முறைப்படி நடைபெற்ற திருமணத்தின் போது சந்திரஞானமும் கணவன் மாசிலாமணியுமே கன்னிகாதான சடங்கில் கலந்து கொண்டனர்.

காலையில் நல்லூரில் நடந்த திருமண விழாவில் கலந்து கொண்டவர்களுக்கான விருந்துபசாரங்கள் முடிந்ததும் மணமக்கள் ஓய்வு எடுத்துக் கொண்டபின் மாலையில் வவுனிக்குளம் பாடசாலை மண்டபத்தில் அதிகாரிகளும்,அரச பிரமுகர்களும், நண்பர்களும் கலந்து கொண்ட வரவேற்பு உபசரணை ஒன்று நடைபெற்றது.

எல்லோரிடமும் ஆசீர்வாதம் வாங்கிய புதுமணத் தம்பதிகள் தனியாக நின்ற சின்னையாவின் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றபோது ஆனந்த மேலீட்டால் கலங்காத கண்களே இல்லை என்று கூறலாம்.

அவர்கள் இருவரையும் வாரி அணைத்த சின்னையா தன் சட்டைப் பையுள் அவசர அவசரமாக கையை வைத்து எதையோ எடுத்தார். இரு தங்கமோதிரங்களை ரகுவுடைய கைவிரலிலும்–சிந்துவின் கைவிரலிலும் அணிவித்தார்.

எத்தனையோ பரிசுகள் குவிந்து விட்ட போதும் அந்த ஏழை உள்ளத்தின் பரிசு அவன் உள்ளத்தை குளிர்வித்தது. நன்றியுணர்வோடு 'சின்னையா' என்றுன். சின்னையா அவன் விழிகளில் பனித்து நின்ற கண்ணீரைத்துடைத்து விட்டார்.

ஆயிரக்கணக்கானேர் கூடி நின்ற விழாவில் தன் கடமையை முடித்துக் கொண்ட பூரிப்பில் ஆனந்தக் கண்ணீர் மல்க அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு என்ற வள்ளுவர் வாக்கை பிரதிபலிப்பவராக நின்றிருந்தார் சமரசிங்கா.

தமிழ் மகன் ஒருவருக்கு நடைபெற்ற திருமண வரவேற்பில் இன, மத வேறுபாடு இன்றி பல்வேறு சமூகத்தினரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை அவ்வூர் மக்களிடையே புதுமையாக பேசிக் கொள்ளப்பட்ட செய்தியாக பவனி வந்து கொண்டிருந்தது காலங்களும், கருத்துக்களும் மாறிக் கொண்டேயிருக்கின்றன.

'உனக்குக் கிடைக்கும் சுக துக்கம் உன்னுடைய சொந்த கர்மங்களின் பிரதிபலன் தான் வேறில்லை'

—ஸ்ரீமத்பாகவதரகஸியம்—

(நிறைவு)

# இல்லத்தரசிகளுக்கு சில யோசனைகள்

- உங்களுக்கு எறும்பினுல் தொல்லையா? உடனே ஒரு வெண்கட்டியினுல் (Chalk) எறும்புகள் வரும் வழியில் ஒரு கோடிடவும் அக்கோட்டினை எறும்புகள் தாண்டா.
- ★ கடலை மாவினுல் மீன், ருல் போன்ற மாமிச உணவுகளைக் கழுவினுல் அதிலுள்ள வெடுக்கு நாற்றம் நீங்கி விடும்.
- ★ மைக் கறையை நீக்குவதற்கு முதலில் வெண்கட்டி அல்லது முகப்பவுடரைப் பூசவும். சில நிமிடங்களின் பின்னர் அதனை மோர் நனைத்து தக்காளிக்காயினுல் தேய்க்கவும். கறை மறைந்து விடும்.
- ★ குளிர்சாதனப் பெட்டியில் ஐந்தாறு நாளைக்கு சேமித்து வைக்கப்பட்ட பாலினை மெல்லிய சூட்டில் கொதிக்கவைத்தால் பால் திரையாது.
- ★ ஊதுபத்திகளைப் பாவனைக்கெடுக்கும் வரை உங்கள் உடைகள் உள்ள அலுமாரியிலோ, பெட்டியிலோ வைத்தால் உடைகளில் மெல்லிய சுகந்த வாசனை வீசும்.மேலும் உங்கள் உடைகளை பூச்சி புழுக்கள் தாக்கா.
- ★ சாப்பாட்டு மேசையை மலர்களினுல் அலங்கரிக்கும் போது உயரமற்ற தட்டையான பூச்சாடிகளை உபயோகிக்கவும் அப்போது தான் விருந்தினர் உணவு உண்ணும்போது மகிழ்வுடன் உண்பர்.

# பூந்தோட்டம் அங்கத்தவர்

| | | |
|---|---|---|
| இலக்கம் | 391 | ஜனர்த்தனன் கணபதிப்பிள்ளை<br>வயது 07, விடத்தற்பழை கமலாசனி வித்தியாலயம் மிருசுவில் |
| இலக்கம் | 392 | சண்முகநாதன் வேணுகோபன்<br>வயது 11, ட்றீபேர்க் கல்லூரி சாவகச்சேரி |
| இலக்கம் | 393 | துரைரத்தினம் ஜெயதீபன்<br>வயது 13, ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை |
| இலக்கம் | 394 | மோகனதாசன் நவநீதன்<br>வயது 11, சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| இலக்கம் | 395 | கிருஷ்ணனந்தன் விஜிதா<br>வயது 11, வாதரவத்தை விக்னேஸ்வராவித்தியாலயம் புத்தூர் |
| இலக்கம் | 396 | நவரட்ணராஜா இந்திரநாத்<br>வயது 12, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வண்ணர்பண்ணை |
| இலக்கம் | 397 | செல்வராஜா ருஷ்யந்தினி<br>வயது 13, சரஸ்வதி கனிஷ்ட மகா வித்தியாலயம் மட்டுவில் |
| இலக்கம் | 398 | அருளப்பு ஜெஸ்மின் சுரேயினி<br>வயது 13, சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம் ஊர்காவற்றுறை |
| இலக்கம் | 399 | ஜே. சார்ள்ஸ் அல்பிறட்<br>வயது 13, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம் |
| இலக்கம் | 400 | எஸ் எஸ் அந்தோனிப்பிள்ளை ஸ்ரீபிரியா<br>வயது 10, மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| இலக்கம் | 401 | நாகநாதன் மணிவண்ணன்<br>வயது 12, ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை |
| இலக்கம் | 402 | பரராஜசிங்கம் றஜந்தினி<br>வயது 12, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி |
| இலக்கம் | 403 | பஞ்சாட்சரம் இளங்கோ<br>வயது 12, வைத்தீஸ்வரா வித்தியாலயம் யாழ்ப்பாணம் |
| இலக்கம் | 404 | கணேசமூர்த்தி உதயகுமார்<br>வயது 09, வட்டுவாகல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முல்லைத்தீவு |
| இலக்கம் | 405 | சிவானந்தம் சசிகுமார்<br>வயது 13, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வண்ணர்பண்ணை |
| இலக்கம் | 406 | தர்மராஜா கோபிநாத்<br>வயது 11, கனகபுரம் இந்து மகா வித்தியாலயம் கிளிநொச்சி |
| இலக்கம் | 407 | தியாகராஜா தனபாலசிங்கம்<br>வயது 13, கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம் |
| இலக்கம் | 408 | தனபாலசிங்கம் மயூரன்<br>வயது 12, சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| இலக்கம் | 409 | சிவயோகன் அர்ஜுன்<br>வயது 07, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை |
| இலக்கம் | 410 | அட்சரமூர்த்தி பாலசுப்பிரமணியம்<br>வயது 09, விக்னேஸ்வரா வித்தியாலயம் மாதகல் |
| இலக்கம் | 411 | துஸ்யந்தி கந்தசாமி<br>வயது 13, சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| இலக்கம் | 412 | குமாரசூரியர் விமலன்<br>வயது 13, நெ. ம. ம. வித்தியாலயம் கரவெட்டி |
| இலக்கம் | 413 | தங்கராசா சபிதாழினி<br>வயது 12, மகளிர் மகா வித்தியாலயம் சாவகச்சேரி |
| இலக்கம் | 414 | கணேசதாசன் செந்தூரன்<br>வயது 12, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வண்ணர்பண்ணை |
| இலக்கம் | 415 | நந்தினி புவனேந்திரன்<br>வயது 07, மகாஜன கல்லூரி தெல்லிப்பழை |

# வராளி அவருக்குத் தாரமானாள்

'த்ஸொ'...

'ஏன் இப்படி ஆச்சு?'

'என்ன நாத சுகம் வராளின்னு இது தான். இப்படித் தான் வராளி. ஆஹா...!'

'பக்கவாத்தியமா இது?...

பக்காவாத்தியமில்ல?'

'அதுதான் பாதியில நின்னு போச்சே'

'பூச்சி கரடி வேஷம் போட்டுட்டாரா?'

அவாள் அப்படி எல்லாம் பண்ணமாட்டாள் போங்கோ, நோக்குத் தெரியாதோன்னு, ஒரே பரபரப்பு; சபையிலே கிசுகிசுப்பு.

சுமார் நாற்பது ஜோடி ஆண்டுளுக்கு முன்பு ஒரு நாள்—

சென்னை திருவல்லிக் கேணியில் ஒரு செல்வந்தர் வீட்டுத் திருமண நிகழ்ச்சி. இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் பாட்டு. திருக்கோடிக்காவல் ஸ்ரீ கிருஷ்ணையர் வயலின்.

ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பாடுகிறார் என்றால் அன்று தொழுவத்தில் நிற்கும் மாடுகூட உறங்காது.

ஆன்மா விழித்துக்கொண்ட பின்— விடுதலையை விழைந்த பின்— சொர்க்கம் அதற்கு அதிகதூரத்தில் இல்லை. கானம் அதனைப் பெற்றுத் தருகிறது. அதனால்தான்.

'தியானம் கோடி ஜபத்துக்குச் சமமாகும்.

லயம் கோடி தியானத்துக்குச் சமமாகும்.

காலம் கோடி லயத்துக்குச் சமமாகும்.

எனவே,

கானத்துக்கு மேலானது வேறொன்றுமில்லை' என்று சொல்லப்படுகிறது.

கானம் இசைப்பவர் தம்மோடு தம்மைச் சூழ உள்ளவர்களையும் இறைவன் திருவடிக்கு அழைத்துச் செல்வர் என்பதனைத் தானே ஞானசம்பந்தக் குழந்தையின் வரலாறு வலியுறுத்துகின்றது?

பின்னே இங்கே நடந்தது என்ன?

தமது சொந்த ஆக்கமான மோகன ராகத்திலமைந்த 'நின்னுக்கோரி' வர்ணத்தில் தொடங்கிக் கச்சேரியை விறுவிறுப்பாக்கி கானாலம் அறிந்து—சபையின் இங்கிதம் அறிந்து—சங்கீத உருப்படிகளை மனோதர்மம் என்ற தேனில் தோய்த்தெடுத்து அதனைச் சபையினருக்கு வழங்கிக் கொண்டிருந்தார் ராமநாதபுரம் 'பூச்சி' ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.

இவர் சிறுவயதில் உறங்கும் வேளை தவிர்ந்த ஏனையநேரமெல்லாம் தட்டாரப் பூச்சி போன்று ஓயாது பறந்து திரிவாரம். இதனால் இவரது பாட்டன் பாட்டி இவரைச் செல்லமாகப் 'பூச்சி' என்றனர் அன்று முதல் இந்தப் பூச்சி இவரது பெயரோடு ஒட்டிக் கொண்டது.

பூச்சி அவர்களுக்குப் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் முறையான குருகுலவாசம் கிடைத்ததனால் இவரது சங்கீதம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக— நல்ல கற்பனை வளம் நிறைந்ததாக விளங்கியது. அவர் அடக்கமானவர்; பண்பாளர். ரஞ்சகத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். அதனாற் பக்க வாத்தியகாரரோடு அவர் போராடுவது கிடையாது. சலனமற்ற ரசனை சபையோரிடமிருப்பதைப் பெரிதும் விரும்புவார்.

இப்படியிருக்க இங்கே நடந்துதான் என்ன?

கச்சேரியின் நடுவே பூச்சி வராளிராகம் பாடத்தொடங்கினார். மக்கள் பிரமித்து நின்றனர். அவர் பாடிவிட்டதும் வயலின் வித்துவான் ஸ்ரீகிருஷ்ணையர் வாசிக்கத் தொடங்கினார்கள்

பூச்சி பாடிய வராளிதானா இது என வியக்கும் வண்ணம் ஸ்ரீகிருஷ்ணையர் எப்படி எல்லாமோ வாசித்தார்.

சீதாராமையரைத் தோடி மணந்து கொண்டது போல— நரசையர் பின்னே சங்கராபரணம் சென்றது போல வராளியை ஸ்ரீ கிருஷ்ணையருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்குச் சபையிலிருந்தவர்கள் ஆவன செய்து கொண்டிருந்தனர்.

திருக்கோடிக்காவல் ஸ்ரீ கிருஷ்ணையர் நல்ல குரு பரம்பரையில் வந்தவர். கொத்தவாசல் வேங்கடராம பாகவதர், சாத்தனூர் பஞ்சு ஐயர் ஆகியோரை ஆசான்களாகக் கொண்டவர். இவருக்கு இணை இவரேதான் என்று மக்கள் போற்றும் அளவுக்கு உயர்ந்தவர். அவர் வாசிப்பு- அவர் ஞானம்...

என்னதான் நடந்தது?...!

திருக்கோடிக்காவலின் கற்பனை பூச்சியவர்களது குறுக்கீட்டால் தடைப்பட்டது

இராக ஆலாபனை முடிவதற்குள் வராளி உருப்படியைப் பாடத்தொடங்கி விட்டார் பூச்சி.

பூச்சியிடம் இயல்பாக இல்லாத குணம் இது. அவர் இதனை உணராதது போல ஆனால் உணர்ந்தே செய்தார். மக்கள் திகைத்தனர்; கிருஷ்ணையரோடு அவர்களும் வருந்தினர்.

கச்சேரி மேலே தொடர்ந்தது; நிறைவேறியது.

பூச்சியவர்கள் திருமண வீட்டிலேயே தங்குவதாக ஏற்பாடு. திருக்கோடிக்காவல் அந்தத் தெருவிலிருந்த கானப் பிரியனான தமது நண்பர் ஒருவர் வீட்டில் தங்குவதற்குச் சென்றுவிட்டார்

நண்பரைப் பூச்சி இரகசியமாக அழைத்தார்; அவர் காதுட் கிசுகிசுத்தார்.

'உங்கள் வீட்டு வெளிக் கதவைத் திறந்து வையுங்கள். யாருக்கும் தெரியாமல் நான் அங்கே வரவேண்டும்'

'ஏன்'?

'கிருஷ்ணையர் இன்று தூங்க மாட்டார். வராளி வாசிப்பார்.

'அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'

'கச்சேரியில் அவரது வராளி தடைப்பட்டது. அவதானித்திருப்பீர்கள்'

'ஆமாம், பாவம்! அதைத் திரும்பவும் நினைக்க என்மனம் ஏதோ வேதனைப்படுகிறது. அப்படி ஏன் செய்தீர்கள் என்ற கேள்விக்குறி நண்பனின் முகத்தில் தெரிந்தது.

'பிரதிமத்திம ராகங்களுள் வராளி ஒரு அற்புதமான ராகம். பகை சுரங்கள் லாவகமாக இசைக்கப்படுவதால் பகைமை எங்கோ ஓடித் தொலைகிறது'

'இப்படித்தான் பகைவரையும் நண்பராக்கிக் கொள்வார்களோ?'...

'கருணா ரஸம் விஞ்சி நிற்கும் ராகம். வராளியை மாணவர்களுக்குக் கற்பித்தால் குரு சிஷ்ய பந்தம் நாளடைவில் அறுந்து விடும். அதனால்தான் வராளியைக் குரு சாதகம் செய்யும்போது சிஷ்யன் மறைந்திருந்து கேட்டு அவருக்குத் தெரியாமல் கற்றுக்கொள்கிறான். இதனால்தான் வராளியில் உருப்படிகள் அதிகம் இல்லை.

'பாய்ந்தோடி வரும் நதி தடைப்பட்டால் அடங்கி விடாது; எங்கோ உடைத்துக் கொண்டு ஓடத்தான் செய்யும். கிருஷ்ணையரின் கற்பனையும் ஆற்றலும் இன்று பரந்து விரியும்; அவர் இன்று தூங்க மாட்டார்.

அவர் வராளியை நான் மறைந்திருந்து கேட்க வேண்டும்; வராளி அவருடைய சொத்து!

'ஏன் வந்து நேரே கேட்க மாட்டீர்களா?... மறைந்திருந்தே கேட்கும் மர்மம்?...

'வித்தைக்கு இருவர்; தவத்துக்கு ஒருவர் என்று உமக்குத் தெரியாதா?'

பறம்பு நாட்டுக்கு ஔவையாரை அழைப்பதற்காகத் திருடன் வேடத்தில் வந்த பாரிவள்ளல் அந்த மூதாட்டியின் துணிமுடிச்சைக் கவர்ந்து சென்றான்; அவனது ஆசை நிறைவேறியது- இதுவும் அப்படி ஒரு ஆசையோ...' நண்பர் சிந்தித்தவாறு வீடு நோக்கி நடந்தார். இருளோடு இருளாகப் பூச்சி தன்னைப் பின் தொடர்ந்ததை அவர் அவதானிக்கவில்லை.

பொழுது விடியும் வரை வராளியை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தார் திருக்கோடிக்காவல் ஸ்ரீ கிருஷ்ணையர். அந்த அசுர சாதனையின் பயன்-வராளி அவருக்குத் தாரமானாள்.

# 'ஆஷஸ்' கிண்ணம் அவுஸ்திரேலியாவுக்கே

அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு டெஸ்ட் போட்டிகளில் மூன்றில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. ஆறு டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 'ஆஷஸ்' கிண்ணம் வழங்கப்படும்.

ஓல்ட்டிரபெர்ட் மஞ்செஸ்டரில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தினை வெற்றி கொண்டதன் மூலம் 'ஆஷஸ்' கிண்ணத்தைச் சுவிகரித்து விட்டது. எட்பாஸ்டன் பேபிங்கில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியொன்றே வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துவிட்டது. ஆறுடெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரில் இன்னமும் இரண்டு டெஸ்ட்களே எஞ்சியுள்ள நிலையில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணி வெற்றி கொள்ள முடியாத 3-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இந்த நான்காவது டெஸ்ட் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் அலன்போடர் கடந்த ஐம்பத்தைந்து வருடங்களில் முதன் முதலாக 'ஆஷஸ்' விருதினை இங்கிலாந்து மண்ணில் வைத்து மீட்ட பெருமையையும் பெறுகின்றார். 'ஆஷஸ்' கிண்ணம் கடந்த ஐந்து ஆண்டுகளாக இங்கிலாந்திடமே இருந்தது.

நான்காவது டெஸ்ட்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 260 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஒருகட்டத்தில் ஏழு விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களை மட்டும் பெற்ற இங்கிலாந்து அணி சிமித்-பொஸ்டர் இணைப்பாட்டத்தின் மூலமே 260 ஓட்டங்களை பெற்றது. இங்கிலாந்து அணி சார்பாக ரொபின் சிமித் சிறப்பாக ஆடி 143 ஓட்டங்களைப் பெற்றார். இது இவரது கன்னி டெஸ்ட் சதமாகும்.

பொஸ்டர், கவர் முறையே 39, 35 ஓட்டங்களைப் பெற்றனர். அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் ஜெவ் லோசன் ஆறு விக்கெட்டுக்களை 72 ஓட்டங்களிற்கும்,

**ராஜ்மோகன்**

சுழற்பந்து வீச்சாளர் ஹோர்ண்ஸ் மூன்றுவிக்கெட்டுக்களை 59 ஓட்டங்களிற்கும் கைப்பற்றினர்.

இங்கிலாந்தை தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி 447 ஓட்டங்களிற்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஜெவ்மார்ஷ்-மைக் டெயிலர் ஜோடியினர் இணைந்து ஆரம்ப இணையாட்டத்தில் 134 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரீவ்வோர் 92 ஓட்டங்களும் டெயிலர் போர்டர், ஜோன்ஸ் முறையே 85, 80, 69 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்தில் பிரேசர் 3 விக்கெட்டுகளையும் பொஸ்டர் இயன்போத்தம், குக் ஆகியோர் 2 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் 264 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஓர் கட்டத்தில் 6 விக்கெட்டுகளுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஜக் றசல் ஆட்டமிழக்காது 128 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அவுஸ்திரேலியாவின் ஓல்டமன் ஐந்து விக்கெட்டுகளையும், லோசன் மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

வெற்றிபெற 78 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இனிங்ஸில் ஆடத்தொடங்கிய அவுஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்கள் பெற்று வெற்றியடைந்தது இவ்வாட்டத்தின் சிறந்த வீரராக ஜெவ் லோசன் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் டிரென்ட் பிறிச் நொட்டிங்கமில் இம் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## பல் சுவை

# முகப்பரு

முகப்பரு இளைஞர் முகத்திலே தோன்றி இம்சை தரும். அழகைக் கெடுக்கும் - வஸ்து, இதனைத் தவிர்ப்பதற்கு கடைகளில் ஏராளமான களிம்புகள், வாரமாத இதழ்களிலோ விதவிதமான குறிப்புக்கள். இத்தனைக்கும் இந்த முகப்பரு ஒரு நோய் என்றும், அதனை உடைத்துவிட்டால் தொற்றுதலால் பிறஇடங்களிலும் பருவரும் என அநேகர் தவறாக நினைத்து விடுகிறார்கள்.

முகப்பரு முகத்திற் கொழுப்பு, இனிப்பு ஆகியன சேர்வதால் ஏற்படுகின்றது நாம் உண்ணும் உணவிற் கொழுப்பு, இனிப்பு ஆகியன இருக்கும். இந்த இனிப்புக்களும் சமிபாடடைந்தபின் தோலின் கீழ் சேமிக்கப்படுகின்றன. நம் கை, கால், உடல், முகம் என அங்கங்கே கொழுப்பு சேமிக்கப்படும். கை, கால், உடலிற் சேர்ந்த கொழுப்பு நாம் ஓடியாடி வேலை செய்வதனால் இழக்கப்படுகின்றது. ஆனால் முகத்திற்கு அசைவு குறைவு. ஆகவே கொழுப்பு அதிகமாக அங்கு சேர்கின்றது. சேர்ந்த கொழுப்பு முகத்தில் திட்டுத் திட்டாக படிந்துவிடுகின்றது இத்திடல்களே முகப்பருக்கள். நாளடைவில் இத்திடல்கள் விரிவடையும். அதனுள் இருந்த கொழுப்புப்படிவுகள் ஆவியாகிவிடும். பின்னர் மீண்டும் வேறிடத்தில் கொழுப்புத் திடல்கள் தோன்ற ஆரம்பிக்கும். தானாகவே தோன்றி மறையும் முகப்பருக்கள் தோன்றி மறைய அதிக நாட்கள் எடுக்கும்.

நாமாக உடைத்து விட்டால் அடுத்த 24 மணிநேரங்களுக்குள் கொழுப்பு வேறு இடத்தில் படிந்து வெகுவிரைவில் முகப்பரு ஏற்பட்டுவிடும் இதனைத் தவிர்ப்பதற்கு கொழுப்புகலந்த எண்ணெய்ப் பதார்த்தங்கள், சொக்லேற், டொபி, போன்ற இனிப்பு வகைகளை உண்ணுதலைக் குறைக்கவேண்டும். ஒழுங்காக யோகாசனப் பயிற்சி செய்ய வேண்டும்.

களிம்பு போன்றவற்றை பயன்படுத்துவதாயின் மாலை வேளையில் வெதுவெதுப்பான நீரில் முகத்தைச் சவர்க்காரம் தேய்த்துக் கழுவவேண்டும். அப்போது தான் முகம் மிருதுவாக இருக்கும். அவ்வேளையில் களிம்புகள் பூசினால் அதன் தாக்கம் தீவிரமாக இருக்கும். வெகுவிரைவில் குணமடைந்து விடும்.

முகப்பருபற்றி ஆய்வுகள் மேற்கொண்ட ஒரு மருத்துவர் குழு தந்த முடிவு இது.....

பெண்களுக்கு 12வயதுமுதல் 13 வயது வரையான காலத்தில் முகப்பரு தோன்றும். 18 வயது வயதளவில் மறைந்துவிடும்.

ஆண்களுக்கு 14 முதல் 15 வயதிற்குள் முகப்பரு தோன்றி 23 வயதிற்குள் முகப்பரு மறையும். இம்முகப்பரு பருவத்தின் காரணமாக சில சுரப்பிகளால் உருவாகும். இவை குறித்த எல்லைக்குள் மறையாவிடின் களிம்புகளைப் பூசலாம். ஆயுள்வேத முறைகளைப்பயன்படுத்தலாம். இத்தனைக்கும் பயன் எதுவும் கிட்டவில்லையெனின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறையையே நாடவேண்டும். முகப்பரு காரணமாக ஏற்பட்ட தழும்புகள் புள்ளிகளை நீக்க படுக்குமுன் ஒலிவ் எண்

iii ஆம் பக்கம் பார்க்க

திருப் பார்கடல்

முரசொலி வார மலர்

# எழுத்துச் சீர்திருத்தம் விரிவு பெறல் வேண்டும்

வ. இராசையா

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி இன்று உண்டாகியிருக்கும் விழிப்புணர்வு தூண்டப்படுதல் வேண்டும்; நெறிப் படுத்தப்படுதலும் அவசியம். இந்த நோக்குடனேயே இங்கு சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இக் கருத்துக்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆராயும் தமிழறிஞர்களுக்குப் பயன்படும் என நம்புகிறோம்.

'தமிழ் பழமை வாய்ந்த மொழி; இலக்கியச் செல்வம் நிறைந்த மொழி; பேச்சு வழக்கு அழியாத மொழி.' —இவையெல்லாம் தமிழராகிய எங்களுக்குப் பெருமை தருவன என்பது உண்மையே. ஆயினும், நாம் இவ்வளவுடன் மனநிறைவு கொண்டு இருந்து விடுதல் கூடாது தமிழ் நமது இன்றைய தேவைகளுக்கு எந்த அளவில் பயன்படுகிறது; பல்வேறு துறைகளாகக் கிளைத்து வளருகின்ற அறிவியற் கருத்துக்களைச் சரியாகவும் நுட்பமாகவும் வெளியிடக் கூடிய ஆற்றல் நமது மொழிக்கு இருக்கிறதா; அந்த ஆற்றல் விஞ்ஞான யுகத்துக்கு ஏற்றவகையில் வளர்ந்து வருகிறதா—என்னும் விஷயங்களையும் இத்தருணத்தில் நாம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். வளர்ச்சியடைந்த உலகமொழிகளுடன் தமிழையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு நோக்கினுல், 'இன்றைய அறிவியல்துறையின் பரந்துபட்ட கருத்துக்களை வெளியிடும் முழு ஆற்றல் தமிழுக்கு இல்லை; அது பின்தங்கி விட்டது' என்னும் கசப்பான முடிவுக்கே நாம் வந்து சேர நேரிடும்.

தமிழ் வாழும் மொழியாக எதிர்காலத்திலும் நிலைத்திருக்க வேண்டுமானுல், அதன் வலு-வளம் துரிதமாக அதிகரிக்க வேண்டும். அதன் வளர்ச்சிப் பாதையில் தேக்க நிலை ஏற்படலாகாது.

இந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஆக்க பூர்வமான துரித செயற்பாடுகள் பலவற்றை நாம் செய்ய வேண்டியிருக்கும். அவற்றுள் இன்றியமையாத ஒரு செயற்பாடு தமிழ் எழுத்துச் சீர்திருத்தம். நவயுக சேவைக்கு மொழியானது தன்னை ஆயத்தம் செய்து கொள்வதுதான், இது.

எழுத்துக்கு, ஒலிவடிவம், வரிவடிவம் என இரண்டு உருவங்கள் உண்டு. தமிழ் மொழி இந்த இரண்டுவடிவங்களிலும் அநேக சீர்திருத்தங்களை வேண்டி நிற்கின்றது. உலகிலுள்ள செவ்விதான மொழிகளின்எழுத்தமைப்புக்களுடன் தமிழ் எழுத்துக்களை ஒப்பு நோக்கினுல், தமிழ் எழுத்தமைப்பில் இருக்கிற குறைபாடுகள் துலக்கமாகும். மொழியியல் வல்ல அறிஞர்கள் அவற்றைக் கண்டறிந்து, நமது மொழி வளம்பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் தமிழ் எழுத்திற் சீர்திருத்தம் செய்தல் வேண்டும்.

அண்மைக் காலத்தில் தமிழகத்திலே அறிமுகஞ் செய்யப்பட்டு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் கைக்கொள்ளப்படும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் முழுமையான ஒரு சீரமைப்பு அல்ல; மேலெழுந்த வாரியான ஒரு சிறு முயற்சி. தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவத்திலே நெடுங்காலமாகத் துருத்திக் கொண்டிருந்த சில எழுத்து வடிவங்களை மாற்றி அமைத்திருக்கிருர்கள்; அவ்வளவுதான்- தமிழ் நெடுங்கணக்கில் இந்த ஒவ்வாத வரிவடிவங்கள் இருப்பதை, விவேகமுள்ள சிறுவர்கள் தமது படிப்பின் போது சுட்டிக்காட்டி வினு எழுப்புவதை நாம் கண்டிக்கிறோம். எவ்வாருயினும், இந்தச் சீர்திருத்தம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆக்க பூர்வமான முதற்படி நடவடிக்கை என்பதை மறுப்பதற்கில்லை.

இன்று இலங்கையில், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்று கூறும் போது, தமிழ் நாட்டினுல் அறிமுகஞ் செய்யப்பட்ட இந்தச் சீரமைப்பையே பலரும் மனதிற் கொள்கிருர்கள். இச் சீர்திருத்தம் எழுத்தின் வரிவடிவில் செய்யப்பட்ட சீரமைப்பு; ஒலிவடிவில் அல்ல. இந்தச் சீரமைப்புப் பின்வருமாறு அமைகிறது.

(1) ஆகார உயிர்மெய்களில் ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துவடிவங்களும் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பிரதியீடாக ணா, றா, னா என்னும் புதிய - இயல்பான அமைப்புக்கள்புகுத்தப்பட்டுள்ளன.

(2) ஐகார உயிர்மெய்களில் ணை, லை, ளை, னை ஆகிய வரிவடிவங்கள் அகற்றப்பட்டு, அவ்விடங்களுக்கு முறையே ணை, லை, ளை, னை ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

ஆக, இந்த 7 எழுத்துக்களே சீர்திருத்தம் அடைகின்றன. இது தவிர, ஒகர, ஓகார உயிர்மெய்களிலும் 6 எழுத்துகள் அமைப்பில் மாற்றம் பெறுகின்றன. ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துக்களையும் சீரமைத்ததினுல் ஏற்பட்ட இயல்பான விளைவு இது, இதன்படி ணொ, றொ, னொ என்பன முறையே ணொ, றொ, னொ, என அமைகின்றன. ணோ, றோ, னோ என்பன முறையே ணோ, றோ, னோ என்று ஆகின்றன.

இந்தச் சீரமைப்பின் பேருக ஆகார, ஐகார, ஒகர, ஓகார உயிர்மெய்களின் வரிசை ஒவ்வொன்றிலும் அறிவியல் ரீதியான ஒரு சீரமைப்புப் பேணப்படுகின்றது அத்துடன் தமிழ் நெடுங்கணக்கில் இதுவரையிருந்தும் வந்த பொருந்தாத எழுத்து வடிவங்கள் ஏழு அகற்றப்படுவதனுல், தட்டச்சு முதலிய பொறிகளில் அமைப்பதற்கு இயைபான மொழியாகத் தமிழ் ஒருபடி முன்னேறவும் செய்கிறது.

தமிழ்நாடு நடைமுறைப் படுத்தியுள்ள இந்தச் சீர்திருத்தம் வெகு எளிமையானது. இதனை ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் தயங்கவும் கூடாது: காலதாமதம் செய்தலும் கூடாது.

தமிழ்நாடு இந்தச் சீர்திருத்தத்தை இன்னும் சற்றே விரிவுபடுத்தியிருக்கலாம். உகர உயிர்மெய்கள், ஊகார உயிர்மெய்கள் ஆகியவற்றின் வரிவடிவங்களை அவர்கள் சீர்ப்படுத்தியிருக்க வேண்டும். செய்திருப்பதிலும் பார்க்க செய்யவேண்டிய இச் சீர்திருத்தம் முக்கியமானது; அதிக நன்மை தரக் கூடியது.

முதலில் உகர உயிர் மெய்களின் வரிவடிவங்களை நோக்குவோம். அங்குள்ள 18 எழுத்துக்களிலும், உகரவுயிர் கலந்திருப்பதை குறிப்பதற்குச் செய்யப்பட்ட உருவமாற்றங்களை மூன்று ஆக வகைப்படுத்தலாம். (1) கு என்னும் எழுத்துப் போன்று சுற்றிவளையும் அமைப்பு; இதில் 6 எழுத்துக்கள்.

(2) நு போன்று கால்பெறும் அமைப்பு: இதில் 5 எழுத்துக்கள்.

(3) து போன்று மேல் நோக்கிய கை உடைய அமைப்பு: இதில் 7 எழுத்துக்கள்.

ஊகார உயிர்மெய்யெழுத்துகளின் வடிவில் காணப்படும் உருவமைப்புக்கள் 5 வகையாகும் (1) கூ என்னும் உருவம்; இதில் 1 எழுத்து (2) பூ போன்ற அமைப்பு; இதில் 5 எழுத்து (3) நூ போன்ற அமைப்பு; இதில் 4 எழுத்து. (4) சூ போன்ற அமைப்பு; இதில் 1 எழுத்து (5) னூ போன்ற அமைப்பு இதில் 7 எழுத்து.

உகர உயிர்மெய்களிடையே உள்ளத்திலும் பார்க்க ஊகார உயிர்மெய்களிடையே வடிவப் பல்லினத்தன்மை அதிகம்.

உகர, ஊகார உயிர்மெய் வரிசையில் மற்றுமொரு சீர்கேடும் இருக்கிறது. ஆ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர்களுக்குரிய உயிர்மெய் எழுத்துகளை உருவாக்கும் போது, மெய் வடிவங்களுடன் ஒன்று அல்லது இரண்டு குறிகள் சேர்க்கப்படுகின்றன. அக்குறிகள் மற்றைய எழுத்துடன் ஒட்டிக் கலந்துவிடாமல் தனித்து நிற்கின்றன. உ-ம்: கா என்னும் எழுத்திலுள்ள ா உகர, ஊகார உயிர்மெய்களில் இப்படியான தனிக்குறியீடும், தனிமைநிலையும்இல்லை. அங்கே க, ங, முதலிய எழுத்துகள் தமது வடிவத்தையே திரிபாக்கிக் கொள்ளுகின்றன; உருமாற்றம் அந்த அந்த எழுத்தினுள்ளேயே ஏற்பட்டு விடுகிறது. கு, ஙு என்று இப்படியாக.

இகர, ஈகார, உயிர்மெய்களின் அமைப்பும் ஒருவிதத்தில் இது போன்றதாயிருப்பினும், அங்குள்ள இருவகை விசிறிகளையும் தனிமைப்படுத்துதல் முடியும்.

உகர, ஊகார உயிர்மெய்களுடைய வரிவடிவ அமைப்பு அறிவியல் நோக்குக்குப் பொருந்தாத்தாய் இருக்கிறது. மற்றைய உயிர்மெய்களை உருவாக்குவதில் கைக்கொள்ளப்பட்ட நெறிமுறை இங்கே கையாளப்படவில்லை. அதனுல் மொழிச்சீரமைமையை இவ்வெழுத்துக்கள் சிதைக்கின்றன. தமிழ் பயிலும் சிருருக்கு இந்த 36 எழுத்துகளும் 36 பிரச்சினைகள்; அவர்களது சக்திக்கும் படிப்பூக்கத்துக்கும் ஒரு சுமை.-இதனை நாம் மனங் கொள்ளுவோமானுல் உகர, ஊகார உயிர்மெய்களுக்கும் ஒவ்வொரு குறியைப் பயன்படுத்த வேண்டும் என்னும் முடிவுக்கு வருவோம்.

உகர உயிர் மெய்யைக் குறிப்பதற்கு ு என்னும் குறி ஊகார உயிர் மெய்யைக் குறிப்பதற்கு ூ என்னும் குறி, இவை இரண்டும் ஏற்கனவே நம்மிடை வழக்கில் இருக்கின்றன, உ+ம் ஸுப்பிரபாதம், விஷு புண்ணியகாலம் ,ஜூலை மாதம்-மேற்குறிப்பிட்ட குறிகளைச் சேர்த்துக்கொள்ளும் போது க‍ு, ங‍ு, ச‍ு...என்று உகர உயிர் மெய்கள் அமையும் க‍ூ ங‍ூ ச‍ூ ஊகார உயிர்மெய்கள் அமையும். இப்படிச் சிக்கலற்ற விஞ்ஞான பூர்வமான எழுத்துக்கள் உண்டாகின்றன. இந்தச் சீரமைப்பில் கு, ஙு,..., கூ, ஙூ.. முதலிய 36 வடிவங்கள் நீக்கப்படுகின்றன. ு, ூ ஆகிய இரண்டு குறிகள் மாத்திரம் சேர்க்கப்படுகின்றன. அதாவது 34 பிரச்சினைகள் தீர்வு பெறுகின்றன.

விளையக்கூடிய நற்பயன்களைக் கருத்திற்கொண்டு உகர, ஊகார உயிர்மெய்களின் இப்போதைய வரிவடிவத்தையும் திருத்தியமைத்தல் வேண்டும். காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் கி. வா. ஜகந்நாதன் உகர, ஊகார மெய்களின் வடிவமைப்புக்கு ு ூ ஆகிய குறிகளை உபயோகிக்கலாம் என எழுதியிருந்ததமை கருத்திற் கொள்ளத்தக்கது.

மொழியிலே அதிக எண்ணிக்கையான எழுத்துகள் இருத்தல் அந்த மொழிக்கு எழுத்துப் பொறிகளை உருவாக்குவதற்குப் பெரிய இடையூருகும். ஆகார உயிர் மெய்

iii —ஆம் பக்கம் பார்க்க

---



## நெஞ்சக் குகையினில் நின்றருள் போழிக!

இருள் நிறை நெஞ்சம் மருள்நிறை சிந்தை
எதனினும் தோல்வி இடர்வாழ்வு
எவரையும் கண்டு நிதநிதம் அஞ்சி
இனியிலை எங்கட் கெதிர்காலம்
பொருளிலை மக்கள் துணையிலை எங்கும்
புகலிலை என்றே புலம்புற்றுப்
பொதியிழி புடலை நிலைபெற வழிகள்
*புதியன நாடும் புலையோராய்
மருளுறு கின்ற மடையர்கள் எம்மை,
மயிலினி லேறி வருவோனே!
மதியொளி தந்து சிறுமைக ளைந்து
மகத்துவ ராக்கி விடவேணும்
அருள்நிறை நல்லூர் எழில்பெற வந்தங்
கமர்ந்திடு மெங்கள் அமிர்தாகி
அடியவர் நெஞ்சக் குகைதனில் நின்றே
அருள்பொழி கந்தப் பெருமானே!

* பொதி+இழிபு+ உடலை=பொதியாகிய இழிந்த உடலினை இழிவுகள் பொதிந்த உடலினை எனவும் கொள்ளலாம்.

**சொக்கன்**

(இன்று நல்லூர் முருகன் கொடியேற்றம்)

---

## செயற்கரிய செய்தோர்

### கபிலர்

சங்கப்புலவராகிய கபிலர் பாரிவள்ளலிடத்துப் பேரன்பு கொண்டவர். பேரரசர்களால் எல்லாம் மதிக்கப்பெற்ற அவர், அவர்களோடு எல்லாம் வாழ விரும்பாது பாரியுடன் வாழ்வதையே பெரிதும் விரும்பினுர். பாரியின் கொடையும், நற்குணங்களும் கபிலரை மிக மிகக் கவர்ந்து விட்டன.

பாரி பாண்டிய மன்னனுல் கொல்லப்பட்டபோது கபிலர் துடிதுடித்தார். தமது உயிரை உடனே விட நினைத்தார். ஆயினும் பாரியின் புதல்வியராகிய அங்கவை சங்கவை இருவரின் நலன் குறித்துச் சில காலம் வாழநினைத்தார்.

தந்தையையும், தாயையும் இழந்த பாரி மகளிர் இருவரையும் அழைத்துக் கொண்டு இருங்கோவேளிடமும் விச்சிக்கோவிடமும் சென்று அவர்களை மணஞ் செய்து கொள்ளுமாறு வேண்டினுர். அவர்கள் உடன்படவில்லை.

பின்னர் கபிலர் கடையெழு வள்ளலுள் ஒருவனுகிய காரியை அடைந்து தான் வந்த வரலாற்றைக் கூறினுர். கபிலரின் வேண்டுகோளுக்கு இணங்கிய காரி தமது மக்கள் இருவருக்கும் அங்கவை சங்கவையை மணம் செய்வித்தார்.

தமது கடமை முடிந்ததை உணர்ந்த கபிலர் பாரியின் பிரிவைப் பொறுதவராகி வடக்கிருந்து உயிர்நீத்தார்.

தமது பாடல்களால் சங்க இலக்கியத்தில் நிலைத்த கபிலர் தமது நண்பராகிய பாரியில் வைத்த மதிப்பினுலும், பாரியின் புதல்வியர்க்குச் செய்த பேருதவியாலும், பெரும் பண்பாலும் மனித இதயங்களில் எல்லாம் நிலைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# மகாபொல கொடுப்பனவு

## 2-ம், 3-ம் தவணைப்பணம் - 1989

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்பட்டுள்ளது

**2-ம் வருடம்**

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| கலைப்பிரிவு | 15. 08. 89 காலை | 9. 30 - 12. 00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 21. 08. 89 பி. பகல் | 1. 30 - 3. 00 |
| வர்த்தகப் பிரிவு | 31. 08. 89 பி. பகல் | 1. 30 - 3. 00 |

**3 ம் வருடம்**

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| கலைப்பிரிவு | 15. 08. 89 பி. பகல் | 1. 30 - 3 00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 22. 08. 89 காலை | 9. 30 - 12 00 |
| வர்த்தகப்பிரிவு | 01. 09. 89 காலை | 9. 30 - 12. 00 |

**4-ம் வருடம்**

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| கலைப்பிரிவு | 17. 08. 89 காலை | 9. 30 - 12. 00 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 22. 08. 89 பி. பகல் | 1. 30 - 3. 00 |
| வர்த்தகப்பிரிவு | 01. 09. 89 பி. பகல் | 1. 30 - 3. 00 |

**விஞ்ஞான பீடம்**

| வருடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| 2-ம் வருடம் பௌதீகம் உயிரியல் | 08. 08. 89 காலை | 9. 30 - 12. 00 |
| 3-ம் வருடம் " | 09. 08. 89 பி. பகல் | 1. 30 - 3. 00 |
| 4-ம் வருடம் " | 29. 08. 89 காலை | 9. 30 - 12. 00 |

1988-ம் ஆண்டின் நிலுவைப்பணத்தையும், 1989-ம் ஆண்டு 1-ம் தவணை (யூன் 89) பணத்தையும் எடுக்கத்தவறிய மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**2-ம், 3-ம், 4-ம், 5-ம் ஆண்டு மாணவர்கள்**

கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, மருத்துவப் பிரிவு:

| திகதி | நேரம் |
|---|---|
| 07. 08. 89 மு. பகல் | 9. 30 - 12. 00 |
| 08. 08. 89 பி. பகல் | 1. 30 - 3 00 |
| 28. 08. 89 மு. பகல் | 9. 30 - 12. 00 |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. 2/- பெறுமதியான முத்திரை
3. மாணவர் பதிவுப் புத்தகம்

பதிவாளர்

08083

# DIPLOMA IN NURSING

## புதிய தாதியர் பயிற்சிநெறி

ஆரம்பம்: 09- 08- 1989

வெளிநாடு செல்பவர்க்காக

விசேட ஆங்கில வகுப்புக்களும், பாமஸி பயிற்சியும்

பிரபல விரிவுரையாளர் குழு

உங்கள் பதிவுகட்கு:

GROUP

**North Ceylon Technical Institute**

14, ST PETER'S LANE

Hospital Road

JAFFNA

08068

# O/L Day Class

புதிய, பழைய பாடத்திட்டத்திற்கமைய

ஆரம்பம் 06 - 08 - 1989 Sun 8.00 a m

## நிரு ரியுசன் சென்ரர்

கோண்டாவில்

08057

# உடனடிப் பிரயாண விசா ஒழுங்குகள்

லண்டன், ஹொலண்ட், ஜேர்மன்

கொழும்பிலிருந்து நேரடிப்பயணம்

இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன், கனடா, சுவிஸ்.

இந் நாடுகளுக்கு இங்கிருந்து விசாவுடன் எகிப்து சென்று அங்கிருந்து விரும்பிய நாடுகளுக்குச் செல்ல விசா மற்றும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

அரைவாசிக் கட்டணம் எகிப்தில் செலுத்த வசதியுள்ளவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இந்நாடுகளில் தங்கியுள்ள உறவினர்களிடம் செல்ல முயற்சிப்பவர்களுக்கும் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

## ட்ரவல்ஸ் மகேந்திரா

155/5, குருசோ வீதி, சுண்டுக்குளி

யாழ்ப்பாணம்.

கொழும்பு:

112, கதிரேசன் வீதி, கொழும்பு-13

08089

# கண்ணீர் நினைவுகள்



செல்வி

## உஷாதேவி பாலசுப்பிரமணிய சர்மா

[ஆசிரியை]

தோற்றம்: 08-01-1964 பிரிவு: 06-08-1988

சிரித்துச் சிரித்துப் பேசிய சித்திரமே - நீ
வாழ்ந்த நாளெல்லாம் நாம் சிரித்தோம்
துடித்துத் துடித்துத் தீக்கு இரையாகி - நீ
போன நாள் முதலாய் அழுகின்றோம்
பல காலம் சென்றாலும் கண்மணியே-உன்
பிரிவு இதயத்தில் ஆறாத காயந்தான்!
பாவிகள் நாம் செய்வதெல்லாம் - உன்
புனிதஆத்மாவின் அமைதிக்காய்ப் பிரார்த்தனைகள்

வேணியடி வீதி,
மீசாலை தெற்கு,
மீசாலை.

துயரில் தவிக்கும்
அப்பா, அம்மா,
தங்கை, தம்பி.

08052

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வீட்டுடன் அல்லது வெறும் காணி வாடகைக்கு அல்லது வாங்குவதற்குத் தேவை. தொடர்பு:- யாழ். சைனீஸ் றெஸ்ரரேன்ற் (P.V.T. Ltd) முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 08074

### சோதிடம்

வெற்றிகள் குவிகின்றன கடிதம் மூலம்பெயர் மாற்றம் செய்பவர்கள்50 ரூபா காசுக்கட்டளை "E.V.K. ANPALAGAN" என்ற பெயருக்கு அனுப்புக அன்புஜீ சோதிட நிலையம் (விமலாதேவி ஸ்ரோர்ஸ்) உயரப்புலம் ஆனைக்கோட்டை. 08092

### கல்வி

G. C. E. (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கு 22 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10,கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 08094

### எழுத்துச்...

(12ஆம் பக்கத்தொடர்ச்சி)
வரிசையில் 3–ம், ஐகார வரிசையில் 4–ம், உகர ஊகார உயிர்மெய் வரிசைகளில் 36–ம் ஆக 43 எழுத்து வடிவங்கள், நாம் மேற்கொள்ளக் கூடிய இந்தச் சிறிய சீர்திருத்தத்தினால் தமிழில் அகற்றப்படுகின்றன. இரண்டு குறிகளே புகுத்தப்படுகின்றன. ஆக41 இடம் இலாபம் இதனால் அச்சகங்களிலுள்ள எழுத்தறைகளில் நாற்பத்தொரு அறைகள்வெறுமையாகின்றன. அச்சுக்கோப்பாளருக்கு வேலை எளிதாகிறது. எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவதால் தட்டச்சு,லைனோரைப், ரெலி பிறின்ரர் முதலாம்அச்சுப்பொறிகளில் இடம் மிஞ்சும். அத்துடன், தமிழுக்கு வேண்டிய புதிய வரிவடிவங்களையும் மேற்குறிப்பிட்ட பொறிகளில் அமைப்பதற்கு இடவசதியும் ஏற்படும்.

தமிழிலுள்ளஎழுந்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தான் நாம் விரும்பும் எழுத்துச் சீர்திருத்தத்தினது நோக்கம் என்று யாரும் எண்ணக்கூடாது. எழுத்துச் சீர்திருத்தத்திலே தமிழில் உள்ள வரிவடிவங்கள் நீங்குகின்றன என்பதுதான் உண்மை. தமிழ் மொழியின் வளத்துக்குப் புதிய புதிய ஒலிவடிவங்களும் வரிவடிவங்களும் தேவைப்படுகின்றன அவற்றைச் சேர்த்துக் கொள்வதற்கு இந்த எழுத்துக் குறைப்புச் சாதகமாக அமையும்.

தமிழ்நாட்டிலே மேற்கொள்ளப்பட்டிருக்கும் எழுத்துச் சீர்திருத்தத்திலே உகர, ஊகார உயிர்மெய்களின் சீரமைப்பையும் சேர்த்திருந்தால், அந்தச் சீர்திருத்தத்தி மேலும் ஒரு படி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். அவர்கள் இதனைச் செய்யத் தவறிவிட்டனர் என்பதற்காக நம்நாட்டு அறிஞர்களும் இவ்விடயத்தில் தயக்கம் காட்டுதல் கூடாது நாம் துணிவுடன் செயற்பட்டு முடிவெடுத்தல் வேண்டும் அங்ஙனம் நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தம், அது சரியானது என்பதால்,ஏனையநாடுகளின் தமிழர்களாலும் காலகதியில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது உறுதி.

### முகப்பரு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணெயை முகத்தில் தேய்த்தால் நாளடைவில் மறைந்துவிடும்.

இதுதவிர முகப்பரு ஏற்படாமலே முகத்தில் கரும்புள்ளிகள் ஏற்படலாம். பெண்களுக்கே இது அதிகமாக ஏற்படும். இது சூரியக் கதிர்விச்சு மூலமாகவே ஏற்படுகின்றது. இதற்கு ஐதரோகியூனைன் என்ற களிம்பை பூசி வந்தால் இது மறையும் என மருத்துவ ஆலோசகர்கள் கூறுகின்றார்கள்.

- முகத்தை வெதுவெதுப்பானநீரால் தேய்த்துக் கழுவி உலர்ந்த துணியினால்துடைத்தபின் பாலிற் சாதிக்காயை உரைத்து முகப்பருக்களின் மீது பூசினாற் பருக்கள் மறைந்துவிடும்.
- முகப்பருக்களின் மேல் முட்டையின் வெள்ளைக் கருவை தடவி வந்தால் பரு மறைந்து விடும்.
- தக்காளிப்பழம், கரட், வெண்டைக்காய் முதலிய காய் கறிகளைக் கிரமமாக உணவிற் சேர்த்தாலும், பருக்கள் மறையும்.

### வருடாந்த உற்சவம்

உடுவில் கிழக்கு கற்பகவிநாயகராலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பதின் நான் காம்திகதி சப்பரத்திருவிழாவும், பதினைந்தாம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

## A/L 89, 90, 91

வகுப்புக்கள் யாவும் ஆரம்பமாகியுள்ளன

## SHAMROCK ACADEMY

CHUNDIKULI JAFFNA

08093

## ★ COMPUTER COURSES ★

Diploma in Basic Programming

புதிய பிரிவுகள் 12. 08. 89 ஆரம்பம்

MODULE-I - 8.30 A M.
MODULE-II - 10.00 A.M.

சேரும்போது செலுத்த வேண்டியது: Rs. 500/-

- ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட பிரிவிற்குரிய மாணவர்கள் அனைவரும் தத்தமக்குரிய பிரிவுகளில் உடனடியாக சேர்ந்து கொள்ளலாம்.
- மல்லாகம் கிளையில் 11. 8. 89, 4.30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகும். ஏற்கனவே படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் மல்லாகம் IDP காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

IDP Computer Centre
342, K.K.S. Road - Jaffna

08084

## நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி 'ஷப்ரு'

உங்கள் நிதியத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,867 | 25,811.713 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,208 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி ஈ. கருணரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு எஸ் பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond) முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி நவரட்ணம்
A. I. B. (Lond) பொது முகாமையாளர்

திரு. ஏ எம் எச் பாரி
B. A. (Hons)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

08091

SHABRA UNICO FINANCE LIMITED
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4, TEL 589310, 500576.
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
யாழ் முகவர்:207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

# போக்குவரத்து சபை ஊழியருக்கு பழைய சம்பள அதிகரிப்பு நிலுவை

போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கோரிய பழைய சம்பள அதிகரிப்புக்களின் நிலுவைத்தொகையின் மிகுதிப்பணம் அக்டோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களில் வழங்கப்படவுள்ளது,

இந்த நிலுவையின் ஒரு பகுதி போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு ஜூலைமாத சம்பளத்துடன் வழங்கப்பட்டிருந்தது.

ஊழியர்களின் ஜூலைமாத அடிப்படைச் சம்பளத்துடன் 45 ரூபா சம்பள அதிகரிப்பும் சேர்த்து வழங்கப்பட்டிருந்தது இம்மாதம் வரையிலான மூன்று மாதங்களுக்கான ஊழியர்களின் சம்பளத்தையும் 45 ரூபா மற்றும் 180 ரூபா சம்பள அதிகரிப்புக்களையும் வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சு திறைசேரியிடம் 49 கோடி ரூபா பெற்றுள்ளது,

45 ரூபா சம்பள அதிகரிப்பு 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட வேண்டியது. 180 ரூபா சம்பள அதிகரிப்பு 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட வேண்டியது

ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு நிலுவையை கணக்கிடுவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதனல் 45 ரூபா சம்பள அதிகரிப்பின் நிலுவைப்பணம் அக்டோபர் மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் இருந்து இன்று யாழ்தேவி ரயில்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ்தேவி ரயில் சேவை இன்று நடைபெறும். காலை ஒன்பது மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திலிருந்து யாழ். தேவி புறப்படும்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி ரயிலில் மிகக்குறைந்தளவு பயணிகளே வந்திருந்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையை நடாத்துவதில் புகையிரதத் திணைக்களம் தற்பொழுது புதிய நெருக்கடியை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கான ரயில்களில் அனுராதபுரத்திற்கு வடக்கே பணிபுரிவதற்கு புகையிரத ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனராம். இதனல் தாமாகவே முன்வரும் ஊழியர்களைக் கொண்டே யாழ்ப்பாணத்திற்கான ரயில்சேவையைநடாத்த வேண்டியநிலை உருவாகி வருகின்றதாம்.

## தெற்கில் சம்பவம்

தெற்கில் கடந்த இருபத்திநான்கு மணிநேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் ஒருவர் உட்பட பத்தொன்பது பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## வல்வெட்டித்துறை...

மந்திகை வைத்தியசாலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வை இந்திராணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள காயமடைந்த எண்பத்திமூன்று பேரில் பெரும் பாதிப்புக்குள்ளானவர்களின் விபரம்: எஸ் வள்ளியம்மை (75), து.ராசு(32), எஸ் சிவானந்தம் (28), மே. பாலகிருஷ்ணன் (31), எல். சுசீலாதேவி (40), எஸ். ரவீந்திரன் (19), எஸ் ஜெயராஜா (23), எஸ். வசந்தகுமார் (35)

## வடகிழக்கில்...

பொலிஸ் படையை நியமிக்க தேவையான சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மாகாண அரசுகளுக்கென ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரத்தில் எவ்வித மாற்றமும் இருக்காது எனவும் அமைச்சர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## வல்வையில்...

ஏற்பட்டுள்ளதால் மக்கள் பொது நிறுவனங்களிடம் உதவி கேட்டுள்ளனர்.

புதன்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் அடையாளம் காணப்பட்டோரின் விபரங்கள் வருமாறு.

பொலிகண்டியைச் சேர்ந்த சோதிலிங்கம் ரமேஷ்குமார் (19), விஜயரட்ணம் முரளிதரன் (19), செல்வரத்தினம் சிவமணி (39).

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குமரவேல் செல்வன் (19), எஸ். இராசேந்திரம் (25), அருட்பிரகாசம் ரவி (18), மேதாவிநடராஜா ரவீந்திரன் (31), ஆதி அருணுசலம் சுந்தரேஸ்வரன் (11), எஸ்.சுப்பிரமணியம் (சுப்பிரண்ட் சேவயர்) (65), இராசகுரு குண்டக்கா (36), இராசகுரு செல்வன் (14), எஸ். இளையபெருமாள் (70), அமிர்தம் உமாதேவி (26), எஸ். சசி (01), ஈஸ்வரமூர்த்தி ராஜலஷ்மி (24), கே. சிவனேஸ்வரராஜா (36), பொன்னம்பலம் ரஞ்சித்குமார் (26), பொன்னுத்துரை சண்முகலிங்கம் (45), ஆறுமுகசாமி வண்ணக்கிளி (28), எஸ். கணேசலிங்கம் (35).

சில சடலங்கள் திருவில், வித்தனை, கப்பல்கட்டும் தொழிற்சாலை, வல்வை பெற்ரேல் நிலையத்துக்கு அருகில் அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டன.

## வடமராட்சி கிழக்கு மீனவர் கடலுக்குச் செல்வதற்குத் தடை

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச்செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை ஆகிய கிராமங்களில் உள்ள கடற்றொழிலாளர்களை எந்த நேரத்திலும் கடலுக்குச் செல்லக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனல் கடற்றொழிலையே நம்பியிருக்கும் இப் பகுதி மக்கள் தங்களது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவதற்கு கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சாராயத்தின்...

விருந்து 73 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தென்னம் சாராயத்தின் விலை 78 ரூபாவிலிருந்து 86 ரூபாவாகவும் வி. எஸ். ஓ ஏ. சாராயம் 104 ரூபாவிலிருந்து 116 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரட்டை வடிச்சாராயம் 105 ரூபாவிலிருந்து 118 ரூபாவாகவும், பழைய சாராயம் 93 ரூபாவிலிருந்து 105 ரூபாவாகவும், அதிகரிக்கப்பட்டுள்ளது ஆனல் யாழ்ப்பாணத்தில் இவற்றின் விலை ஒவ்வொருகடையிலும் வெவ்வேறு விதமாக அதிகரித்து விற்கப்படுவதாக மதுப்பிரியர் ஒருவர் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கு..

கரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேற்று முன்தினம் ஜே. வி. பியின் ஊரடங்கினல் நேற்று கொழும்பில் மரக்கறி வகைகளின் விலையும் வீழ்ச்சியடைந்திருந்தன.

உருளைக்கிழங்கு கிலோ இருபத்தியிரண்டு ரூபாவாகவும், கரட் பன்னிரண்டு ரூபாவாகவும் விற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## மழை...

பஸ்ஸின் கண்ணடிகள் பூட்டப்பட முடியாமல் இறுகியுள்ளதாலும் பஸ் வேகமாக ஓடும் போது இவ் வெற்றிடத்தினூடாக தூசிகளுடன் கூடிய வேகமான காற்று பிரயாணிகளை மூச்சுத்திணற வைக்கின்றது. பிரயாணிகள் பயணம் செய்யும் போது இடையில் மழை வந்து விட்டால் பிரயாணிகள் குடை பிடிக்க வேண்டும்.

அத்துடன் பஸ்ஸில் ஏற உதவும் கைப்பிடிகள் முறிந்து, படிகளின் தகரங்களும் கிழிந்து காணப்படுகின்றன.

## இன்று நல்லூர்...

திரு. பொ. பாலசிங்கம் கேட்டுக்கொண்டார்.

இன்று ஆரம்பமாகும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றிய ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே மாநகர ஆணையாளர் தொண்டர் சேவையின் அவசியம் பற்றி வலியுறுத்தினர்.

## பேச்சுவார்த்தை......

தெரிவிக்கின்றன.

இந்தியா தெரிவித்துள்ள யோசனைகளை இலங்கை ஏற்றுக் கொண்டாலே படை விலகும் என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பேச்சுக்கள் தொடரக்கூடிய சுமுகநிலை இனி ஏற்படக்கூடிய சாத்தியமில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

## வடக்கு...

வேண்டிய அவசியம் இல்லை என சம்பந்தப்பட்டவர்கள் கருதுவதனுலேயே பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு தற்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் மத்திய கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## கிளிநொச்சி ..

காரியின் முயற்சியால் மருந்துகளைப் பாதுகாக்கும் குளிர்சாதனப்பெட்டி மண்ணெண்ணெய் மூலம் இயங்கவைக்கப்பட்டுள்ளது.

சிலமாதங்களுக்கு முன்னர் மின்சாரத்தடை ஏற்பட்ட போது பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் பாரிய ஜெனரேட்டர் மூலம் இங்கு மின் வழங்கப்பட்டது. அதனை தற்போது மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.


## காலமானர்கள்

### திருமதி தம்பித்துரை துரையம்மா

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பித்துரையின் மனைவி துரையம்மா, காலமானுர். இவர், செல்வராசா. பூபாலசிங்கம், இரத்தினராஜா (இத்தாலி), இந்திரன், தேம்பாமலர், சின்னக்கிளி, நாகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் தாயாரும் ஆவார் இறுதிக் கிரியைகள் 06 - 08 - 89 (இன்று) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி. ப. 4.00 மணியளவில் அன்னரின் இல்லத்தில் இருந்து கோம்பையன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தம்பித்துரை குடும்பத்தினர்

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை

08096

### சிதம்பரநாதர் இராமலிங்கம்
(இளைப்பாறிய R M. P.)

தம்பளையைச் சேர்ந்த சிதம்பரநாதர் இராமலிங்கம் 05. 08. 1989 இல் சிவபதம் அடைந்தார். இவர் திருமதி மகேஸ்வரி (ஆசிரியை திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் திரு. சித்திராஞ்சன் (பொலிஸ் இன்ஸ்பெக்டர், பெற்ருபொலிஸ்),Dr. சித்திரமோகன் (U.K.) அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி மரீனு (Indian AirLines), Dr. திருமதி சுமித்திரா (U K.) ஆகியோரின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற திரு. இ. சிதம்பரநாதர் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற திருமதி சி. உமையாள்தேவி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், திருமதி கமலாதேவி பரஞ்சோதி, திருமதி விஜயலக்ஷ்மி பாலசிங்கம், திரு. சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் அவரது இல்லமான 12, மவுண்கார்மேல் வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகன கிரியைகளுக்காக பூதவுடல் கண்டிமயானத்திற்கு இன்று பி.ப. 2 30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

12, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி இராமலிங்கம்.
(மனைவி)

08097



## நல்லூரில் சகாய விற்பனை

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந்திருக்கும் "மில்க்வைற்" விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் ரூபா 20/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு காத்திருக்கும் அன்பளிப்புகள்:-

1. அழகிய பொலித்தீன் பை
2. சுவாமி சிவானந்தர் போதனைகள்
3. அகத்திக் கன்று ஒன்று
4 கீரைவிதைப் பைக்கற் ஒன்று
5. கந்தர் அநுபூதி

மில்க்வைற் உற்பத்திப் பொருள்களின் மேலுறைகளைக் கொடுத்து மேற்படி பரிசுப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

08079


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 67ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 06 . 08 . 89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.